எழுத்து

இலக்கிய
காலாண்டு ஏடு

ஏப்ரல்
1969

சங்கு சுப்ரமண்யன்
நினைவு ஏடு

சங்குவின் எழுத்துக்கள்
தொகுப்பு

பாரதியின் அக்கினிக்குஞ்சு
ஆய்வு

புதுக்கவிதையின் உள்ளடக்கம்
விவகாரம்

சில்பியின் நரகமும் அந்திமந்தாரையும்
ஆராய்ச்சி

இலக்கியத்தை பாதிக்கும் சக்திகள்
விளக்கம்

கதைகதையாம் காரணமாம்
பேச்சு சுருக்கம்

இரா. மீனாட்சி, கே. ராஜகோபால் கவிதைகள்

ரூ. 1 25

எழுத்து

இலக்கிய காலாண்டு ஏடு

ஆசிரியர் :

சி. சு. செல்லப்பா

ஏப்ரல்—1969 சித்திரை—சௌம்ய

மறைந்த சங்கு	2	தலையங்கம்
இலக்கிய உலகில்	3	... ...
தமிழ் சிறுகதை	4	சி. சு. செல்லப்பா

சங்குவின் எழுத்துக்கள்

வேதாளம் சொன்ன கதை	9	சங்கு ஸுப்ரஹ்மணியன்
ஒளி மைந்தன்	12	,,
தமிழுக்கு நெருக்கடி	13	,,
மதிற் பூனைகளா ?	15	,,
இலக்கியம்	16	,,
வர்ணனை	17	,,
உவமை அழகு	18	,,
தேசத் தொண்டன் பாட்டு	19	,,
அக்கினிக்குஞ்சு (மறு ஆய்வு)	20	சி. கனகசபாபதி
மூன்று கவிதைகள்	24	இரா. மீனாட்சி
இலக்கியத்தை பாதிக்கும் சக்திகள்	25	வல்லிக்கண்ணன்
மூன்று கவிதைகள்	28	கே. ராஜகோபால்
புதுக்கவிதையில் உள்ளடக்கம்	29	சி. சு. செல்லப்பா
ஆப்பிள்	34	மான்யுல் பண்டிரா
என்னதிது ?	36	ஹரி சீனுவாசன்
கலாசாரம்	36	தி. சோ. வேணுகோபாலன்
காமிரா	36	சி. சு. செல்லப்பா
தீர்ப்பு	37	இர. பன்னீர்செல்வம்
மிருகக்கால்மிதி	37	துரை சீனிசாமி
அனுபவி	37	எஸ். கிருஷ்ணமூர்த்தி
செத்தபன்றி	38	ரிச்சர்ட் எபர்ஹார்ட்
ஆறும் பாம்பும்	38	ஜோர்ஜி டி லிமா
கதைகதையாம் காரணமாம்	39	சு. சங்கரசுப்ரமண்யன்

எழுத்து—பதினோராம் ஆண்டு—ஏப்ரல்—ஏடு 116.

காலாண்டு தோறும் ஜனவரி (தை), ஏப்ரல் (சித்திரை), ஜூலை (ஆடி), அக்டோபர் (ஐப்பசி) மாதங்களில் வெளிவரும்.

ஆபீஸ் : 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

ஆண்டு சந்தா ரூ 5-00; மூன்று ஆண்டுகள் ரூ. 15-00
வெளி நாடுகளுக்கு ரூ 10-00; ,, ரூ. 25-00

வெளியூர் செக்குகளுக்கு 50 பைசா 'கிளியரன்ஸ்' கட்டணம் சேர்த்து அனுப்ப வேண்டும்.
போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம். வி. பி. பி: மூலம் அனுப்பப்படும்.
கதை, கட்டுரை. கவிதைகளுடன் போதிய ஸ்டாம்பு வைக்க வேண்டும்.

மதிப்புரைக்கு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.

தலையங்கம்

மறைந்த சங்கு

சங்கு ஸுப்ரஹ்மணியன் சென்ற பிப்ரவரி மாதம் பதினைந்தாம் தேதி காலமானார், அறுபத்தி நாலாவது வயதில். 1930க்கள் நாட்களில் தேசியத்துக்கும் இலக்கியத்துக்கும், மொழி வளர்ச்சிக்கும் தங்கள் பெரும் பங்கு பணியைச் செய்த, விரல்விட்டு எண்ணக்கூடிய எழுத்தாளர்களில் ஒருவர் அவர். அதிலும் குறிப்பாக மூவரில் ஒருவர். வ. ரா (மணிக்கொடி) டி. எஸ். சொக்கலிங்கம் (காந்தி) இந்த இருவருக்கும் முன்னடியே சுதந்திரச்சங்கு பத்திரிகை ஆரம்பித்து ஆசிரியப்பொறுப்பு ஏற்றிருந்தவர். காலணு, வாரம் மும்முறையாக 1930ல் சுதந்திர தினத்தன்று ஆரம்பித்து 1933ல் அது தற்காலிகமாக நின்றதுவரை உள்ள காலத்தில் சுதந்திரச்சங்கு அன்று நாட்டின் போர்க் குரல்!

அன்னியன் ஆண்ட நாட்களில் தேசீயக் குரல் கொடுத்து மக்களுக்கு எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும் ஒரு வேலை அப்படி ஒன்றும் ரோஜாப்பூ படுக்கை வாழ்வாக இல்லை. அப்படியும் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான பேர்களை கிராமவாசியை மாணவனை, வாழ்க்கையில் வேறு துறைகளில் ஈடுபட்டிருந்தவர்களை எல்லாம் மகாத்மாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச்செய்த தனிப்பெருமை சுதந்திரச்சங்குக்கு உண்டு. அந்த சுதந்திரச்சங்குவில் தன் வேக, சூடான, சாட்டையடியான எழுத்துக்களால் படிப்பவர் மனதை சுண்டிவிட்டவன் சங்கு சுப்ரமண்யன்!

சங்குவின் நடை அலாதியானது. இன்று வரைகூடத்தான். வ. வே. சு. அய்யரின் நடையையும் பாரதியின் நடையையும் தனக்குள் வாங்கி இரண்டின் தன்மைகளும் இழைந்த நடை. சம்ஸ்கிருத சொல் கலப்பால் நடையில் தனித்த கம்பீரம் தொனிக்கும். பொருள் பொதிந்த உணர்ச்சி நெறி ஏற்றும் நடை. தமிழ் வசனத்துக்கு வளம் சேர்த்த நடை!

தேசீயத்தையும் இலக்கியத்தையும், பக்தி மார்க்கத்தையும் பிணைத்த வாழ்வு சங்குவின் வாழ்வு. தேசபக்தனக, பள்ளிநாட்களிலிருந்தே மனம் ஈடுபட்டு, பாரதி, வ. வெ. சு. பாதிப்பு பெற்று, காந்திவழி தேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு தேச பக்தன். சுதந்திரச் சங்குவை பின்னர் வாரப்பத்திரிகையாக நடத்தி இலக்கிய அம்சங்கள் சேர்த்து கதைகள், கட்டுரைகள் பல தான் எழுதியும் பிறரை எழுத வைத்தும் ஒரு இலக்கிய விழிப்புக்கும் காரணமான நல்ல படைப்பாளி. நாட்டு விடுதலைக்குப் பிறகு பக்தி மார்க்கம் தேர்ந்து 'ராதேகிருஷ்ண' என்று சதா மனமும் வாக்கும் ஈடுபட ஆண்டவனை பஜித்து கணக்கில்லாமல் பஜனைகள் செய்து வந்து, இறுதியில் சிவராத்திரி அன்று பஜனை செய்துமுடித்து 'ராதே கிருஷ்ண' என்று தன் சாய்வு நாற்காலியின் சாய்ந்த சில விநாடிகளில் அனாயாச மரணம் அடைந்த தெய்வ பக்தன்!

சங்கு சுப்ரமண்யன் வாழ்வு நிறைவானது. பாரதமாதாவுக்கு முதலில், தமிழ்த் தாய்க்கு அடுத்து, ஆண்டவனுக்கே முடிவில் தன் கடமை, பாசம் பக்தி செலுத்தி சத்தான முழு வாழ்வு வாழ்ந்தவர்!

தினமணி ஆரம்பிக்கவும் அவர்தான் அதன் முதல் ஆசிரியராக இருந்தார் கொஞ்ச நாட்கள் என்பது யாருக்கும் தெரியாது. பிறகு அதுக்குள் நடந்த ஏதோ விஷயங்களால் அவர் படி இறக்கப்பட்டும் அதை பொருட்படுத்தாமல் மூன்று ஆண்டுகள் இருந்துவிட்டு, தினமணி நடையும் தலைப்புகளும் சிறப்பானதாக ஆக தன் பங்கை செலுத்திவிட்டு விலகி, ஹனுமான் வாரப்பத்திரிகை பொறுப்பு கொஞ்ச காலம் ஏற்று, விலகி, பிறகு ஜெமினி கதை இலாகாவில் அதிக நாட்கள் இருந்து விலகி, அப்புறம் இந்த அநுபவங்களால் கசந்து தன் வாழ்வை ஒதுக்கிக் கொண்டு பக்திப்பணியில் ஈடுபட்டவர்.

சுதந்திரச்சங்கு பெயர் தமிழ் சுதந்திரப் போராட்ட சரித்திரத்தில் இடம் பெற்றது. அதோடு சங்குவின் பெயரும். அவரது நடையும், கதைகளும், கட்டுரைகளும், கவிதைகளும், ஆராய்ச்சிகளும் தமிழ் இலக்கிய சரித்திரத்தில் அவருக்கு இடம் ஏற்படுத்திவிட்டன. எனவே சங்கு என்றைக்கும் தமிழ் நாட்டின் மனதில் நிற்கப்போகிறவர். அவருக்கு தமிழகம் வேறொன்றும் செய்ய வேண்டாம். அந்த ஆதர்சத்தை மனதில் வாங்கிக்கொண்டால் போதும்.

எழுத்துவின் ஆசிரியர் சங்கு சுப்ரமண்யன் கைபட்டு எழுத்தாளன் ஆனவன். சுதந்திரச்சங்கு படித்து தேசீய வேகத்தை வளர்த்துக் கொண்டவன். எனவே சங்குக்கு எழுத்து தனித்த அஞ்சலியை செலுத்திக்கொள்கிறது.

சங்குவின் நூற்றுக்கணக்கான பக்கங்கள் வரும் எழுத்துக்களில் புஸ்தகமாக ஒன்றுகூட இதுவரை வரவில்லை. இதெல்லாம் தமிழ் நாட்டில்தான் நடக்க முடியும்! வரும் நல்ல நாளுக்கு எதிர்பார்ப்போம். இருந்தாலும் இந்த ஏட்டில் சங்குவின் எழுத்துக்கள் எத்தகையது என்பதை காட்ட பொறுக்கி தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது. சங்கு வழியில் இன்று இலக்கியம், அரசியல், பத்திரிகை துறைகளில் எழுத்துக்கள் தேவை என்பதை வாசகர் உணர முடியும் இவைகளை படிக்கவும்.

இலக்கிய உலகில்

பவர்

சென்னையில் இப்போதெல்லாம் கொஞ்சம் பொருட்படுத்தி வாசகர்கள் போகக்கூடிய இலக்கியச் கூட்டங்கள் கூடுதலாகவே நடக்கின்றன. சென்ற மாதம் 'பவர்' சார்பில் நடைபெற்ற சிறுகதைபற்றிய நான்கு கூட்டங்கள் குறிப்பிடத் தக்கவை. முதல் கூட்டத்தில் சிறுகதைபற்றி பொதுவாக பி. எஸ். ராமையாவும் 'நடை' பற்றி நா. பார்த்தசாரதியும் 'உள்ளடக்கம்', 'உத்தி' பற்றி சி. சு. செல்லப்பாவும் பேசினார்கள். எழுத்து ஆர்வம் கொண்ட பலர் கலந்துகொண்டு கேள்விகள் கேட்டு விஷயங்களை விளக்கிக் கொண்டார்கள். பிப்ரவரி மாதம் நடைபெற்ற பவர் கூட்டத்தில் அனுபவமுள்ள பத்திரிகையாளரும் சென்னை 'மெயில்' பத்திரிகை துணை ஆசிரியருமான வி. பி. வி. ராஜன் பத்திரிகைத் துறைபற்றியும் தற்கால நாட்டு நிலைபற்றியும் பேசினார். மே மாத பவர் கூட்டங்கள் நாவல் பற்றியதாக இருக்கும்.

எழுத்து அரங்கம்

எழுத்து அரங்கம் சார்பில், சிறந்த தமிழ் உரைநடைக்காரரும், எழுத்தாளரும் தேசபக்தருமான சங்கு சுப்ரமண்யன் மறைவு குறித்து துக்கம் தெரிவித்துக்கொள்ள நடைபெற்ற கூட்டத்தில் பல எழுத்தாளர்கள் கலந்துகொண்டனர். தினமணி உதவி ஆசிரியர் ஏ. ஜி. வெங்கடாச்சாரி தலைமை வகித்துப் பேசினார். மற்றும் தி. ஜ. ர. பி எஸ் ராமையா, நாரணதுரைக் கண்ணன், கு அழகிரிசாமி, மகாதேவன், ஆர். எ. பத்மநாபன், நா. பார்த்தசாரதி, சி. சு. செல்லப்பா ஆகியோர் சங்குபற்றி பேசினார்கள்.

கல்கி எண்டோமெண்ட் சொற்பொழிவு

இந்த ஆண்டு சென்னை பல்கலைகழக கல்கி எண்டோமெண்ட் சொற்பொழிவில் வேதநாயகம் பிள்ளை பற்றி ந. சஞ்சீவி மூன்று நாட்கள் பேசினார். ஆமாம், அவர் பேசினார். தயாரித்திருந்த கட்டுரைகளை தள்ளி வைத்துவிட்டு, அதை படிக்காமல், விரல்களால் பக்கங்களை தள்ளிக்கொண்டுபோய் பேச்சாக பேசிவிட்டார். இந்த மாதிரி இந்த வரிசையில் நடப்பது இது தான் முதல்தடவை. அவர் தயாரித்திருந்த கட்டுரையில் இருக்க முடியாதுபோல் தோன்றிய கருத்துக்களும் பேசப்பட்டமாதிரி இருந்தது. உணர்ச்சிவசப்பட்ட பேச்சு. ஒரு பல்கலைகழக பேச்சு இப்படி இருக்கக்கூடாது. தவிரவும் வேதநாயகம் பிள்ளை பற்றிய பேச்சில் அவர் எதுக்காக புகழ்பெற்று இருக்கிறாரோ அந்த நாவலைப் பற்றிய ஆராய்ச்சியே இல்லை! வேதநாயகம் பிள்ளை பற்றி வாழ்க்கைத் தகவல்கள் தவிர விமர்சன ரீதியாக எதுவும் தெரிந்துகொள்ள முடியாத ஒரு பேச்சுத் தொடர்!

ரசஞ

சென்னையில் உள்ள தெலுங்கு எழுத்தாளர்கள் 'ரசஞ' என்ற அமைப்பு ஏற்படுத்தி மாதம் ஒரு இலக்கியக் கூட்டம் நடத்துகிறார்கள். நாலாவது கூட்டத்தில் சென்ற மாதம் தெலுங்கு இலக்கியம்பற்றி தெலுங்கு விமர்சகர் டி. ஆஞ்சநேயலுவும் கன்னட நாடகம்பற்றி பிரபல கன்னட நாடகாசிரியர் கிரீஷ் கார்னடும் தமிழ் நாவலின் தற்காலபோக்குபற்றி பெ.கோ. சுந்தரராஜனும் (சிட்டி) பேசினார்கள். பெ கோ. சு. வின் பேச்சு ஆராய்ச்சிப்பாங்காக இருந்தது.

கிரியேடிவ் ஃபோரம்

ஓவியர்களும் எழுத்தாளர்களும் கலந்த அமைப்பு கிரியேடிவ்ஃபோரம். இதுக்குபொறுப்பு ஓவியர் தாமோதரன். கலைத்துறை இருசாராருக்கும் இடையே கருத்துப் பரிமாறுதலுக்கான சந்திப்புக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. சமீபத்திய கூட்டத்தில் 'இந்தியன் இமேஜ்' என்பதுபற்றி நடந்தவிவாதம் தரமாக இருந்தது. மலையாள கவியும் விமர்சகருமான எம். கோவிந்தன் கலந்துகொண்டு சிறந்த கருத்துக்களை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

சங்கரராம் விழா

தமிழில் முதல் ஆறேழு நாவல்களில் ஒன்றான 'மண்ணாசை' என்ற நாவலின் ஆசிரியர் சங்கரராம் (டி. எல். நடேசன்). மற்றும் 'காரிய தரிசி' முதலிய நாவல்களும் நிறைய சிறுகதைகளும் எழுதியுள்ள அவரது எழுபத்திஐந்தாவது பிறந்த தினவிழா நடைபெற்றது. கூட்டத்துக்கு கி. சந்திரசேகரன் தலைமைவகித்துப் பேசினார். எ. ஜி. வெங்கடாச்சாரியார், நாரணதுரைக் கண்ணன், சாண்டில்யன், சி. சு. செல்லப்பா ஆகியோரும் சங்கரராமின் இலக்கிய சாதனை பற்றி பேசினார்கள். சங்கரராம் இங்கிலீஷில் நாவல், கதைகள் எழுதி இருப்பவர். 'மண்ணாசை' முதலில் 'லவ் ஆஃப் டஸ்ட்' என்று இங்கிலீஷில்தான் எழுதப்பட்டது.

வாசகர் வட்டம்

சென்னை வாசகர் வட்டம் இலக்கியத்தரமான புத்தகங்களை வெளியிட்டு வருவது தெரிந்ததே. வ. ரா. வாசகம் என்ற வ. ரா. வின் கட்டுரைத் தொகுப்புக்குப்பின் 'அறுசுவை' என்ற குறுநாவல் தொகுப்பு வந்திருக்கிறது. இப்போது காந்தியசகாப்தத்தை களமாகக்கொண்டு 'ஆத்மாவின் ராகங்கள்' என்ற, நா. பார்த்தசாரதியின் நாவல் வெளியாகி இருக்கிறது. இந்த நாவல் தமிழுக்கு புதிசு. நாவல் அமைப்பான உருவம் பெற்று சத்தானதாகவும் இருக்கிறது. தொடர்ந்து வரும் மாதங்களில் ந. பிச்சமூர்த்தியின் மரபு வழிக் கவிதைத் தொகுப்பும், கு. ப. ரா. வின் சிறுகதைகள், முற்றுப் பெறாத நாவல், கவிதைகள் அடங்கிய 'சிறிது வெளிச்சம்' புத்தகமும், 'இதய நாதம்' நாவல் ஆசிரியர் சிதம்பர சுப்ரமண்யன் எழுதியுள்ள 'மண்ணில் தெரியுது வானம்' என்ற காந்தீயக்கால நாவலும் வர இருக்கின்றன. வாசகர்வட்ட புத்தகங்களை வாசகர்கள் கவனித்து வரவேண்டும்.

தமிழ் சிறுகதை 9

சில்பியின் நரகமும் அந்தி மந்தாரையும்

சி. சு. செல்லப்பா

ஸரஸவின் பொம்மை வெளிவந்த முதல் மணிக்கொடி ஏட்டிலேயே 'துன்பக்கேணி' என்ற ஒரு கதையும் வெளிவந்தது. 'நமது தொடர்கதை' என்ற குறிப்பின் கீழ் மூன்று ஏடு களில் பிரசுரிக்கப்பட்டது. சிறுகதைகளுக்கான பத்திரிகையில் 'தொடர்கதை' என்று போட் டிருப்பதை நாம் ஆராய்ந்தோமானால் அதை வெளியிட்டவர்கள் அதை சிறுகதையிலிருந்து வேறுபட்டதாக கருதி இருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. இந்த கதையைப் பற்றி பேராசிரியர் ரா. ஸ்ரீ தேசிகன் எழுதிய ஒரு முகவுரையில் (புதுமைப்பித்தன் கதைகள் தொகுதி) 'துன்பக்கேணி ஒரு குறுநாவல் திட்டத்திற்கு வளர்ந்து போனாலும் அதில் ஒருமை நிற்கிறது' என்று (1940) எழுதி இருக் கிறார். குறுநாவல் என்ற சொல் தொடரை அவர் தான் முதலில் உபயோகித்திருக்கிறார் என்று தோன்றுகிறது, அவர் குறிப்பிட்டபடி துன்பக் கேணி சிறுகதையின் எல்லையை மீறிய படைப்புதான். அதைப் பற்றி விவரமாக ஆராய வேண்டிய அவசியம் இல்லை இங்கு. மணிக் கொடி இரண்டாவது இதழில் 'டாக்டர் சம்பத் என்ற தலைப்பில் சொ. விருத்தாசலம் என்று அவரது இயற் பெயரில் ஒரு துப்பறியும் கதை யும் வெளியானது. அது சாதாரணக் கதை.

இதுக்குப் பிறகு 'ஞானக்குகை' (1935 ஜூலை28) என்ற அவரது கதை வந்தது. இந்த ஞானக்குகை மணிக்கொடிக்கு மட்டும் இல்லை, அப்போதைய சிறுகதைத்துறைக்கேபுதுசுதான். 'வார்த்தைகளை வைத்துக் கொண்டு ஜனங்களை பயம் காட்டுவது ரொம்ப லேசு என்பதைக் கண்டு கொண்டேன்' என்று புதுமைப்பித்தன் ஒரு முகவுரையில் (காஞ்சனை தொகுதி) எழுதி இருப்பது கேலிக்கோ அல்லது பொருள் வைத் துச் சொன்னதோ, அவர் கருத்து நமக்குத் தெரியாது இந்த கதை அந்தவிதமானது. இந்த கதை நடப்பியல் பாங்குக்கு பொருந்தாமல் இருக்கிறது. அமானுஷ்ய சக்திகளின் கலப்பு ஒரு புராணக் கதையம்சத்தை கொடுத்து விடுகிறது. ஒருவேளை இந்தக் கலப்பினால் அதில் ஒரு குறியீட்டான கருவை காண முடிகிறதா என்றால் அதுவும் சாத்தியமாக இல்லை. எப்படி பொருத்திப் பார்த்தாலும் உதைக்கிறது. ஆம் :பிக்யூயிட்டி என்கிறோமே உபாயார்த்தம் தொனித்தால் கதை வெற்றியாகும். ஆனால் தெளிவின்மைதான் இருக்கிறது. 'ஞானக்குகை' என்ற கதைத் தலைப்பை வைத்துக் கொண்டு பார்த்தால் பேச்சும் சபலமும் அஞ்ஞானமும் அழிகிற இடத்தில் ஞானம் பிறக்கிறது என்று பொருள் கொள்வதானால் இருண்ட குகையில் குழந்தை கருகி கரிக்கட்டையாக இருண்ட ஊற்றுச் சுனையில் மிதப்பதான ஒரு படிமப் பிரயோகம் ஞானக்குகை என்ற படிமத்துக்கு முரண்பாடானதாக இருந்து இசைவுக்கு வழி இல்லாமல் போகிறது. இந்த கதை வெளி வந்த மணிக்கொடி 'முதல் அத்தியாயத்தில் ஞானக் குகை ஒரு நுட்பமான கருத்தின் கற்பனைச் சித்திரம். மனிதனது சிந்தனை கற்பனை அசைய ஆரம்பித்தவுடன் அது செயலாகவோ அல்லது பேச்சாகவோ வெளியே இயங்க வேண்டும். அந்த இயக்கத்திற்கு இடம் இல்லாவிட்டால் அதன் பலன் ரொம்ப கோரமாக இருக்கும். என்றகருத்து ஒன்று இருப்பதையும் பார்ப்போம்.

இருளுக்கே ஒரு பிரகாசம் உள்ளது போல் காட்டும் தேவி பிறந்த கோலத்தில் வாலைக் கனிவு குன்றாத கன்னி உருவில் கொடூரமான உயிரைக் கொல்லக்கூடிய ஆனால் உடலில் உணர்ச்சி வேட்கையைப் பெருக்கக்கூடிய புன்னகையுடன் தோன்ற, பையன் (திடீரென்று பையனை குழந்தை என்று மறுபடியும் சொல்லப் படுகிறது) உணர்ச்சி வேட்கை எழ தேவியை கருப்பாயியை கண்டுவிட்ட குழந்தை கருப்பாயி என பேச்சு வந்து உச்சரிக்கவும் ஆயிரம் மின்னல்கள் குழந்தையின் நெஞ்சில் பாய்ந்து குழந்தை கருகிக் கரிக்கட்டையாகி விட்டது என்றால் பேச்சாக வெளியே இயங்குவதுக்கு தடையாய் இல்லை, அந்த இயக்கத்துக்கு இடம் கிடைக்க ஆரம்பிக்கிறது. இந்த சமயத்தில் பலன் கோரமாக இருக்கும் என்பதானது இசைந்ததாகப் படவில்லையே. இந்த கதையை நான் எத்தனையோ தடவைகள் படித்து விட் டேன். ரொம்ப சிறப்பாக அமைந்திருக்க வேண்டிய ஒரு கதை தெளிவின்மையால் குறைப்பட்டிருப்பதாக எனக்குப் படுகிறது. யாராவது இந்த கதை பற்றி தெளிவு படுத்தக் கூடுமானால் நான் கடமைப் படுவேன்.

எனவே இந்த கதையை மணிக்கொடி முத்திரைக் கதையாக புதுமைப்பித்தன் தனி வழி படைப்புக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாமல் போகிறது. அடுத்த மணிக் கொடி கதையான 'சிற்பியின் நரகம்' கதைக்குத்

தான் நாம் போகவேண்டியிருக்கிறது. அதை தொடுமுன் சில தகவல்கள். வ.ரா. மணிக்கொடியில் பொன்னகரம், கவந்தனும், காமனும் ஆண் சிங்கம் போன்ற சிறுகதைகளும் 'ஊழியனி'ல் அகல்யை, தேக்கங் கன்றுகள் தெருவிளக்கு கொடுக்காப்புளி மரம், புதிய ஒளிபோன்ற கதைகளுமாக சுமார் முப்பது கதைகள் எழுதி விட்டுத் தான் சிறுகதை 'மணிக்கொடி'யில் 'துன்பக் கேணி'யுடன் ஆரம்பித்து 'சில்பியின் நரகம்' எழுதுகிறார் புதுமைப்பித்தன். நான் நினைக்கிறேன் சிறுகதை மணிக்கொடிக்கு வருமுன் அதிகம் கதைகளை எழுதி இருப்பவர் புதுமைப்பித்தன் தான் என்று. ராமையா கூட மணிக்கொடி இரண்டாம் இதழில் பூச்சூட்டல் எழுதுமுன் இந்த அளவு கதைகள் எழுதி இருக்கமாட்டார் என்று எனக்கு தோன்றுகிறது.

சில்பியின் நரகம் கதைக்கு முன், புதுமைப் பித்தன் எழுதிய கதைகளை பார்த்தால், அவரது ஆரம்பகால கதைகள் பெரும்பாலும் அடங்கியுள்ள 'புதியஒளி' என்ற சிறுகதைத் தொகுதிக்கு எழுதப்பட்ட பிரசுரகாத்தரின் பதிப்புரையில் காணும், 'தவளைக் குஞ்சு பார்வைக்கு மீன் குஞ்சு போன்றிருந்தாலும் தவளைக்குரிய தன்மைகளை எல்லாம் தன்னுள் அடக்கி இருக்கிறது என்ற உண்மையை இந்நூலில் காணலாம்' என்ற கருத்து முழுக்க ஏற்றுக் கொள்ளும் படியாகவே இருக்கின்றன. புதுமைப்பித்தன் எழுத்துப் பாங்கிலே என்னென்ன சிறப்புகள், தனித்தன்மை பின்னால் எடுப்பாக நாம் பார்க்க முடிந்ததோ அவைகளுக்காக அவர்தடவிப்பார்ப்பதை 'டிரையல் அண்டு எர்ரர்' என்கிறோமே முயற்சி, பரிசோதனை செய்து பிசகு பண்ணித் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஈடுபாட்டை, முனைப்பை பார்க்கிறோம். நெஞ்சறிந்து தீவிர சோதனை செய்த சிலரில் புதுமைப் பித்தன் ஒருவர் என்பது மட்டும் இல்லை, முதலிலேயே அதிகமாகவே செய்தவர் என்பதை அவருடைய ஆரம்பகால கதைகளே நிரூபிக்கும். கதையமைப்பு, அடக்கம், நடை மூன்றிலும். (இவை பற்றி எல்லாம் பின்னால் தனித் தனியாக கதாசிரியர்களை மதிப்பீடு செய்கிறபோது ஆராய உத்தேசம்)

எனவே 'சில்பியின் நரகம்' கதைக்கு வரும் போது தான் புதுமைப்பித்தன் கை திருந்திய கையாக வருவதைப் பார்க்கிறோம். அது ஒரு முழுமையான கலைப்படைப்பாக இருப்பதுடன் உள்ளடக்கம் சம்பந்தமாகவும் இதுவரை குறிப்பிடப்பட்ட கதைகளிலிருந்து மாறுபட்டு தனி விதமானதாக இருப்பதை உணர்கிறோம். இந்த தனிவிதம் என்ன? இதுவரை பார்த்த கதைகளின் கதையம்சம் பற்றி முந்தின ஏட்டில் ஆராய்ந்திருக்கிறேன். சமூக கட்டுதிட்டங்களால் பாதிக்கப்பட்டு தங்கள் சொந்த உறவில் உணர்ச்சி தீவிரம் காரணமாக எழுந்த மோதலில் ஈடுபட்டு போராடி வெற்றியும் தோல்வியும் கண்ட சிலரையும் ஒரு சிறு நுண்மையான சம்பவம் விளைவித்த ஒரு மன நிலை அதிர்ச்சியில் கண நேர கனவிலிருந்து எழுந்ததுபோன்ற ஒரு விழிப்பை உணர்ந்தவர்களையும் பார்த்தோம். அவர்கள் உறவு பாசம், ஆசை, வேட்கை இவைகளால் ஏற்படும் தவிப்பை அடிப்படையாக கொண்டது.

ஆனால் 'சில்பியின் நரகம்' கதை இந்த ரகத்தது இல்லை. ஒரு கலைஞனை, அதிலும் ஒரு சிற்பியை கதாபாத்திரமாகக் கொண்டு, ஒரு சிலையை பொருளாகக் கொண்டு, கலாரசனையா வழிபாடா என்ற கேள்வியை சில்பியின் பார்வையிலே கிளப்பும் ஒரு உள்ளடக்கக் கதைப் படைப்பு இதுதான் தமிழில் முதலாவது என்று நினைக்கிறேன். கதைச் சுருக்கம் இதுதான். தன் வாழ்க்கை லட்சியமாக அழகுப் பொருளாக கூத்தன் சிருஷ்டித்த மகத்தான நடராஜ சிலை, 'எனக்கு மோட்சம், எனக்கு மோட்சம்' என்று குனிந்தபடி தலை வணங்கி சிலையை ஏறிட்டுப் பாராமல் வேண்டிக்கொள்ளப்படும் வழிபாட்டு விக்ரகமாக ஆகிவிட்டதை கனவு நினைப்பில் உணர்ந்தபோது தூக்கி நின்ற அவன் கலைமனம் 'உயிரற்ற மோட்ச சிலையே, நீ உடைந்துபோ' என்று கதறும் அளவுக்கு உடைந்துபோய்விடுகிறது. தன் உத்தேசத்துக்கு மாறுபட்ட மதிப்பு அதுக்கு கொடுக்கப்படுகிறதாக உணர்ந்தபோது. அது துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவே உணர்கிறான். வடிவம் பெற்றுவிட்டதாக அவன் திருப்திப்பட்ட அவன் லட்சியம் அவன் கண்முன் அர்த்தமற்று சிதைந்துபோய்விட்டதை அவனால் சகிக்க முடியவில்லை. அலறி விழிக்கவும் பேய்க் கனவாக அவனுக்கு இந்த நிகழ்ச்சி கசக்கிறது. நிரீஸ்வர வாதமும் உமார் கய்யூம் தத்துவமும் பேசி லோகாயத மனோபாவம் கொண்ட தன் மறைந்த நண்பனைப் பற்றிய அநுதாப நினைப்பில் ஆழ்கிறான் சிற்பி சாத்தான்.

கலைஞனுக்கும் உலக நடப்புக்கும் உள்ள உறவை வைத்து பல கோணங்களில் சித்தரிக்கப் பட்ட கதைகள் உண்டு நடப்பு உலகத்தில் தன்னுடைய தனித்தன்மையை, ஆளுமையை சிதறாமல் காப்பாற்றிக் கொள்ள முடியாமல், தன்னை முழுக்க அழித்துக்கொண்டு கரைந்து போய் பிரிக்கமுடியாதபடி அதில் கலந்துபோய் விடவும் முடியாமல் இந்த இரண்டும் கெட்டான் நிலையில் தவிப்பவன் கலைஞன் இந்த போராட்டத்தில் அவன் படும் அவஸ்தை, சித்திரவதையை நாம் பல கதைகளில் பார்க்கிறோம். பிரபல அமெரிக்க சிறுகதை நாவலாசிரியர் ஹென்றி ஜேம்ஸ்ஸின் சிறுகதை 'புருக்ஸ்மித்' எனக்கு ஞாபகம் வருகிறது. கனவான் வீட்டில் பட்லராக இருந்த கலைமனம் உள்ள அவன்— அந்த சூழ்நிலையில் தன்னை உருவாக்கிக் கொண்டவன்—சூழ்நிலை மாறியதும் தன்னை அதுக்கு இசைவுபடுத்திக் கொள்ள முடியாமல் குழம்பி தன்னை அழித்துக்கொள்கிறான். இது ஒரு கோணம். இப்படி பல இருக்கும்.

புதுமைப்பித்தன் பார்வையில் ஒரு கலைஞனின் புதுவிதமான அவஸ்தையை பார்க்கிறோம். மேல்நாட்டு புருக்ஸ்மித் போல பாரதத்து சாத்தன் தன்னை அழித்துக்கொள்ளவில்லை. ஆனால் தன் ரூப சௌந்தர்யப் பொருள் மனிதனுக்கு தெரிந்ததெல்லாம் தெரிய வேண்டியதெல்லாம் அடங்கி இருப்பதாக அவன் நினைத்த அந்த கூத்து உருவம், 'தெய்வம் ஒன்று உண்டு அதன் அர்த்தத்தை என் சிலை உணர்த்த முடிந்தது' என்று அவன் கருதின ஒரு சாதனைப் படைப்பு ஒரு நாள்—வருஷங்கள் நூற்றாண்டுகள், யுகங்களுக்குப் பின்னாலும் சரி—அதுவே விக்ரகம் ஆகிவிடக்கூடுமோ அதுவே தெய்வத் தன்மை ஏற்றப்பட்டு வழிபாட்டுக்கு உரிய தெய்வச் சிலையாக ஆகிவிடக்கூடுமோ என்ற ஒரு கலக்கம் திடீரென எழ, பதறி பின் சமாளித்து இந்த நினைப்பை ஒரு பேய்க்கனவாக உதறி விடுகிறான். சாத்தான் மனமுறிவு கொள்ளவில்லை. ஆனாலும் எதிர்கால நம்பிக்கையில் தளர்ச்சி கண்டுவிட்டதை கதை முடிவில் உணர்கிறோம்.

இந்த கதையில் வரும் மூன்று பேர்களில் யவனன் பைலார்க்ஸ் தெய்வ நம்பிக்கை இல்லாதவன், லோகாயதவாதி. சன்யாசி, சாத்தனின் சிலையை பார்த்ததும் 'பனித்த சடையும்...' என்று பாடிய பக்திமான். இரண்டும் நேர் எதிர் எதிர் எல்லைக்கோடியில் நிற்பவர்கள். இந்த இரண்டுபேருக்கும் நடுவே சிற்பி கூத்தன். உலகத்தின் அர்த்தத்தை தெய்வத்தின் அர்த்தத்தை உணர்த்த தன் கைகளால் முடியும் ஒரு சிலை மூலம் என்று காட்டிய கலைஞன். முதலாமவனுக்கு அந்த சிலை அரசன் அந்தப்புரத்துக்கான காட்சிப் பொருளாக படுகிறது. இரண்டாமவனுக்கு அரசன் கோயிலுக்கான விக்ரகமாக படுகிறது. மூன்றாமவனுக்கோ அதாவது படைத்தவனுக்கு, அந்த கூத்து உருவத்தின் கால் வளைவு, முகத்தின் சாந்தி, உதட்டின் புன்சிரிப்பு அதன் ஒவ்வொரு வளைவிலும் உள்ள ஜீவத்துடிப்பு இத்யாதிகளை வெளியிடும் ஒரு ஜீவனுள்ள சுந்தர சிருஷ்டியாக படுகிறது. சாத்தன் இருவரது நோக்குகளையும் ஏற்காதவன். தன் படைப்பு பற்றி 'தெய்வச் செயல்' என்று சாத்தன் சொன்னபோது 'உன் சிருஷ்டி சக்தி' என்று பைலார்க்ஸ் சொன்னதும் 'பைலார்க்ஸ் உன் பேச்சு எனது பெருமையை சாந்தி செய்யலாம்' என்று அசட்டை செய்து விடுகிறான். தன் பூர்வஜென்ம பலன் என்று பெரிய சக்தியில் நம்பிக்கை வைத்தவன் ஆகிறான். ஆனால் அதே சமயம் தன் படைப்பு அந்த பெரிய சக்தியாகவே கருதப்படுவதையும் அவன் விரும்பவில்லை. லோகாயத தெய்வீக உலகங்களுக்கு நடுவே தனித்த கலை உலகத்தை அவன் காண்கிறான். அந்த நடுத்துறை தத்துவத்துக்காக நிற்கிறான். பௌதீகத்தை வெறுத்ததுபோலவே வெறும் மதச்சின்னமாவதையும் வெறுத்தான். அந்த அநந்த கோடி வருஷங்களில் ஒரு சாயையாவது அந்த சிலையை ஏறிட்டுப் பார்க்க வேண்டுமே' என்று அவன் அங்கலாய்க்கிறபோது கலை மதச்சடங்குக்கு பலியாகி விட்டதை காட்டுகிறது. கலையை அவன் தெய்வாம்சமாகவே ஆக்க மறுத்து கலையில் தெய்வ அர்த்தத்தை உணர்த்த முடியும் திறனோடு திருப்தி அடைவதில்தான் நம்பிக்கை வைத்திருந்தான்.

இந்தவிதமான பார்வை தமிழ் படைப்புத் துறையில் முதன் முதலாக காட்டப்பட்டதுதான் உள்ளடக்கம் சம்பந்தமாக மற்ற முன்குறிப்பிட்ட சிறுகதைகளிலிருந்து மாறுபட்டுள்ள புதுமையான அம்சம். இந்த சிறுகதை வெளிவந்தபோது ஒருபுதிய அனுபவத்தை வெளியிட்டது. அனுபவத்தை தந்தது இந்தகதை ரொம்ப சிறப்பாக எழுதப்பட்ட கதை. புதுமைப்பித்தன் கதைகளில் மூன்று சிறந்த கதைகள் தேர்ந்தெடுக்கச் சொன்னால் இதைத்தான் நான் முதலில் சொல்வேன். அடுத்து மகாமசானம், கயிற்றரவு. கூட சில சேர்க்கச் சொன்னால் 'நினைவுப்பாதை' 'சாபவிமோசனம்', வாழ்க்கை', 'காலனும் கிழவியும்' இவற்றை சேர்ப்பேன். அது போகட்டும். இந்த கதை கட்டுக்கோப்பில் அப்பழுக்கு சொல்லமுடியாதது. சாத்தனை மனச்சாந்தி குலைய ஒரு கனவு மூலம் அது ஏற்படுவதாக வைத்து உத்தியை கையாண்டிருப்பது கதைக்கு 'ரிமார்க்கபிள்' என்று சொல்லும்படியாக அபூர்வமானதாக இருக்கிறது. இப்படிச் செய்யாமல் அந்த அம்சத்தை நடப்பு கதையாக பின் நிகழ் சம்பவமாக தொடர்ச்சி கொடுத்து எபிசோடிகலாகவும், சீக்வன்ஷியலாகவும் அதாவது அடுத்தடுத்த கட்டத்து கதை சம்பவங்கள், கோர்த்த வரிசைத் தொடராகவும் செய்திருக்க முடியும். கதை கெட்டுப் போயிருக்காது. ஆனாலும் இது விளைவித்த வலுவான பயனை அது தந்திராது கதை இழுபட்டுப் போயிருக்கும், 'டென்ஷன்' என்கிறோமே விடைப்பும் நெகிழ்ந்திருக்கும். இந்த உத்தியால் இவை காப்பாற்றப் பட்டிருப்பது மட்டுமின்றி உக்ரம் அதிகரிக்கச் செய்யப்பட்டிருக்கிறது கதை முடிகிறபோது சுண்டிவிட்ட துடிப்பை நம்முள் உணர்கிறோம்.

இந்த கதையின் நடையும் குறிப்பிடத் தக்கது. 'பவர்ஃபுல்' என்கிறோமே சக்தியான நடை. இதுக்குமுன் நான் குறிப்பிட்டவர்களது நடைகளைவிட—முகத்தில் அடித்தமாதிரி—சொற்கள் பொருளும் உணர்ச்சியும் கலக்க வேகத்தோடு நம்மை தாக்குபவை; நம்மை பாதிப்பவை. அதோடு சரித்திர அம்சம், கலையம்சம் சம்பந்தமான கதைகளில் விழவேண்டிய சொற்கள் பொறுக்கியதாக, செட்டாக விழுந்திருக்கின்றன. (இந்த பாராவில் மேலே குறிப்பிடப்பட்ட நடை அம்சங்கள் கு. ப. ரா. வின் நடையிலும் தூக்கித் தெரியும்.)

இந்த கதையில் குறைகள் ஏதாவது பார்க்க வேண்டும் என்று நானும் துருவித்துருவிப் பார்த்தேன். அகப்படுவது சிரமமாகத்தான் இருக்

கிறது. ஒரு துரும்பு கிடைத்தது. திரை ஒதுக்கப்பட்டதும் மூவரும் சிலையை பார்க்கிறார்கள். அவர்கள் பார்த்தது 'ஒற்றைக் காலைதூக்கி நிற்கும் பாவனையில் ஆள் உயரத்தில் மனித விக்ரகம் என்று வரும் வாக்கியம் தட்டியது. இதுவரை சிலையாகவே சொல்லி வந்திருக்க திடீரென இந்த மனித விக்ரகம் என்ற சொல் நடுவில். பிறகு மறுபடியும் சிலை என்ற வார்த்தையே தொடர்கிறது கடைசிவரையில் 'ஐயோ தெய்வமே உடைய மாட்டாயா' என்று அவன் கனவில் வெறிபிடித்தவனைபோல் கத்துகிற போதும் அதுக்குமுன் 'மோட்சம் மோட்சம்' என்று சாயைகள் போன்ற உருவங்களின் குரல்கள் எழும்பும்போதுதான் அந்த சிலைக்கு விக்ரகம் என்ற அந்தஸ்து ஏற்படுகிறது. எனவே கதை நடுவில் மனித விக்ரகம் என்ற சொல்வருகிற இடத்தில் விக்ரகம் என்ற வார்த்தை சந்தர்ப்பத்துக்கு தேவை இல்லாமலும் அதனால் ஒரு புதுத்தகவல் கிடைத்ததன் பாதிப்பு எதுவும் விளைவிக்க இயலாததாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்று அந்த வார்த்தையே கதை பூராவும் வராமல் இருந்திருக்கவேண்டும். வராமலே இருந்திருந்தால் நல்லது. ஐரானிகலாக ஒருவேளை பயன்படுத்தப்பட்டிருககலாமோ என்று பார்த்தால் அதுக்கும் இடம் இல்லை. அவசியமும் இல்லை. போகட்டும்.

'சில்பியின் நரகம் மணிக்கொடி முத்திரைக் கதைகள் ரகத்தில் ஒன்று. அதன் களமும் கட்டிடமும் புதுசானது. சிறுகதை மணிக்கொடியில் இதுக்குமுன் வெளியான ஸரஸாவின் பொம்மை (சி. சு. செல்லப்பா) எதிர்க்கட்சி (பி. எஸ். ராமையா) தாய் (ந. பிச்சமூர்த்தி) ஆகிய குறிப்பிடத்தக்க கதைகளிலிருந்தும் தோரணையில், தொனியில், பொருளில், நடையில் வேறுபட்டு ஒரு தனித்தன்மையை நிருபித்து நின்றது. அதனால்தான் அன்று இது ரொம்பவும் பேசப்பட்டு வந்தது, 'எதிர்ககட்சி' 'தாய்' போல. இந்த கதை சிறுகதைத் துறைக்கு பங்கு ஃசேர்த்ததை பார்த்துவிட்டு சிறுகதை மணிக்கொடியை புரட்டுகிறபோது அதன் இரண்டாவது இதழில் 'ரப்பர்பந்து' என்ற சிறு கதையை எழுதியுள்ள பெ. கோ. சுந்தரராஜன் நம்மை இழுககிறார். அவர் எழுதிய 'அந்தி மந்தாரை' (15-செப்டம்பர் 1936) என்ற கதை அடுத்த மணிக்கொடி முத்திரைக் கதை.

'அந்தி மந்தாரை' கதைக்குமுன் சிறுகதை 'மணிக்கொடி'யில் பெ. கோ. சுந்தரராஜன் ரப்பர்பந்து, பெண்மையின்பரிவு, ஜான்கி முதலிய ஏழுகதைகளும் அதுக்குமுன் 'கலைமகள்'ல் கௌரவநாசம் முதலிய மூன்று கதைகளும் சுதந்திரச் சங்குவில் 'காணமற்போன கன்று' என்ற கதையும் ஆக பத்துப்பன்னிரண்டு கதைகள் எனக்குத் தெரிய எழுதி இருக்கிறார். இன்னும் சிலவும் இருக்கலாம். அவர் ஏற்கனவே இங்கிலீஷில் கதைகள் எழுதி இருப்பவர். வ. ரா. வோடு மணிக்கொடி ஆரம்பம் முதலே நெருங்கிப் பழகியவர். சிட்டி என்ற புனைபெயரில் ஹாஸ்யக் கட்டுரைகள் தனிச்சிறப்புடன் எழுதியவர். புதுமைப்பித்தன் பெயரை தெரிந்தவர்கள் சொ. விருத்தாசலம் யார் என்று கேட்பதுபோல் சிட்டியை தெரிந்தவர்கள் பெ. கோ. சுந்தரராஜனை அறியமாட்டார்கள். அவருடைய இயற்பெயரில் சிறுகதைகள் எழுதினார். பலருக்கு இன்றுவரைகூட அவர் சிறுகதைகள் எழுதி இருக்கிறார் என்பதே தெரியாது. நல்ல சிறுகதைகள் சில தனித்தன்மையுடன் எழுதிய அவரது பெயர் இன்று எந்த சிறுகதைப் பட்டியலிலும் காணமுடியாது. காரணங்கள் அவர் குறைவாக எப்போதோ எழுதிஇருப்பதும் எழுதியதும் பலருக்கு தெரியாமல் இருப்பதும்.

அந்திமந்தாரைக்கு முன் அவர் எழுதிய கதைகளிலிருந்து புதுமைப்பித்தனைப்போல அவரும் சிறுகதை உருவத்தை வசப்படுத்த செய்த முயற்சிகளை பார்க்கமுடிகிறது. அவரது ஆரம்ப கதை 'கௌரவ நாசம்' (கலைமகள்) உள்ளடக்கத்துக்கு வ. வெ. சு. அய்யரின் குளத்தங்கரை அரசமரம் கதையை நினைவூட்டுகிறது. ஆனால் முடிவு சுபமாக்கப்பட்டிருக்கிறது. அது குறிப்பிடும் படியான கதை இல்லை. 'காணமற்போன கன்று' சாதாரணமானதுதான். ஆனால் சிறுகதை மணிக்கொடியில் வெளியான முதல் கதை 'ரப்பர் பந்து'வில் அவர் கைத்திறன் வளர்வதை பார்க்கிறோம். ராமையா மாதிரி, என் மாதிரி குடும்பத்து சிறுவர் உலகத்தை எடுத்துக்கொண்டு மாமா பெண் அத்தை மகன் உறவுக் கதையாகத்தான் கதை. ஆனால் அந்த இரண்டிலிருந்தும் மாறுபட்டு மலரும் மணமும் போல் தீவிர உணர்ச்சி மோதலுக்கு இடம் ஏற்படவில்லை. ஸரஸாவின் பொம்மை போல ஒரு திடீர் அசிர்ச்சி, விழிப்பு உணர்ச்சி ஏற்பட்டதாகவும் இல்லை. ஜாதகம் பொருந்தாததால் அத்தான் சீனு அம்மங்காள் தாக்ஷாயணி மணம் நடக்க வழி இல்லாமல் போக சகஜமாக எடுத்துக்கொள்ளப்பட்டு மறந்து விடப்படுகிறது. அவர்களது விளையாட்டுத் தோழன் சீனுவுக்கு அவளைத்தர ஜாதகம் பேசப்படுகிறபோது தன் ஜாதகமும் சேராமல் போய்விடுமோ என்ற கலக்கத்தில் நடுங்கி அம்மாவிடம் ஜாதகத்தை கொடுக்க வேண்டாம் என்கிறான் பையன். ஜாதகம் பார்க்காமல் கலியாணத்தை முடிக்கும்படி குறிப்பாக உணர்த்துகிறான். கதை சரியாக அமைந்திருக்கிறது. ஆனால் கதை முடிவில் 'ஆத்திரமுண்டவர்க்கே' என்ற பாரதியாரின் இரண்டு வரிகள் எதுக்காக இருக்கிறது. என்று எனக்கு இன்னமும் புரியவில்லை. அது தேவையே இல்லை.

இந்த கதையை படித்துவிட்டு, மென்மையான உணர்வுகளை உறவுகளை சித்தரிக்கும் 'பெண்மையின் பரிவு' 'ஜானகி' ஆகிய சில கதைகளையும் படிக்கிறபோது மனோதத்துவம் என்பது சிறுகதைக்கு எவ்வளவு அத்யாவச்ய

மான குணம் என்பதையும் அதை கையாளுவதில் எவ்வளவு நுண்மையான சித்தரிப்பு தேவை என்பதையும் கடும் தீவிர உணர்ச்சிகள் மட்டும் இன்றி லேசான உணர்ச்சிகளும் மோதல் விளைவிக்கும் சக்தி வாய்ந்தவை என்பதையும் டிரமாடிக் குவாலிடி என்கிற நாடகத்தன்மை அத்தகைய நிலையிலும் காணக்கூடியது என்பதையும் பார்க்கிறோம். இந்த கதைகளில் அவர் கை இந்தவிதமான சித்தரிப்பில் கவனம் முனைந்து அதை சாதகம் பழகுவதை உணர்கிறோம். 'அந்திமந்தாரை' கதைக்கு வருகிறபோது சிறப்பான சித்தரிப்பை பார்க்கிறோம்.

அந்திமந்தாரை கதைதான் என்ன? கிராமத்தில் அன்னிய புருஷர்களுடன் பேசிப் பழக்கம் இல்லாத பெண் சென்னையில் கணவருடன் குடித்தனம் போட்ட ஒரேவாரத்தில், கணவனை தேடிவந்து விசாரித்த நண்பனிடம் சங்கோசத்தால் பதில் சொல்லாமல் இருந்துவிட அவன் போய்விட, மறந்துவிட்டு கணவனிடம் தாமதமாக தெரிவிக்கவும், அவள் வேண்டுமென்றே செய்ததாக கோபித்துக்கொண்டுவிட அவள் மனம் நொந்து பிறகு சாமர்த்தியத்தால் சமாளித்துவிடவும் அவர்கள் மனஸ்தாபம் தீர்வதுதான் கதையம்சம். உண்மையில் ஸரஸாவின் பொம்மையைவிட இன்னும் குறைவான கதையம்சம். அதில் சிறுவயது முதல் இருந்தே ஏற்பட்ட உறவினால் பல வருஷங்கள் கழித்து நடந்த நிகழ்ச்சியின்போது உண்மைப் போக்கு ரீதியான ஒரு அதிர்ச்சி ஏற்படுகிறது.

நீண்ட கால அளவை வைத்து கதையை நீட்டிச் சொல்லலாம் இந்த கதை நடப்புக் காலம் ஒரு முழுநாள் நேரம்தான். கால அளவில் நேரம் குறைந்து மன ஓட்ட அளவில் பெருக்கம் கொண்டிருப்பது. சங்கோசம் காரணமாக தான் நடந்துகொண்ட விதத்தால் தன் கணவன் விபரீதமாக நினைத்துக் கொண்டுவிட்டதைக் கண்டு மனம் புழுங்கிய காமாக்ஷியின் மனப்போக்கு, மனைவி செய்த தவறால் தன்னை தப்பாக நினைத்துக் கொண்டுவிடப் போகிறானே என்று தவிக்கும் பட்டாபியின் மன உளைச்சல் அந்த சம்பவம் காரணமாக தன் நண்பனுக்கும் தனக்கும் உள்ள நட்பில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருப்பதாக தனக்குள் கேள்வியும் பதிலுமாய் குழம்பிக் கொண்டிருக்கும் சேஷாத்திரியின் மன அவதி மூன்றும் வெகு நுட்பமாக நிகழ்ச்சியின் கனத்துக்கு ஏற்ப அளவமைந்ததாகவும் வீச்சுக்கு ஏற்ப விரிவாகவும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி கதைகளில் 'சென்டிமெண்டாலிட்டி' அதாவது அதீத அசட்டுணர்ச்சி வெளியீடு ஏற்படும் ஆபத்துதான் அதிகம். ஆனால் சுந்தரராஜன் இந்த ஆபத்தை திறமையாக சமாளித்திருக்கிறார்.

இந்த சிறு கதையைப்பற்றி இன்னொரு முக்கியமான விஷயத்தை சொல்லியாகவேண்டும். இது என்ன பெரிய கதை விஷயம், அல்பமான நிகழ்ச்சி, இந்த காலத்துக்கு ரசிக்கும்படியான சத்தான கதையம்சம் இல்லை. என்றெல்லாம் இதுபோன்ற கதைகளைப்பற்றி சொல்லக்கேட்டிருக்கிறேன். அதுக்கு பதிலாக ஸரஸாவின் பொம்மை பற்றி சிதம்பரசுப்ரமண்யன் எழுதியுள்ள, நான் முந்தின கட்டுரையில் மேற்கோள் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை வரிகளை மீண்டும் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்றபடி கலைக்கான விஷயங்களில் அற்பமானது என்று கிடையாது. 'சிறிதைப் பெரிதாக்குவதுதான்' (சிதம்பர சுப்ரமண்யன்) கலையின் வேலை. இன்னும் காலத்தால் இத்தகைய கதைக் கருக்கள் ரசிக்க முடியாதபடி பழசானது என்றும் சொல்ல முடியாது. அந்த நியதியை எந்த ஒரு பழங்காலப் படைப்புக்கும் பொருத்திப் பார்த்து எதையும் தள்ளிவிடலாம். இன்று புதுசு, நாளை பழசாகிவிடும். அப்போது எதுவும் என்றைக்குமானதாக நிலைத்து இருக்க முடியாது. இந்த சிறுகதை எழுதப்பட்ட காலம் முப்பத்துக்கள் காதமத்தி ஆண்டு நாட்கள். அப்போது நிலவிய பழக்க வழக்க, சுபாவ மனப்போராட்ட நிலைகளின் மீதுதான் கலைமனம் அனுபவங்களை கற்பனையில் வர்ணம் கொடுத்து உருவாக்கி வெளியிடும். அத்தகைய அனுபவ வெளியீட்டுக்கு காலப் பழசாதல் கிடையாது. காலப் பழமை மதிப்புதான் ஏறும். ஆக அந்திமந்தாரை போன்ற கதைகளை அதன் கால கட்டத்தில் முதலில் வைத்துப் பார்த்தும், பிறகு அது போன்ற பின் கால கட்டத்து கதைகளை வைத்துப் பார்த்தும் அதுக்கு உரிய இடத்தை ஒதுக்க வேண்டும். கலைத்தன்மை குறைவால்தான் ஒரு படைப்பை உதறிவிட வேண்டுமே தவிர கதைக்கான விஷயம், கதையின் உள்ளடக்கம் காரணமாக உதட்டைப் பிதுக்கிப் பேச முடியாது.

நான் இன்றுவரை ரசிக்கும், அன்று முதல் என் கணிப்பில் இன்று வரை பொருட்படுத்தும்படியானதாக இருக்கும் கதைகளில் அந்திமந்தாரை ஒன்று. உத்திரீதியாக புதுசாக எதுவும் இதில் காணமுடியவில்லை. ஆனால் நேரடியான சொல்முறை வழியில் தடங்கல் எதுவும் காண முடியாத இழை பிசகாத நெசவு இந்த கதை இது மாதிரியான அவரது பின்கதைகளுக்கும் என் கதைகளுக்கும் முன்னோடியாக இருக்கிறது. குறைந்த தொகை சிறுகதைகளை எழுதி இருக்கும் சுந்தரராஜனின் இந்த கதை எண்ணங்களுடன் போராடுதலை சிறப்பாக வெளியிட்டு 'தாழை பூத்தது' என்ற அவரது பிற்காலத்து மற்றொரு சிறந்த சிறுகதைக்கு வகை செய்த கதை. நான் மேலே குறிப்பிட்ட சிறுகதைகளைப் போல இதுவும் தனிவித மணிக்கொடி முத்திரைக் கதை, இதில் தொனித்த ஒரு புதுமையை ரசித்துவிட்டு நகர்ந்தோமானால் மணிக்கொடி மூன்றாவது ஏட்டில் வெளியான 'சிறுகதை' என்ற தலைப்பில் வெளியான சிறுகதையை எழுதிய கு. பா. ராஜகோபாலனை சந்திக்கிறோம்.

'சங்கு'வின் எழுத்துக்கள்

சங்கு சுப்ரமண்யன் பேனாத்திறம் எப்படிப்பட்டது என்பதைக் காட்ட அவர் முப்பதுக்களில் எழுதிய சிறுகதை, கட்டுரை, கவிதை, அரசியல் தலையங்கங்கள், வர்ணனைப் பகுதிகள், உபமானங்கள் இங்கு மாதிரிக்கு தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

சிறுகதை

வேதாளம் சொன்ன கதை

சங்கு சுப்ரஹ்மணியன்

விக்கிரமாதித்தன் கதையில் வேதாளம் ஒன்று வருகிறதே தெரியுமா, அந்த வேதாளம் பல பருவங்கள் கழித்து இன்னமும் ஒருதரம் பாரத நாட்டைப் பார்த்துவிட்டுப் போகலாமென நினைத்து பூலோகத்துக்கு வந்தது. என்ன ஆச்சர்யம்! எல்லாம் புதிதாயிருந்தது பாரத நாட்டில்! குழலும் யாழும் ஒலித்த தேசத்தில் 'ஸிதார்' என்று ஒரு வகை வாத்யமும் கீச்சுப்பீச் சென்று கத்தும்...... என்ற வாத்யமும் ஒலித்துக் கொண்டிருந்தது. காசி, பூரி மதுரை முதலிய க்ஷேத்திரங்களின் கோயில்களுக்கு இணையாக புதுமாதிரியான வேலைப்பாடுகளோடு வெள்ளை வெளேரென்று ஆலயங்கள் தென்பட்டன. அந்த ஆலயங்களில் மண்டியிட்டுக் கடவுள் வணக்கம் செய்து கொண்டிருந்தனர் பலர். மனிதர்களின் நடை பேச்சு எல்லாம் கட்டோடு மாறிப் போயிருந்தது.

பாத்திரக் கடைத் தெருவில் ஸ்திரீகளையே காணவில்லை. பெரிய குடும்ப ஸ்திரீகள் கோஷாக்களென்று வீடுகளை விட்டு நகராமல் இருப்பதாகச் சொன்னார்கள். ஆரத்தீர விசாரித்ததில் பாரத நாட்டில் ஹிந்து சாம்ராஜ்யம் புகைந்து போய் விட்டதென்றும் மொகலாய ஏகாதிபத்யம் தற்போது அமுலில் இருப்பதாகவும் தெரிய வந்தது.

இந்த அல்லோல கல்லோலத்தில் விக்ரமாதித்தனை எங்கே காண்பது? விக்கிரமாதித்தன் ஆண்ட உஜ்ஜயினி நகரம் பாழடைந்து கிடந்தது. அந்தக் காட்சியைக் கண்ட வேதாளம் கொஞ்சம் கண்ணீர் சொட்டிவிட்டு தனது பழைய அன்பனை எங்கேயாவது கண்டு துக்கம் விசாரித்தே தீருவதென நிச்சயம் செய்து கொண்டு புறப்பட்டது. மகா பராக்ரமசாலியான விக்கிரமாதித்தனை யமனும் கொண்டு போயிருக்க மாட்டானென்பது வேதாளத்தின் எண்ணம். கதையை வளர்த்துவானேன். விக்கிரமாதித்தன் விலாசம் தெரியாது வேதாளம் அலைந்தது.

கடைசியாகத் தமிழ் நாட்டில் விழுப்புரத்துக்கடுத்தாற் போல விக்கிரபாண்டி என்ற ஊர் இருப்பதாக வேதாளம் கேள்விப்பட்டது. அந்த ஊரில் ஒருவேளை அந்த அரசன் இருப்பானோவென வெண்ணி வந்து பார்த்தால் அங்கு அவன் இல்லை. வேதாளம் சோர்ந்து போய் அவ்வூரில் ஒரு முருங்க மரத்தில் ஏறிக் குடியிருக்கத் தொடங்கிறது.

பல ஆண்டுகள் சென்றபின் மாங்கொட்டைச் சாமியார் என்று ஓர் மகான் அந்தப் பிரதேசத்தில் சுற்றிக் கொண்டிருந்தார். அவர் மேற்படி வேதாளத்தை சந்தித்து வேதாள பாஷையில் பேசி அதன் கதையை எல்லாம் தெரிந்து கொண்டார். சாமியாருக்கும் வேதாளத்துக்கும் நட்பு அதிகரித்தது. பத்தாயிரம் வருஷங்களுக்கு முன்னே இந்த தேசத்தில் நடந்த கதைகளை சொல்ல வேண்டுமென சாமியார் ஒரு நாள் வேண்டிக் கொண்டார். வேதாளம் பல கதைகள் சொல்லிற்றும். வேதாளம் சாமியாருக்குச் சொல்ல, சாமியார் பண்டாரத்துக்குச் சொல்ல பல காதுகள் மாறி ஒரு வாய் ஒரு பத்திரிகைக்காரனுக்குச் சொல்ல இங்கே முதல் கதைத் தரப்படுகிறது.

உஜ்ஜயினி பட்டணத்தில் ஒதுக்கமாயிருந்த குளத்தருகே ஒரே ஒரு அரசமரம் இருந்தது. வருஷம் ஆக, ஆக, கோடிக்கணக்கில் இலைகள் உதிர உதிர அந்த அரசமரம் கிழப்பருவத்தை யடைந்தது. சக்தி குறையக் குறைய கிழ அரசுக்கு மனச்சஞ்சலம் அதிகரித்தது. ஐயோ, என்றைக்காவது பலமான ஓர் காற்று வீசினால் நான் பூமியில் விழுந்து சாவேனே அவ்வாறு பூமியில் விழாமல் தடுக்க, பக்கத்தில் ஒரு துணையாவது இருக்கலாகாதா பிள்ளையாரப்பா! என்று விக்னேஸ்வரரை நோக்கி முறையிட்டது.

கணபதிராயர் தோன்றினார். ஹே, அரசே! ஏன் பயப்படுகிறாய்! உனக்குத் துணை வேண்டுமானால் அதையடைய ஒரே ஒரு மார்க்கம்

உண்டு. என்னைப் போல நீயும் ஜன்மத்தை இதுவரை வீணாக்கிவிட்டாய். உடனே நீ ஒரு கல்யாணம் செய்து கொள். இந்தத் தளர்ந்த வயதில் பெண்டாட்டியைப் போல யாரும் சிஷ்ருசை செய்ய மாட்டார்கள். வியாதி வந்தால் அருகிலிருந்து உபசரிப்பதற்கும் செத்துப்போனால் தலைமாட்டிலிருந்து அழுவதற்கும் ஒரே ஒரு பெண்டாட்டியில்லாது போனால் அந்த ஜன்மம் என்ன ஜன்மம்? ஆகவே நீ ...

'நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். அவ்வளவு தானே பிரபோ!' என்று வார்த்தையை முடித்தது கிழ அரசு. அரச மரத்திற்கு சபலம் தட்டிற்று. பிரபோ, நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தயார் தான். ஆசையும் ஊறுகிறது. ஆனால் யார் இந்தக் கிழவனுக்கு பெண் தருவார்கள்? எவள் தான் வாழ்க்கைப்படுவாள்?' என்று வருத்தத்தோடு கேட்டது அரசமரம்.

பிள்ளையார் சொன்னார்; அட அசடே, அதற்கு பயப்படாதே. உலகில் கிழவர்கள்தான் பெண்டாட்டிகளிடம் வெகுபிரியமாக இருப்பார்கள். கிழப்புருஷர்கள் வாய்க்க வேண்டும் என்று ஆசைப்படும் பெண்களுமுண்டு. அது தவிர, நீ என்ன அழகில் குறைந்து விட்டாயா? வசந்த காலத்தில் புதுப்புது இலைகள் அணிந்து நீ அழகாக இருக்கும் சமயத்தில் நீ விளம்பரம் போடு. தானாகப் பெண் கிடைத்தே தீரும். உனக்கென்ன கவலை. நான் கல்யாணம் செய்து வைக்கிறேன், என்று அபயம் கூறிவிட்டு சும்மா இருந்த பிரும்மச்சாரிக் கிழவனுக்குக் கல்யாண ஆசையை ஊட்டிய பின் பிள்ளையார் மறைந்தார்.

கிழமரத்துக்கு கல்யாணம் செய்து வைப்பதே அன்றைய தினத்திலிருந்து பிள்ளையாருக்குக் கவலை. பெருச்சாளி தீனி சாப்பிட்டதா இல்லையா என்று கவனிக்கவும் மறந்தார். கொழுக்கட்டையையும் மறந்தார். கல்யாணமே நினைவானார்.

அந்த ஊரிலே தசகோடி தடிராம ஸவுக்கார் என்று ஓர் வணிகன் இருந்தான். ஏழு பெண்டாட்டிகளை அவன் கல்யாணம் செய்து கொண்டிருந்தும் ஒருத்தி வயிற்றிலாவது ஒரு புழுக் கூட வைக்கவில்லை. பாவம்! அத்தனை சொத்துக்கும் ஒரு வார்ஸுதார் இல்லையே என்ற வருத்தத்தால் ஸாவுக்கார் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். ஒரு நாள் ஒரு சொப்பனம். அரச மரத்துக்குக் கல்யாணம் செய்துவை உனது வம்சம் விருத்தியாகும்! என்று யாரோ கனவில் சொன்னார்கள். அவ்வளவு தான் தன்னைப் போல் குடுகுடு கிழமான ஒரு அரசமரத்துக்குக் கல்யாணம் செய்து வைத்தால் கட்டாயம் சந்தான பாக்யம் கிட்டுமென ஸாவுக்கார் எண்ணினார். மறுநாளே குளத்தங்கரையில் ஒதுக்கமாயிருந்த அரசமரத்துக்கு கல்யாணம் என்று தமுக்குப் போடச் சொல்லி விட்டார்.

வேம்பு நல்ல அழகி. அந்த ஜாதியிலேயே அவ்வளவு அழகாக யாரும் இருந்ததில்லை. இன்னும் அவள் பூப்பூக்க வில்லை. ஆயினும் தங்கம் தங்கமான இலைகளையும் செக்கச் சேவேலென்ற கொழுந்துகளையும் அணிந்திருந்த அவள் சூரியன் ஒளியிலும் சந்திரன் நிலவிலும் களித்தாடும் போது வெகு அழகாயிருக்கும். வாய்க்காலருகே வேம்பு வளர்ந்திருந்தாள். அந்த வாய்க்கால்கூட கர்வமடித்துக் கொண்டிருந்தது. ஊரிலிருந்த மனிதப் பையன்களுக்குக் கூட வேம்பு இடத்தில் ஓர் பிரியம். ஒரு பல்லுக்குச்சி கூட அவளிடம் ஒடிக்க மாட்டார்கள். அவ்வளவு இளமை அவளுக்கு. மகா முரடனான மந்திரவாதியும் கூட வேம்பு இலையை நாடிவர மாட்டான். அவளது பசுமை அவனையும் மயக்கிவிடும். அப்பேர்ப்பட்ட அழகுச் சிறுமியின் தலையெழுத்தோ வேறென்னமோ அவளை அந்தப் படுகிழவனான அரசமரத்துக்குக் கட்டி விடுவதென்று தசகோடி தடிராம சவுக்கார் நிச்சயம் செய்து விட்டான். குழந்தை வேம்புவுக்கு என்ன தெரியும், அவள் பாப்பா தானே?

அநியாயம்! வேம்புவை வாய்க்கால் கரையிலிருந்து பெயர்த்த போது அங்கிருந்த மராசிகளெல்லாம் கண்ணீர் விட்டன. மரங்களின் மனத்துயிரை மனிதர்கள் மதிப்பரா? குழந்தை வேம்புவை கொட்டோடும் முழக்கோடும் கொண்டு போனார்கள். அந்தக் கிழ அரச மரத்தருகே கொண்டு போய் நட்டார்கள். மந்திரத்தை தொண தொணவென ஜபித்தார்கள். தாலியும் கட்டப்பட்டுவிட்டது. இவைகளை யெல்லாம் ஏதோ வேடிக்கையென வேம்பு பார்த்துக் கொண்டிருந்தாள். அத்தனை மனிதர்களும் அவளை அங்கேயே நட்டுவிட்டுப் போய் விட்டார்கள். அவளும் அந்தக் கிழ மரமும் தான் பாக்கி அருகே தண்ணீர் குடிக்க அவளது பிரியமான வாய்க்காலைக் காணவில்லை. ஆகவே அவள் வலுவில் அரச மரத்தோடு பேசலுற்றாள். 'தாத்தா தண்ணீர் எங்கே குடிப்பது? வாய்க்கால் இங்கே வருமா?'

கல்யாண சிரமத்திலும் சந்தோஷத்திலும் அயர்ந்து போயிருந்த கிழவனுக்கு வேம்புவின் குரல் குஷால் உண்டாக்கியது. மனைவியிடமிருந்து முதல் முதலாகக் கேட்கும் வார்த்தைகள் யாருக்குத்தான் சுகமாயிருக்காது? கிழப் பிரம்மச்சாரிக்குக் கேட்க வேண்டுமா?

கிழம் சொல்லிற்று, 'ஏன் கண்ணே' இந்தக் குளத்திலேயே நீர் குடிக்கலாம். இன்றைக்கிருந்து நீ பழய வேம்பு அல்ல தெரியுமா?

'என்ன தாத்தா அப்படிச் சொல்கிறீர்கள்?'

'இந்தா, தாத்தா, கீத்தா வென்று நீ என்னைச் சொல்லக் கூடாது - நீ என்ன சொன்னாலென்ன? நீ பேசும் ஒவ்வொரு பேச்சும் எனக்குத் தித்திப்பாய்த்தான் இருக்கிறது.'

'என்ன தாத்தா கேலி செய்கிறீர்கள்? நானாவது தித்திக்கவாவது? நான் வேம்பு தானே?'

'ஊருக்கெல்லாம் நீ வேம்பு. ஆனால் எனக்கு நீ கரும்பு' என்று கூறிக் கிழவன் கீழ்ப்புறத்து கிளையினால் வேம்புவின் தலையைத் தடவினான்'.

தாத்தா, என்னைத் தொடப்படாது, தெரியுமா? வாய்க்காலருகே ஒருவர் கூட என் ஜோலிக்கு வரமாட்டார்கள் தெரியுமா?' என்று கூறினாள் வேம்பு.

அரசமரம் சொன்னதாவது 'வேம்பு, இன்னமும் நீ பாப்பாவாக இருக்கிறாயே. அடி அசடே, நமக்கு கொட்டோடும் முழக்கோடும் பண்ணி வைத்தார்களே, அதற்கு என்ன பெயர் தெரியுமா? இனிமேல் நான் சொல்வதையெல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டும்.' என்று பிரசங்கம் நடந்தது.

'கொட்டோடும் முழக்கோடும் என்ன செய்தார்கள் தாத்தா? அதற்குப் பெயர் என்ன?'

'அதற்கு கல்யாணம் என்று பெயர் கல்யாணம் என்றால் இனிமேல் நீ இங்கேயே என்னோடேயே இருக்கவேணும். நான்தான் உனக்கு புருஷன். நீ எனக்குப் பெண்டாட்டி மனித ஜாதியில் உள்ள இந்த அழகான வழக்கம் மரச்சாதியில் நமக்கு மட்டும் தானுண்டு. ஆலமரத்துக்குக் கிடையாது அத்தி மரத்துக்கும் இல்லை...!' என்று என்னென்னமோ அடுக்கிப் பேசிக் கொண்டிருந்தது அரசமரம்.

வேம்புக்கு தூக்கி வாரிப் போட்டது போலிருந்தது. கனவும் நனவும் கலந்த நிலை போல அவள் முணுமுணுத்தாள்.

'கல்யாணம் - கல்யாணமாம் கல்யாணம் இனிமேல் நான் இங்கேயே இந்தக் கிழவனுடன் இருக்க வேணும். இந்தக் கிழவனோடே அப்படியா, அது - வேடிக்கையான வழக்கம் - ஏன் தாத்தா நீங்க செத்துப் போனாக் கூட நான் இங்கேயே இருக்கணுமோ?' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

சாவு என்றவுடன் கிழவனுக்கு திடுக்கிட்டது. 'சீ எருக்கஞ் செடியே! கல்யாண தினத்திலே என்ன பேச்சு பேசுகிறாய்? புல்லுளிக் கொத்தே! உன்வாயை அடக்கியாள வேண்டும்' என்றது கிழம்.

வேம்புவுக்கு மனது பிளந்து விட்டது. இந்தக் கிழவனோடு வாழவா - மாட்டவே மாட்டேன் - பச்சைக் குழந்தை என்னை எருக்கஞ் செடி என்றும் புல்லுளி என்றும் திட்டுகிறானே - இவனோடு இனிமேல் பேசவே கூடாது என்று உறுதி கொண்டு விட்டாள்.

அன்றைக்கிருந்து வேம்புவின் அழகு தேயத் தொடங்கிற்று. கிழவனை அவள் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. அவன் என்ன பேசினாலும் கேட்பதில்லை. பசேலென்றும் செவேலென்றும் இருந்த அவளது பட்டாடைகள் கருகத் தொடங்கின. தன்னை அழகு செய்து கொள்ள வேம்பு விரும்பவில்லை. ஆனால் இயற்கை சும்மா இருக்குமா? ஒரு மாதத்தில் அவள் உடம்பில் சின்னச் சின்ன புஷ்பங்கள் அரும்பின. அழகாயிருக்க, முறுவல் காட்டுவது போலிருக்க, வேம்பு விரும்பவில்லை. புஷ்பங்களை எல்லாம் உலுக்கி உதிர்த்து விட்டாள். எப்படியாவது இந்தக் கிழவனை விட்டு விலக வேண்டுமென்பது அவள் ஒரே எண்ணம். ஒருவேளை கிழவன் காற்றில் விழுந்து செத்துப் போனால் தன்னை வாய்க்காலருகே கொண்டு போய் விட்டு விடுவார்களோ வென்று அவள் நினைத்தாள். பெருங் காற்று வரவேண்டும் வரவேண்டும் என்று தியானம் செய்து கொண்டிருந்தாள்.

சாவுக்கு சதா பயந்து கொண்டே இருந்த அரச மரத்துக்கு ஆபத்து நாளும் வந்துவிட்டது. ஒரு நாள் பெரிய சூறை. பெரிய பெரிய மரங்கள் எல்லாம் திமுதிமுவென விழும்போது இந்தக் கிழப்பயல் எம்மாத்திரம்! தடாலென்று விழுந்து விட்டான். விழித்துப் பார்த்த வேம்புவுக்கு கிழவன் விழுந்தது குதூகலமாயிருந்தது. வெறிபிடித்தவள் போல ஆராவாரத்தோடு அவள் ஆடிக் கொண்டிருந்தாள். ஆனால் பாவம், தன்னந் தனியாக அந்தக் குளத்தங் கரையிலேயே வெகு வருஷ காலம் வேம்பு ஜீவித்திருந்தாள். வாய்க்கால்கரைக்கு யாராவது எடுத்துச் செல்வார்களா என்பதே அவள் ஆசையாயிருந்தது. அவள் ஆசையைக் கேட்பதற்கு யார்?

இப்படியாக வேதாளம் உருக்கமாக வேம்புவின் கதையை மாங்கொட்டைச் சாமியாருக்குச் சொன்ன பின்பு 'வேம்புவே என்னிடம் இந்தக் கதையைச் சொன்னாள். அவளுக்கருகே முருங்க மரத்தில் நானிருந்தேன். உஜ்ஜயினியில் வேம்பு இப்போது இருக்கிறாளோ இல்லையோ!' என்று கூறிப் பெருமூச்சு விட்டது.

இருட்டிவிடவே சாமியார் வேதாளத்திடம் விடை பெற்றுக் கொண்டு வேம்புவைப் பற்றியே நினைத்துக் கொண்டு குடிசையை நோக்கி நடந்தார்.

[இந்த கதை சிறுகதை மணிக்கொடி முதல் இதழில் வெளிவந்தது 31-3-1935. 'இரண்டு மரங்களுக்கு உயிர் கொடுத்து அங்கு அதிநுட்பமான மனித உணர்ச்சிகளை கொட்டப்படும் அந்தக்கதை ரொம்பநன்றாக இருக்கிறது, என்று சொன்னால் போதாது' என்று அதுபற்றி பாராட்டப்பட்டிருந்தது.]

கட்டுரை

ஒளிமைந்தன்.

சங்கு ஸுப்ரஹ்மணியன்

அவனுக்கு ஒளி தோன்றி விட்டது. ஓடியொளிய அவன் விரும்பவில்லை. உலகோடு கூடிக் குலாவுவதற்கும் தான் கண்ட ஒளியின் உண்மைகளைப் பறையடிப்பதற்கும் அவன் ஆசைப்பட்டான். ஓடோடியும் வந்தான். புதிய ஆளென்றால் கூட்டம் சேர்வதற் கென்ன பஞ்சமா? சேர்ந்தார்கள். அவனுடைய பேச்சைச் சில நிமிடங்கள்வரை அமைதியாகக் கேட்டார்கள்.

'உலகில் சகதியும் சேறும் அதிகமாகி விட்டதே. இந்தச் சகதியை இறுகச் செய்து கல்லாக்கி மாளிகைகளாகக் கட்டிப் போடுவோம். மனித வாழ்வு எப்போதும் போர்க்களமாக இருக்க வேண்டுமா? அதை அன்பென்னும். இன்பத் தோட்டமாக ஆக்கிடுவோம். தோழர்களே, செடியின் முக்கியமான பாகம் முள் அன்று. அதன் நடுவே செக்கச் செவேலென்று இருக்கும் ரோஜாவைத் தான் நாம் கவனிக்க வேண்டும். அது காட்சிக்கு அழகு. கருத்துக்கு நறுமணம்!' என்று கவிதையும் ஞானமும் கலந்து சொரிய ஆரம்பித்தான்.

ஆனால் இந்தப் பேச்சு மார்க்கெட்டில் எடுபடக்கூடியதா? அநேகருக்கு ஒன்றுமே விளங்க வில்லை. கூட்டத்தில் ஒரே ஒருவன் மட்டும்தான் தனக்கு ஏதோ புரிந்ததாக தலையசைத்துக் கொண்டிருந்தான். நடுவில் அவன் எழுந்து பிரசங்கியிடம் கூறினான்.

'ஐயா, என்ன அழகாகப் பேசுகிறீர்கள்? என்ன உபமானங்கள்! என்ன ஜோடிப்பு! ஆனால் இத்தனை பேச்சும் இந்தக் காலத்தவருக்கு உபயோகமில்லையே இன்னும் நூறு வருஷத்திற்கு அப்பால் பிறந்திருந்தால் உங்களை எவ்வளவோ கொண்டாடும். என்ன செய்ய? ஹூம், அவசரப்பட்டு பிறந்த மகான்களில் நீரும் ஒருவர்', என்று கூறினான். அங்கிருந்த சபையின் சிரத்தையும் அந்த ஒரு மனிதனின் சொற்களும் பிரசங்கியின் மனத்தைத் தைத்தன. அவன் எங்கேயோ ஓடி ஒளிந்தான்.

சோம்பலில் முழுகிக் கொண்டிருக்கும் உலகுக்கு உணர்ச்சி ஊட்டுவதில் தப்பு உண்டா என்று அவன் சோதனை செய்து பார்த்தான். சரி, இனி உலகுக்குச் சொல்ல வேண்டியவைகளை மாற்றிச் சொல்லிப் பார்ப்பதென்று முடிவு செய்து கொண்டான். கண்ட கனவுகளை எல்லாம் மீண்டும் மனதில் நெய்து கொண்டு திரும்பி வந்தான். 'தற்காலத்தின் புதல்வன் நான்' என்பதை நிரூபிக்க அவனுக்கு ஆசை. ஆகவே புதிய ஆதர்சத்தை அவன் ஏந்திக் கொண்டு கூட்டத்தை நோக்கி ஓடி வந்தான். இப்போதும் முன்னைப் போலவே கவிதையும் ஞானமும் கலந்து பேசினான். வார்த்தைகள் எல்லாம் புத்தப் புதுசாயிருந்தன.

ஊருக்குப் புதிதாய் வந்திருந்த அவன் ஸ்வரூபத்துக்குச் சிறிது நேரம் தான் கூட்டத்தினர் மதிப்புத் தந்தனர். அவன் பேச்சு அவர்களுக்குப் புரியவேயில்லை. ஆனால் அக்கூட்டத்திலும் ஒரே ஒருவன் மட்டும் விஷயத்தை அறிந்து கொண்டதாகத் தலையை அசைத்துக் கொண்டிருந்தான். அவன் பிரசங்கியை நோக்கிக் கூறினான்.

ஐயா, என்ன மேன்மையான கருத்துக்கள்! என்ன உபமேயங்கள்! என்ன கோர்வை! ஆனால் இத்தனை பேச்சும் இந்தக் காலத்துக்கு உபயோகமில்லை. ஐயா. நீங்கள் நூறு வருஷத்திற்கு முன்னே பிறந்திருக்க வேண்டும். அந்தக் காலத்து மனிதர்கள் நல்லவர்களாயும் யோக்கியர்களாயும் இருந்தார்கள். உங்கள் அழகான பேச்சை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள், நீங்கள் நூறு வருஷம் லேட். இந்தக் காலத்தில் வந்து பிறந்தீர்களே! என்றான் அவன்.

அந்த ஆதர்ச புருஷன் என்ன செய்வான் பாவம்! முன்னே நூறு வருடம் பின்னே நூறு வருடம்! இந்த இருநூறு வருஷத்திற்கு நடுவே எக்கச்சக்கமாக தான் அகப்பட்டுக் கொண்டு தத்தளிப்பது போலவே அவனுக்குப் பட்டது. அவன் ஒளி மைந்தன். அவன் ஒளியைப் பரப்ப முயன்றால் அக் காந்தியை உணர உலகம் முற்படமாட்டேன் என மறுக்கிறது. புரிந்தவர் போலப் பேசுபவர்களும் நூறு வருஷங்களுக்கு அப்பாலோ இப்பாலோ அந்த மகானைத் தள்ளி வைத்துப் பேசுகிறார்கள். கவி, ஞானி சத்திய தூதன் இவர்களுடைய வாழ்க்கை எப்பொழுதும் இப்படித்தான் இருக்க வேண்டுமா? எங்கேயோ படித்த உதாரண ஞானியைப் பற்றி சொல்லியாகிவிட்டது. தோலும் எலும்புமாய் நம் கண்ணுக்கு முன் உள்ளவரைப் பார்ப்போமா?

'இவ்வுலகில் எல்லோரும் சமமாக வாழ்வோம். பிரிவினைகள் வேண்டாம். நிறத்

திமிரை தகர்த்தெறியுங்கள். ஜாதிக் கொடுமைகள் வேண்டாம்' என்றார் காந்தி.

'விஷயம் நல்லதுதான். ஆனால் இது நூறு வருஷங்களுக்கு அப்புறம்தான் சாத்தியம். தற்காலத்தில் திமிராவது போகவாவது. ஜாதியாவது, சமத்வமாவது? காலத்திற்கு ஏற்றது அன்று' என்கிறான் விஷயம் அறிந்தவன் போல் அபிநயிக்கும் ஒருவன். காந்தி கொஞ்ச காலம் மறைகிறார். தீர்க்காலோசனை செய்து தமது எண்ணங்களுக்குப் புது மெருகு கொடுத்துக் கொண்டு மீண்டும் வந்து நிற்கிறார்.

'நாமனைவரும் ஒரே அப்பனின் பிள்ளைகள் அந்த அப்பனே கடவுள்; நமக்குள் இத்தனை பிரிவு இருக்கலாமா?' என்று கூறுகிறார்.

கடவுளா? இந்தக் காலத்தில் தெய்வப் பேச்சு எடுபடுமா?' நூறு வருஷத்திற்கு முன்னே இவர் பிறந்திருக்க வேண்டும். அப்போதெல்லாம் தெய்வ பக்தர்கள் இருந்தனர். இனிமேல் நாஸ்தீகம் தான் எடுபடும் என்கிறான் விஷயம் அறிந்தவனெனத் தலையசைக்கும் வேறொருவன். இத்தகைய அபிப்பிராயங்களுக்கும் நற்சாட்சி பத்திரங்களுக்கும் ஆசைப்படாத ஒளிமைந்தர்கள் வந்து நிற்கின்றார்கள்! என்ன பேதமை!

ஞானியும் கவியும் காலம் பெற்றெடுத்துத் தரும் தவப்புதல்வர்கள். ஆனால் அந்தப் புதல்வர்களை முற்றிலும் அறிந்து கொள்ள உலகம் அசிரத்தை காட்டுகின்றது. ஆனால் சோர்வு வீழ்ச்சிகளைப் பற்றி கருதாதவர்களே ஞானியும் கவியும் இரு அம்சமும் கலந்துள்ள காந்தியும்!

(சுதந்திரச் சங்கு 20-4-1934)

ஹாஸ்யம்

தமிழுக்கு நெருக்கடி

தமிழ் ஏதோ குழியில் புதைபட்டுக் கிடக்கிறதாம். அதை அங்கிருந்து கிளப்பி மேலே பறக்க விட்டு விடுவதென பலமான யோசனைகள் செய்யப்படுகின்றன. தெற்கே ஒரு நகரத்தில் பெயர் சொல்லக் கூடாது—இந்தக் காரியத்துக்காகப் பல திறப்பட்ட அபிப்ராயமுடைய பெரியோர்கள் கூடி பின்வருமாறு வாக்குவாதம் செய்தார்களாம். பெரியார் பெயர்களும் பேச்சுகளும் பின்வருமாறு:—

உருளைக்கைக்கிழார் (சக்கரபாணி பாகவதர் என்ற தமது தொட்டிற் பெயரை தனித் தமிழில் வைத்துக் கொண்டிருப்பவர்) கூறியது: உயர்ந்த இருக்கையிலிருப்பவரே! தோழர்களே! ஆரிய பாடையையும் ஆங்கில பாடையையும் கலந்து நந் தமிழைப் பாழாக்குவதென் கொலோ! தமிழுக்கு அழகு தன்மை. இவண் குழுமியுள்ள சீரியரனைவரும் என்றைக்குத் தனித் தமிழை ஓம்புகின்றனரோ அன்றே நம் மொழி செம்மையுறும்.

மொழி பெயர்ப்பு முத்தண்ணா (பத்திரிகைத் தொழிலில் அடிபட்டவர்) உலகில் இன்று சிறந்த பாஷை என இருப்பது ஆங்கிலம். ஆங்கில மொழியில் உள்ள ஏராளமான பதங்களுக்குச் சரியான பதங்கள் தமிழிலே கிடைப்பதில்லை. உதாரணமாக இன்பம் என்ற பதத்திற்கு merry, sunny, cheery, jolly, gay என்ற அநேக ஆங்கிலப் பதங்களுண்டு. ஒவ்வொன்றுக்கும் அர்த்த நிழல் (shades of meaning) வேறு. ஆகவே என்றைக்கு நாம் ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ் பதங்களைச் சிருஷ்டிக்கிறோமோ அப்போதுதான் தமிழ் உருப்படும்.

டாக்டர் வி. ஜி. பால் (கோபால் என்ற பெயரைச் சுருக்கிக் கொண்டவர். ஹிட்லர் மீசை உடையவர்) நியூ வர்ட்ஸை கிரியேட் பண்ணுவதை விட சில வர்ட்ஸை அப்படியே யூஸ் பண்ணலாம் என்பது என் அபிப்ராயம். கொஞ்சம் ஸயன்ஸ் பேசறேன் கேளுங்கள். ஜிங்கை டெஸ்ட் டியூபில் வைத்து ஹைட்ரோகுளோரிக் ஆஸிட்டை ஊற்றினால் ஜிங்க் க்ளோரைட் பாரம் ஆகி ஹைட்ரஜன் காஸ் வெளிவருகிறது. இதில் இங்குள்ளவர்க்கு அண்டர்ஸ்டாண்டு ஆகாமல் இருக்கிறதா?

கம்பரடியார் (இலக்கியத்துக்கு இலக்கணம் கவிதைதான் எனக் கருதுபவர்) அட, அநியாயமே! இந்த மாதிரி பாஷையை கம்பனோ புகழேந்தியோ வந்து கேட்டார்களானால் அவர்கள் மனது என்ன பாடுபடும்? விஞ்ஞானச் பேச்சு மேனாட்டு சனியன். நமதுமொழிக்கு அது அலங்காரமாகாது. கம்ப ராமாயணத்தில் விஞ்ஞான சாஸ்திரமில்லையா? ஆகாய விமானமில்லையா? நான் சொல்கிறேன். எல்லாம் கம்பராமாயணத்தில் உண்டு. நாம் ஆராய்ச்சி செய்து தேட வேண்டும். கம்பராமாயணத்தை முணு முணுத்துக் கொண்டே கொத்தன் வீடு கட்ட வேண்டும். சட்ட சபையில் கம்பராமாயணப் பாட்டுப் பாடியே இராஜீயப் பிரசங்கம் செய்ய வேண்டும். பாலர் வகுப்பு படிக்கும் குழந்தை முதல் பி ஏ-க்கு பத்து தடவை போகும் கிழவர் வரை கம்பனைக் கற்றறிவார்களானால் தமிழ் தானே வளர்ச்சியுற்று விடும். ஒரு காலத்தில் ஆரியம் கலக்கவே தமிழ் குறுகிற்று. இப்போது ஆங்கிலத்தையும் கலப்பதா?

மகாமகா வித்வான் மிருத்யுஞ்ச ஜடாவல்லபர்: 'திராவிடமும்·ஸமுஸ்கிருதமும் ஜனித்த

தாக சாஸ்திரம். அந்த பாஷைகளுக்குள் விரோதம் சிருஷ்டிப்பது கல்மஷம். திராவிடத்தையும் ஸமுஸ்கிருதத்தையும் மிசிரம் செய்து மணிப்ரவாள பாஷையில் செய்யப்பட்ட பிரபந்தங்கள் வியாக்யானங்கள் சிரேஷ்டமானவை யல்லவா? யாராவது ஸமுஸ்கிருதத்தை தூஷித்தால் அந்தப் பிரசங்கத்தை அக்ராசனர் சிலாகிக்கலாகாது.

கச்சிப் புலவர்: 'பள்ளியில் படிக்கும் மாணவன் நிகண்டையும் நன்னூலையும் கைவிட்டதின்றுதான் இத்துணைத் துயரங்கள் தோன்றியுள. இலக்கண வரம்பை மீறி கன்னுப்பின்னு வென்று எழுதுவதைத் தமிழுக்கு அழகெனக் கூறும் காலம் வந்து விட்டது. ஆகவே மீண்டும் மக்களுக்கு இலக்கணம் சொல்லித் தருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

விகடப்பத்திராதிபர்: இலக்கணம் சொல்லித் தரும் வேலையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். தமிழுக்கு உயிரும் தெரியாது உடலும் தெரியாது, மெய்யும் தெரியாது பொய்யும் தெரியாது மறந்து போன வேளையில் நிகண்டும் அகராதியும் மறைந்து போன சமயத்தில், உயிரெழுத்தென்ன, மெய்யெழுத்தென்ன, இன்னும் பல வார்த்தைகளையும் நாங்கள் சொல்லித்தந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் வார்த்தைப் போட்டிப் பந்தயங்களை நடத்தினால் தமிழ் இலக்கணம் தண்ணிபட்ட பாடாகும் என்பது என் அபிப்ராயம். எளிய நடையில் நகைச்சுவை சிரிப்பாய்ச் சிரிக்கின்ற ஏராளமான பத்திரிகைகளும் இந்த நாட்டில் ஏற்பட்டால் தமிழ் நல்ல கதியை யடைந்து விடும்!

ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்: 'சின்னப் பையன்களோடு மாரடித்துக் கொள்ளும் நான் தான் இங்கு முக்கியமானவனென நினைக்கிறேன். தமிழில் எழுத்துக்களோ ஏராளமாயிருக்கின்றன. ணை, லை, ரு போன்ற எக்கச்சக்கமான எழுத்துக்கள் பையன்கள் மண்டையில் ஏறுவதில்லை. பழய எழுத்து ஏற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டும். கானு, காவன்னு, கீனு, கீயன்னு என்று ஆதிகாலத்திலிருந்து சொல்லிக் கொடுத்து வருவது தப்பிதம். குழந்தைகளுக்கு வன்னு, யன்னு, இவை புரிவதில்லை க், ச், ங் என்று உச்சரிப்பைச் சொல்லித்தர வேண்டும். தமிழ் உபாத்தியாயர் சிலருக்கு 'வாழைப் பழம்' வாயில் நுழைவதில்லை. வாளைப் பளம், வாயப்பயம் என்று பலவிதமாய்ச் சொல்கின்றனர். தமிழ் மொழியின் அழகு 'ழ' வன்றோ! உச்சரிப்பிலேயே மேன்மையைக் காட்ட விரும்பும் பதங்களில் 'ழ'வை உபயோகிப்பது மரபு. அழகு, குழகு, செழுமை, தழுவி எல்லாம் என்ன மென்மையான சொற்கள் பாருங்கள்.

மாஜி தந்தி குமாஸ்தா: நான் இவரை எதிர்க்கின்றேன். அழுகை, கழுதை, பழுது இப்பேர்ப்பட்ட அசிங்கமான பதங்களும் 'ழ'வில் ஆரம்பிக்கவில்லையா? இந்த 'ழ' தமிழ் வளர்ச்சிக்கே பெரிய தொந்திரவாயுள்ளது. கம்பாஸிட்டர் தொழிலுக்கும் தந்திச் செய்தி அனுப்புவதற்கும் டைப்ரைட்டிங் மெஷினில் வேலை செய்வதற்கும் சௌகரியமாகத் தமிழை ஆக்கிக் கொள்ள வேண்டும். தமிழ் எழுத்துக்களையே ஒழித்து விட்டு ரோமன்லிபியை உபயோகிப்பதே உசிதமானது. உலகில் பரவி இருப்பது அந்த லிபிதான். அரேபிய பாஷை கூட அந்த லிபியில் எழுதப்படுகிறதாம். உதாரணமாக, ஒரு ஆங்கிலேயர் தமிழ்ச் சங்கீதம் கற்றுக் கொள்ள இஷ்டப்பட்டால் அவருக்கு எப்படிச் சொல்லித் தருவது?

பத்திரிகை நிருபர்: 'எப்படிச் சொல்லித் தருவது தெரியுமா? கரும்பலகையில் எழுதுகிறேன் பாருங்கள்.

'ANDAM MIGUNDA MUGANDAN MARUGANE VA VA NEE VA VA NEE VA VA' ரொம்ப ரசமாயிருக்கிறதல்லவா? எத்தனை குண்டங்கள் இதில் வருகிறார்கள் தெரியுமா? தமிழ் தமிழாகவே இருக்க வேண்டும். ஆங்கிலம் ஆங்கிலமாகவே இருக்க வேண்டு மென்பது எனது அபிப்ராயம். உதாரணமாக நான் ஒரு ஹாக்கி விளையாட்டைப் பத்திரிகைக்கு ரிபோர்ட் செய்வதாக நினைத்துக் கொள்ளுங்கள். 'வளைந்த துடுப்பு' (Hockey) விளையாட்டில் செவ்வரிச் சட்டை அணிந்தோர் சிறப்பாக ஆடினர். அரைப்பக்கம் (Half Side) செய்யவே இல்லை. முழுமுதுகாயிருந்தவர் (Full Back) ஏறிச் சென்று எல்லை (Goal) அடிக்கும் போது மத்யஸ்தர் 'தடி, தடி' (Stick Stick) என்று கூவினர்.

இவ்வாறு பலபேர் பேசிய பின்பு எல்லாருக்கும் கடைசியில் தமிழனை உயர்த்தினாலன்றி தமிழ் உயராது என்ற ராஜீயவாதியையும் தமிழ்ப் புஸ்தகங்கள் விற்றாலன்றி வழியில்லை என்று பேசிய புத்தக வியாபாரியையும் எவரும் பொருட்படுத்தவில்லையாம். முடிவில் மேற்படி கூட்டத்தினர் 'ஏகமனதாக' தீர்மானம் எதுவும் செய்ய வில்லையாம். மகா நாடுகளுக்கு அழகே அதுதானே! அவரவர் அவர்களுக்குத் தெரிந்த அந்தந்த வழிகளில் தமிழை உயர்த்த வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது என்ற தீர்மானத்தைப் பெரும்பாலான ஓட்டுகளால் திருத்தப் பிரேரேபணையின்றி நிறைவேற்றினராம் 'கேளுங்கள்! கேளுங்கள்! என்ற குரல் வானைப் பிளந்ததாம். தமிழ் நெருக்கடி தீர்ந்ததல்லவா?

[சுதந்திரச்சங்கு வாரப்பதிப்பு இரண்டாவது ஏட்டில் 1-12-33ல் குறும்பன் என்ற புனைபெயரில் எழுதப்பட்டது.]

மதிற் பூனைகளா?

ஓர் புறத்தில் தியாக அக்னி; மற்ருெரு புறத்தில் சுய நலவாழ்வு. இடையிலுள்ள வரம் பின் மீது தமிழர் உட்கார்ந்து கொண்டு ஆலோசிக்கின்றனர். இந்தியாவின் நெருக்கடியான இந்த சமயத்தில் மகாத்மாவை மறுபடி பார்ப்போமா என்றிருக்கும் இந்த தருணத்தில் அதிகார வர்க்கத்தினர் தேசத்தின் நறுமலர்களான நூற்றுக்கணக்கான தேச பக்தர்களைச் சிறையிலிட்டு கொக்கரிக்கும் இந்நேரத்தில் என்ன செய்வது என்ன செய்வது என்று தமிழர் மனப் போரிட வேண்டியதில்லை.

இவ்வளவு நாளாக மக்களுக்கு இச்சகம் பேசி ராஜீயமும் தொழிலாகக் கொண்டு வயிறு வளர்த்து வந்த தலைவர்கள் அநேகர் தமிழகத்தில் உறங்கப் போயிருக்கின்றனர். திண்ணைப் பேச்சுகளையே எழுதி மக்களின் மனோபாவத்தின் மீது வியாபாரம் செய்து வந்த பத்திரிகைகள் பல உண்டு; அவை எல்லாம் இன்று வடிக்கப்பட்டு விட்டன. இந்தப் பத்திரிகை ஸத்யாக்ரகத்தை ஆதரிக்கவில்லையே, அந்தத் தலைவனை இயக்கத்தில் காணோமே என்று ஒருவரும் மனம் நோகவேண்டுவதுமில்லை. தேசத்தில் தீவிரப் போர் ஏற்பட்டால் வழவழாப் பான்மையோர் ஓடிவிடுவார்கள். அவர்களுக்கு உறுதியும் தியாகமும் ஊற்றெடுக்குமாறு பராசக்தி அருளுக.

யார் தலைவன்? சிறந்த தொண்டன் தான் பெருத்த தலைவன். அஸத்தியம் தவிர்த்து அஹிம்ஸை ஏற்றுத் தன்னலம் கருதாத சிறு பிள்ளையும் தலைவனுவான். அத்தகைய தலைவர்கள் அல்லது தலைமைத் தொண்டர்கள் தமிழ் நாட்டில் இல்லாமல் இல்லை. அவர்களின் வழி நின்று இயக்கத்தை நடத்துவதே நம்மவர் கடமையாகும்.

இப்போது வருவது ஸத்யாக்ரக வெள்ளம். அது பிற எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு போகும். அதைத் தேக்குவதற்கு இந்த ஆங்கில சர்க்காரின் ஆயிரம் பீரங்கிகளை அடுக்கினுலும் போதாது. அப்படியிருக்க ஏதோ சிலர் அங்குமிங்கும் முணுமுணுப்பதால் ஸத்யாக்ரகம் நின்று விடப் போவதில்லை. ஸத்யாக்ரகம் அழிவற்ற சக்தியுடையது. ஆண்மையின் வேகமுடையது.

இன்றைய தினமே மானம் சிறிதேனுமிருக்கும் தமிழர்கள் தங்களது இல்லற விவகாரங்களுக்கும் தொழில் துறைகளுக்கும் வேண்டுவன செய்து விட்டு வெளியே வருவார்களாக வருங்கால சரித்திரத்தில் தங்கள் பெயர்களைப் பொன்னெழுத்தால் சித்தரிக்க விரும்பும் துயர்கள் தேசியப் படையில் அணிவகுத்து நிற்பார்களாக!

விடா முயற்சியும் தேச பக்தியுமுடைய இரண்டு மூன்று பெயர்கள் ஓர் ஊரில் இருந்தாலும் அவர்கள் ஆங்காங்கு பிரசாரம் செய்து அஹிம்சைச் சேனையைத் திரட்டக்கூடும். மதிற் மேற் பூனைகளாக பலர் தமிழ் நாட்டிலிருக்கின்றனர். அவர்களைத் தியாகச் சிங்கங்களாகச் செய்ய வேண்டுவது அவசியம். ஒரு கையில் தேசீயக் கொடியும் மற்ருெரு கையில் பிக்ஷாபாத்திரமுமேந்தும் தொண்டர்கள் சிலர் புறப்பட்டுச் சுற்றினுல் இன்னுட்களில் நூற்றுக்கணக்கான தொண்டர்களைத் திரட்ட முடியும். ஆவேசமுடையவர்கள் செய்வார்களாக!

(சு. ச. 29-3-1930)

அடக்கு முறைப் பேய்!

பாரத நாட்டில் அடக்கு முறைப்பேய் தாண்டவமாடுகிறது. அரசாங்கத்தினர் தூபம் போட்டு இந்தப் பேயைக் கிளப்புகின்றனர். எங்கு பார்த்தாலும் இந்த பகாஸுரன் குடிகளை விழுங்கி வருகிருன். சிறை! சிறை! சிறை! இத்தோடு இந்தப் பேய் நிற்கப் போவதில்லை. தலைதடுமாறி நிற்கும் அரசாங்கத்தினர் இன்னும் அதிகமான அதிக்ரம முறைகளை கையாளுவர் என்பது திண்ணம். ஆனுல் இந்தப் பேயை அடக்குவதற்கு ஓர் மகாமந்திரம் இருக்கின்றது. இந்த பகாசூரன் வயிற்றை நிரப்புவதற்கும் ஓர் பொருள் இருக்கிறது. அது தான் சத்யாக்ரகம்! சத்யாக்ரகம்!

காந்தி என்னும் பூசாரி இந்தப் பேயை அடக்கப் போகின்ருர். அடக்கு முறைப் பிசாசை அடக்கப் போகின்ருர். சிறை யென்னும் பகாசூரன் வயிற்றை இந்தியரைக் கொண்டு நிரப்புவார். பின்பு அடக்கு முறையை அகற்றுவார் என்பது திண்ணம். இன்னும் ஒரு மாதகாலத்தில் இந்தியாவில் நடக்கப்போகும் அதிசயச் செய்திகள் இந்த பிரிட்டிஷ் சர்க்காருக்கு மட்டுமல்ல உலகத்திற்கே புத்தி புகட்டப் போகிறது. நாட்டை இஷ்டப்படி சிலர் ஆளுவதை உலகத்தார் பொறுக்க மாட்டார்கள் என்ற படிப்பினையே அதுவாகும்......

இனி உரிமை உப்பு வாங்கி உண்பவர்களே மனிதர்கள். அத்தகைய உரிமை உப்பைத் தயார் செய்ய ஊழியர்களை பாரததேவி கோருகிருள்!... உரிமை உப்பை விற்க தொண்டர்களை வேண்டுகின்ருள்! அக்காரியங்களுக்கு பல்லாயிரம் சத்யாக்ரஹிகள் வேண்டும். உப்புத் தின்று சூடு சுரணையடைந்த ஒவ்வொரு இந்தியனும் வெளிவர வேண்டும். இல்லற கிருத்தியங்களை பிறகு பார்த்துக் கொள்ளலாம். கல்லூரிப் படிப்பை பின்பு கவனிப்போம். இப்போது செய்ய வேண்டியது உப்பு! உப்பு! உப்பு!

தெற்கே வேதாரண்யத்தில் உரிமை உப்பைச் சேர்க்கப் போகிருேம். இந்தப் புண்ணியச் செய்கைகளில் ஈடுபடத் தயாராக உள்ளவர்கள், ஆண் மக்கள் என்று செயலில் காட்டிக் கொள்ள விரும்புபவர்கள் தொண்டர்களாக வருக! மற்று முள்ளவர்கள் உதவியாவது செய்க. தெய்வத்தின் அருளால் இந்த இயக்கம் தோன்றியிருக்கிறது என்பது நிச்சயம். நிற்க,

தமிழா! மானமுடைய தமிழா! வீரமுடைய தமிழா! சிறையில் வருந்தும் நூற்றுக்கணக்கானவர்களின் குரல் உன் காதுகளில் கேட்கவில்லையா? சோம்பலைத் துடைத்து எழுந்திரு! உடனே வேதாரண்யத்திற்கு ஓடு! உப்புச் செய்! இந்தச் செயலை நீ செய்யா விட்டால் நீ தமிழன் என்னும் பெயருக்கு உரியவனல்ல. பெயரை இழப்பாயா அல்லது உரிமை பெறுவாயா பார்க்கிறேன். (சு. ச. 9-4-1930)

சென்னையின் கடமை

சென்னைக்குப் பிரகாசம் தந்து அதன் மானத்தையும் கௌரவத்தையும் காத்து சரித்திரத்திலேயே ஒரு தலையாய ஸ்தானத்தை சென்னை அடையும்படி செய்த ஆந்திர சிம்மம் இன்று கூண்டில் அடைபட்டுக் கிடக்கின்றது. ஹா! பிரகாசமே! உன் வீரத்தை மெச்சினேம் தியாகத்தைப் போற்றினேம். தீரத்தை வணங்கினேம். நின்றன் பிரகாசத்தினுல் ஏற்பட்ட ஒளியிடைக் குளித்தோம். ஓங்கு புகழ் எய்தினேம். கோழைகளாயிருந்த எம்மை வீரர்களாக்கிய பெருமை உனக்கே உரியது.

நமது சிம்மம் இன்று சிறையில் கிடக்கின்றது. இல்லை என்று தம்மிடம் வந்தோர்க்கு 'இல்லை' என்னுது உதவிவந்த தென்னுட்டுக் கர்ணன் 'ஆந்திரப் பத்திரிகா'வின் அதிபர் சாந்தமயமான புருஷர், சாதுவெனவே அன்புக்கு தகுந்தவர், தூய குணம் படைத்த உத்தம மகான், எண்ணிக்கையற்ற பேர்களுக்குத் தந்தை போன்றிருந்தவர் நமது நாகேசுவரராவ் இன்று சிறைக் கம்பிகளுக்குப் பின்னுல் படுத்து உழல்கிருர்! ஹா! தள்ளாத வயதில் தாய் நாட்டின் விமோசனத்துக்காக என்ன தியாகம்! என்ன சேவை!

சென்னை ராஜீயச் சோலையிலே நறுமணத்துடன் கூடித் திகழ்ந்த மலர்கள் இன்று இருளடர்ந்த சிறையில் வாடி வதங்குகின்றன். நமது புஷ்பங்களை சர்க்கார் இப்படி கசக்கி எறிவதை நாம் எத்தனை காலத்துக்குச் சகித்துக் கொண்டிருப்பது? நமது சுகங்களை கவனிக்க இதுவா காலம்? மனைவி மக்களுடன் கூடி இன்பமனுபவிக்கும் காலம் இதுவா? தேசம் முழுவதும் காந்தியின் சத்யாக்ரக வெள்ளம் பெருக்கெடுத்து • ஓடுகையில் நாம் அதில் குதித்து திளைத் திருத்தல் வேண்டாமா? நமக்காக வல்லவா பிரகாசமும் நாகேஸ்வரராவும் ரங்கையாவும் பாஷ்யமும் இன்பங்கள் விடுத்து துன்பங்களேற்று இன்று அதோ சிறையிலடைபட்டிருக்கின்றனர். நாம் சுகப்பட வேண்டியல்லவா அவர்கள் கஷ்டப்படுகின்றனர்?

இனியும் நாம் உறங்குவது நியாயமா? இந்திய வீரர்களின் ரத்தம் நமது நாடி நரம்புகளில் ஊடுருவிப் பாய்ந்து தோய்ந்து கிடக்கவில்லையா? காரச்சியில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கடற் கரைக்குச் சென்று பத்தாயிரம் மணங்கு உப்பெடுத்து, மோட்டார் லாரிகளில் ஏற்றி மணங்கு 4 அணுவுக்கு விற்கிருர்கள். குஜராத்தில் உப்புக் காய்ச்சாத வீடில்லை; பம்பாயில் எங்கும் உரிமை உப்பு விற்கப்படுகிறது. சென்னை மட்டும் ஏன் பின்வாங்க வேண்டும்? நாமும் நமது லக்ஷக்கணக்கில் ஏன் கடற்கரைக்குப்போய் உப்புக் காய்ச்சக் கூடாது?

பிரகாசத்தின் சிந்தனை எல்லாம் நம்மீதே இருக்கும் என்பதை நாம் உன்ன வேண்டும். கண்விழிக்க வேண்டும். கடமையைச் செய்ய வேண்டும். மற்ற இடங்களில் உப்புச் சட்டத்தைச் செத்த சட்டமாக்கி விட்டது போன்று சென்னையிலும் அதற்குச் சாவுமணி அடித்து விட வேண்டும். சர்க்காரைப் பணிய வைக்க வேண்டும். 'சுயராஜ்ய' திறவுகோல் கொண்டு நாமே சிறைக் கதவுகளைத் திறந்து நமது தலைவர்களை விடுவிக்க வேண்டும். தட்டாது, தயங்காது கருமம் புரிய விரைவோம்!

(சு. ச 26-4-1930)

இலக்கியம்

பேனுவை எடுங்கள்

இந்த வாரப்பத்திரிகை புதுமுறையில் இருக்க வேண்டு மென்பது காரியாலயத்தின் நோக்கம். அவ்வாறு இந்தப் பத்திரிகையை அலங்கரிக்கும் பொறுப்பைத் தமிழ் அன்பர்களுக்கே விட்டு விடுகிறேன். தமிழகத்தில் எவ்வளவோ அறிஞர்கள் இருக்கின்றனர். அவர்களனைவரும் கொஞ்சம் சிரத்தை பூண்டு பேனு எடுத்தார்களானுல் தமிழ் புதிய ஒளி பெறுமென்பதில் ஐயமில்லை. பேனுவை எடுங்கள்' என்று சங்கு அறிஞர்களை கேட்டுக் கொள்கிறது!

(சு. ச. வாரப்பதிப்பு 24-11-33)

சித்திரம் எழுதுங்கள்

சித்திரக்கலையில் சிற்பக்கலையில் எவ்வளவு முன்னேறி இருந்தோம் தெரியுமா? ஆனால் இன்றைக்கு அத்தகைய அபூர்வ சித்திர வன்மை தமிழரிடம் இருக்கிறதா வென்று கேட்டால் 'இல்லை' என்று ஈனஸ்வரத்தில் சொல்ல வேண்டி இருக்கிறது. தமிழா! வங்காளத்துக்குச் சென்றுபார்! இந்த இருபது வருடத்துக்குள் அங்கு எவ்வளவு தூரம் சித்திரக்கலை அபிவிருத்தியடைந்திருக்கிறது தெரியுமா? ஸ்ரீ நந்தலால் வசு, ஸ்ரீ மஜும்தார், ஸ்ரீ அவனிந்திரர், போன்று எத்தனையோ சித்திரக்காரர்கள்... சித்திரமெழுதும் சக்தியுள்ள தமிழர்கள் உட்கார்ந்து படம் எழுதத் தொடங்க வேண்டும்.

(சு. ச. வா. 8-12-33)

சொல்

ஒரு பொருளைக் குறிக்க ஒரு சரியான பதம் இருக்க வேண்டும். ஒரு பதத்திற்கு ஒரு நுண்மையான பொருள் இருக்க வேண்டும். அப்போழுதுதான் பாஷை செழுமையாக இருக்குமென்பது ஏற்படுகிறது. இன்னின்ன பதங்களை இன்னின்ன சந்தர்ப்பங்களில் தான் பிரயோகிப்பது உசிதம் என்று ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். நல்ல கவிஞர்களின் நூல்களிலும் நல்ல ஆசிரியர்களின் உரை நடைகளிலும் ஒவ்வொரு பதத்துக்கும் ஒரு தனி ஸ்தானம், ஒரு தனி கவுரவம் கொடுக்கப்பட்டிருப்பது அறியக் கிடக்கின்றது. பேனாவில் பழகுபவர்கள் அந்தப் பேராசிரியர்களின் வழியில் பழகி ஒவ்வொரு பதத்தின் வலிமையையும் உணர்ந்து பிரயோகிப்பார்களாயின் இலக்கியம் வெகு அழகாக வளருமன்றோ!

(சு. ச. வா. 9-3-1934)

கொஞ்சம் கவனிக்க வேண்டும்

ஜனங்களுடைய கேவல மனோபாவங்களுக்கு ஏற்றபடி குழஞ்சான் பாட்டுப் பாடிக் கொண்டு பொது ஜனங்களின் ரஸனைத்திறமையை வரவர பாழாக்கிவிடும் பேனாக்காரர்களும் உண்டு மக்களின் ரஸனைத்திறமையும் தராதர அறிவும் நைந்து போகாதபடி பார்த்துக் கொள்ளும் பெரிய பொறுப்பு இக்காலத்தில் பத்திரிகைகளின் வசமேயுளது. பத்திரிகைகளின் மூலம் இலக்கியத்தையே சிருஷ்டிக்க முடியும் என்பது மேனாடுகளின் நவீன அனுபவம். அத்தகைய முயற்சியைத் தமிழ் நாட்டில் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். தமிழ் நாட்டில் இப்போது தான் படிப்பவர்களின் தொகை அதிகமாகி இருக்கிறது. இந்த சமயத்தில் 'உயர்ந்த நோக்கத்தோடு எழுதுகின்றோமா' என்பதை பேனாக்காரர்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். எழுதுபவர் செவ்விய நோக்கோடு எழுதுகிறார்களா என்பதை வாசகர்களும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். லட்சியம் சிறப்புற்றதானால் அது இலக்கியம் தானே?

(சு. ச. வா. 6-4-1934)

விமர்சனம் பற்றி

விமர்சனங்களை ஏற்றுக் கொள்வதற்கு அத்யாவச்யமான சகிப்புத் தன்மை ஒவ்வொரு புது ஆசிரியருக்கும் இருக்க வேண்டும். இனிமேல் உலகமே விமர்சன உலகம் தான். தொட்டாச்சுருங்கியாக வித்வான்கள் இருந்து பயனில்லை. ஆனால் இலக்கிய உலகத்தில் தடியடிப் பேர்வழிகள் சிலர் ஏற்படுவதுண்டு. விமர்சனம் எழுதும் போது இளம் ஆசிரியர்கள் மனம் அதிகமாகப் புண்படாது எழுத வேண்டியது மதிப்புரையாளர் கடமை.

(சு. ச. வா. 13-4-1934)

நடை

நடை என்பது கருத்துக்களைப் பொறுத்து மட்டும் இருக்கவில்லை. வார்த்தைகளை 'கீத்து' முடைவதுமல்ல. சலியாத ஓட்டத்தை ஊட்டுகின்ற ஜீவதாதுவைத்தான் 'நடை' என்று சொல்ல வேண்டும். சந்தர்ப்பங்களுக் கேற்ற சந்தங்களைக் கையாள்வது கவியரசர்களின் கைவரிசை. அதே போல விஷயங்களுக் கேற்ற நடையையும் அந்தந்த ரஸங்களுக் கேற்ற நடையையும் கையாள்வது உரைநடையாசிரியர்களின் லாகவம். தத்தமக்கு எது அவசியமான நடையோ அதற்கேற்றதான விஷயங்களையே பொறுக்கிக் கொள்வது வேறு சிலருடைய சமர்த்து. ஆகவே விஷயங்களுக்கு ஏற்ற நடை அமைய வேண்டும் என்பது ஓரளவுக்கு உண்மைதான். ஆனால் ஒரே விதமான நடையைக் கொண்டு எல்லா விஷயங்களையும் சித்தரித்து விடலாம் என்பது வறட்டுப் பிரயத்தனம் தான். நடை எந்த இலக்கணச் சிறையிலும் அகப்படுவதன்று.

(சு. ச வா. 2-3-1934)

முடிவு

கதையின் முடிவு இன்பகரமானதாகவே இருக்க வேண்டும் என்ற சம்பிரதாயத்தை உடைத் தெறிய வேண்டும். வாழ்வு எப்போதும் சிரிப்பல்ல அழுகையும் உண்டு. இரண்டும் உண்டு என்பதை உணர்ந்து கொள்பவன் தீரனாகிறான். வீழ்ச்சியிலும் கலங்காதவனையே வீரன் என போற்றுகிறோம். ஆகவே வீழ்ச்சி முடிவுக் கதைகளும் மனித சமூகத்துக்கு பயன் தருவனவே என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். வீழ்ச்சிக் கதைகளை தமிழரும் சிருஷ்டிக்கலாம். வீழ்வுக் கதைகளை நன்றாக ரசிப்பதற்கு வாசகர்களுக்கும் தெரிய வேண்டும்.

(சு. ச. வா. 25-5-1934)

வர்ணனை

மகாயாத்திரை

நாளைய தினம் தமிழர் படை திருச்சியிலிருந்து புறப்படப் போகின்றது. தமிழன்னையின் செல்வப் புதல்வர்களும் மானம் பெரிதேயன்றி வாழ்வு பெரிதல்ல எனக் கருதும் இளைஞர்களும் சிறைக்கு அஞ்சாத சிங்கங்களும் சாவுக்குத் துணிந்த சிரஞ்சீவிகளும் வீரர்களும் தியாகிகளும் அப்படையில் அணிவகுத்து நிற்பார்கள். தாயின் மணிக்கொடி நிழலில் சக்கரவர்த்தியார் தலைமை வகுத்து முன்னே நடக்க, சுதந்திர பேரிகை முழங்க, வெற்றிவளைகள் ஒலிக்க, கவிஞன் பாரதியின் பாடல்களைப் பாடிக் கொண்டு தொண்டர் தொடரும் அக்காட்சி ஆநந்தக் காட்சியாகும். கம்பனில்லையே! காளிதாஸனில்லையே! இருந்தால் அக்காட்சியை கவிதைகளால் வரைவார்களே! அதற்குக் காலமில்லையே என்று ஏங்குகிறோம்.

(சு. ச. 12-4-1930)

பாஞ்சாலப் படுகொலை

...ஆஹா! குண்டு மழை! நெருப்புப் பொறி! ஒரே கூக்குரல்! இராக்ஷஸத்திமிர்! உயிர்க் கொலை! ஓடிப் போகவழி இல்லை. ஒரே வழியின் வாயிலில் குண்டு வெடிக்கின்றது! ஓடுபவர்களின் கால்களால் மிதிக்கப்பட்டு குழந்தைகள் இறந்தன! குற்றுயிரும் கொலையுயிருமாக சிலர் புரண்டனர். எங்கு பார்த்தாலும் இரத்தம்! இரத்தம்! இரத்தம்! இந்திய ரத்தம் இந்திய மண்மேல்! காயப்பட்டுக் கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தவர்கள் மீதும் பாவிகள் சுட்டார்கள். மண்டைகள் பிளந்தன. கண்கள் பிதுங்கின. மூக்கு, மார்பு கை, கால் ஆங்காங்கு கிடந்தன. இவ்வாருக தன் ஆசை தீரும் வரை, தனது ரத்தவெறி அடங்கும் வரை டயரும் அவனது படையாரும் சுட்டு அலுத்தனர்.

(சு. ச 5-4-1930)

போகிறவரே

இர்வினே! பிரிட்டிஷ் சக்கரவர்த்தியின் பிரதிநிதியே! ஒரு வைஸ்ராயிக்கும் கிட்டாத ஓர் பாக்கியம் உனக்குக் கிட்டிற்று. தேவர்களும் போற்றத்தகும் ஓர் மகான் உன்னுடன் உட்கார்ந்து இரவுபகலாகப் பேசுவதற்கு நீ பாக்கியம் செய்திருந்தாய். உன்னை வழியனுப்புவதற்கும் அந்த மஹாத்மா பம்பாய்க்கு வரப் போகிருர். ராஜீ ஏற்படுத்துவதற்காக உன்னேடு ஒத்துழைத்த அந்த மஹாத்மாவுக்கு என்ன நன்றி காட்டப் போகிருயோ தெரியவில்லை. இங்கிலாந்து செல். அங்கு இந்தியாவின் நிலைமையை அறியாது உளறிக் கொண்டிருக்கும் பேர்வழிகளுக்கு புத்தி புகட்டு. அதுவே நீ காட்டும் நன்றியாகும்.

(சு. ச. 15 4-31)

புண்ணியத்துக்கு பிராயசித்தமா ?

கடந்த சத்யாக்ரகப் போரில் குதித்து சிறை சென்று வந்த வீரரில் சிலரை பிராயச்சித்தம் செய்து கொள்ளும்படி சில இடங்களில் சிலர் வற்புறுத்துவதாகத் தெரியவருகிறது. பிராயச்சித்தம் என்பது ஒருவன் செய்து விட்ட பாபத்தை கழித்துக் கொள்ளவே ஏற்பட்டதாகும். சிறை செல்வதே பாபமென்று எவராலும் சொல்ல முடியாது எந்தக் காரியத்துக்காக ஒருவன் சிறை சென்ருன் என்பதை கவனித்தல் வேண்டும். திருடிவிட்டோ கொலை செய்தோ சிறை சென்ருல் அது பாவமே. ஆனல் தேச விடுதலைக்காக ஜனங்களின் க்ஷேமத்தைக் கோறி சிறை செல்வது பாவமா? இதை விடப் புண்ணியச் செயல் வேறெதுமில்லை. புண்ணியம் செய்வதற்கு பிராயச்சித்தமா?

(சு. ச. 2-5-1931)

லகான் பிடித்த கைகள் சர்க்காவை சுற்றுகின்றன

அன்று மிஸ் மாடிலெயின் ஸ்லேட். இன்று ஸ்ரீமதி மீராபாய். அன்று ஒரு வெள்ளைக் கப்பலோட்டியின் புதல்வி. இன்று உலக சிரேஷ்டரின் பிரதம சீடர். அன்று செல்வத்திலும் சிறப்பிலும் உருண்ட மங்கை. இன்று முரட்டு வாழ்க்கையை மேற் கொண்டுள்ள உத்தமி. அன்று பட்டுப் பீதாம்பரங்களை உடுத்திய சரீரம். இன்று தடித்த கதர் கட்டி மகிழும் உடல்! அன்று மாளிகையில் வாழ்ந்தவள்! இன்று ஆசிரமவாசி! அன்று ஜோடுகள் மாட்டிய கால்கள், இன்று மண முவக்கும் வெறும் பாதங்கள்! அன்று குதிரைகளின் லகானைப் பிடித்து ஓட்டிய கைகள், இன்று ராட்டையைச் சுற்றும் கைகள்! ஹா! என்ன மாற்றம்! ஊசியை காந்தம் கவர்வது போல மிஸ் ஸ்லேடை காந்தியின் காந்தம் கவர்ந்து விட்டது! ஆமாம் உண்மை காந்தியம் எவரைத்தான் கவராது?

(சு. ச. 3-12-31)

உவமை அழகு

இந்தியாவை ஒரு மீன்கடையாக பிரிட்டிஷ் அரசு நினைத்திருக்கிறது. இங்கு வந்து ஏராளமான அந்நியநாட்டு மீன் விற்பதற்குப் போதிய சவுகர்யங்கள் தாப்பட்டிருக்கின்றன. இந்த ஆட்சிமுறை போலுல்தான் 'மீன்கடை' என்ற வசைச்சொல் இந்தியாவை விட்டு நீங்கும் போலும்!

* * *

மிளகைத் தேடிவந்த வாஸ்கோடிகாமா நம் தலையிலே மிளகை அரைத்துச் சென்றதை இந்தியநேச சரித்திரத்தில் படிக்கலாம்.

* * *

இக்காலத்தில் மன்னர்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டியதே முறை. வல்லரசர்களின் கதியே இவ்வாறு இருக்குமாயின் ஓட்டுக் குடித்தனம் செய்வதைப்போல பெயரளவில் அரசாண்டு வரும் சுதேச மன்னர்கள் இன்னும் அதிஜாக்கிரதையாக இருந்தே தீர வேண்டும்.

* * *

குடைவிருத்தம்
(அன்னிய குடைகள் இறக்குமதி பற்றி)

தந்திரமாய் சிற்றுருவாய்
    தாராளப் பெரு விலையாய்
மந்திரம் செய்தாய் போலும்
    மண்மேல் நிறைந்து விட்டாய்
சுந்தர ஆசைப் பெண்கள்
    சொலிப்பாரா கையிலேந்தி
இந்தியப் பணத்தை நன்ருய்
    ஏப்பமும் விட்டாய் மன்னே

* * *

இந்தியாவுக்கு வந்த ஸப்தரிஷி கோஷ்டியின் தலைவரான ஸர் ஜான் சைமனை நாம் மறந்துவிடவில்லை.

* * *

ஸர்ர்ர்...சி. பி. ராமசாமி அய்யருக்கு சுக்ரன் கடைக்கண் வீசியுள்ளான். ஆகஸ்ட் மாதத்திலிருந்து அக்டோபர் வரையில் டில்லியில் சட்ட மெம்பர் பதவி வகிக்கப் போகிருராம். பிறகு வட்டமேஜை மகாநாட்டுக்குப் போவாராம். 'டிபன்' சாப்பிடுவதுபோல மூன்று மாத காலத்திற்கு ஓர் உத்தியோகம் கிடைத்திருக்கிறது.

* * *

வட்டமேஜை மகா விருந்திற்குச் சென்றுள்ள சர்க்கார் ஸ்வீகாரப் புத்திரர்களுக்கு இனி வேட்டை பலமாக இருக்கும் போலிருக்கிறது! அடுத்த வருடப் பிறப்பின்போது அநேக வட்டமேஜை மிட்டாய் பொம்மைகளுக்கு விதவிதமான பட்டங்கள் வழங்கப்படுவது திண்ணமென்று ஓர் ஊர்க்குருவி கூறுகிறது.

* * *

'இப்படி வரியை அதிகமாக்குவது காய்ந்து போன நார்த்தங்காயைக் கசக்கிப் பிழிவதைப் போலிருக்கிறது. தோலைக்கூட விடமாட்டார் போலிருக்கிறது மிஸ்டர் ஷுஸ்டர்.'

* * *

பிரிட்டிஷ் கோழி ஓயாது கருத்தரித்துக் கொண்டிருக்கிறதாம். அக்கோழி இட்ட முதல் முட்டையான இந்தியா வட்டமேஜை என்ற முதல் முட்டை வெறும் ஓடாகப் போய்விட்டது. கோழிக்குஞ்சின் இறகைக்கூட காணமுடியவில்லை. இப்போது மறுபடியும் பிரிட்டன் கர்ப்பம்! பர்மா வட்டமேஜை என்று இன்னொரு முட்டையை இடப்போகிறது. ஆனைப்பட்ட இந்தியாவே தானை அடிக்கும்போது பர்மா முட்டையைப்பற்றி கேட்கவும் வேண்டுமோ?

* * *

பிரசங்கம் செய்ய விரும்புகிறவர்களுக்கு சில அபூர்வ யோஜனைகள். வீட்டுக்குள்ளே தேசபக்தியைப்பற்றி பேசுங்கள். வீட்டைவிட்டு வெளியே வந்ததும் கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்யுங்கள். மேடைமேல் ஏறி கிராமப்பிரசாரத்தைப் பற்றிக் கதறுங்கள். யாதொரு ஆபத்தும் வரவே வராது.

* * *

ரவீந்திரநாத் தாகூர் ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப்பின் தமது பட்டத்தை வாபீஸ் செய்துவிட்டாராம். அந்தமாதிரி அவர் செய்தது சரியன்று என்று சொல்கிற போக்கும் உண்டு. ஸவுத் இந்தியா ரயில்வே (S. I. R.) விளம்பரம் போன்று மூன்றெழுத்துக்காக அடித்துக் கொள்ளும் மக்கள் இருக்கும்போது இந்தப் பேச்சுக்கள் வருவது சகஜம்தானே?

பாட்டு

தொண்டன் பாட்டு

சங்கு ஸுப்ரஹ்மண்யன்

(ராகம்—காம்போதி)

எத்தனை ஜன்மங்கள் வந்து பிறந்தாலும்
இந்திய மண்ணிடை வேண்டுவனே.

சத்திய ஆர்வமும் நித்திய சேவையும்
சாகஸ வாழ்க்கையும் வேண்டுவனே
பித்தனுய் மாறியே தொண்டுகள் செய்திடும்
பெருமையாம் வாழ்க்கையை வேண்டுவனே

ஏழை எளியவர்கள் எங்கள் நன்னுட்டிலே
என்றும் பசியாற வேண்டுவனே
கோழைகளில்லாமல் வீரத்தொழில் புரியும்
கூட்டமிந் நாட்டில் வேண்டுவனே.

தேசம் அழைத்திடின் பாசம் களைந்திடும்
தெய்வீக நல்லருள் வேண்டுவனே
நீசம் அகன்றிட நீதி துலங்கிட
நேர்மையாய் தொண்டுகள் ஆற்றுவனே

முப்பது கோடிக்கு நன்மைகள் செய்வதே
முக்திநிலை என்று சாற்றுவனே
இப்பணி செய்வதில் எவ்வகைத் துயரமும்
ஏற்றிடு வேனிது சத்தியமே.

பாரதியின் 'அக்கினிக் குஞ்சு'

மறு ஆய்வு

சி. கனகசபாபதி

பாரதியின் பெயரை இலக்கியத்தில் நிலை நாட்டப் பாஞ்சாலி சபதமும், குயில் பாட்டும் கண்ணன் பாட்டும் ஆகிய முப்பெரும் நூல்கள் இருப்பதுபோலவே, 'அக்கினிக் குஞ்சு' என்னும் ஒரு சின்னஞ்சிறு கவிதையும் இருக்கிறது. பார்த்தால் இதுவா பெயர் சொல்லும் என்று கேட்கும்படி இருக்கிறது. ஆனால் இதன் பொருளையும் உருவத்தையும் உணரும்போது, கடுகு சிறுத்தாலும் காரம் போகாது என்று சொல்லத் தோன்றுகிறது.

இதுக்கு மேலும் பீடிகை போடவேண்டாம். இதோ அந்த 'அக்கினிக் குஞ்சு'வைத் தாளில் எடுத்துவைக்கிறேன். ஒன்றும் ஆகாது; அஞ்சவேண்டியதில்லை. அந்தக் கவிதையை மட்டுமே இந்தத் தாளில் மையினால் எழுதுகிறேன்.

" அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்
—அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை
வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு—தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும்
உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்."

இதில் நாலு வரிகளோடு ஒரு தாள ஓசை வரியும் சேர்ந்து ஐந்து வரிகள் இருக்கின்றன. வரிதோறும் மூன்று சீர்கள்; ஒரு தனிச் சொல். மோனைகள் உண்டு; ஆனால் எதுகை வரவில்லை. இது ஒரு சிந்துப் பாட்டு. பாரதி பாடிய சிந்துகளில் இதுதான் ரொம்பவும் சிறிய சிந்துக் கவிதை.

இது பொருளால் சிறந்த பாட்டா? உருவத்தால் சிறந்த பாட்டா? பொருளும் உருவமும் இணைந்திருப்பதால் சிறந்த பாட்டா? இந்தக் கேள்விகள் கேட்கப்படும் முன்பு வேறொரு கேள்வி கேட்கப்பட உரியது. இதுக்குப் பொருள் என்ன என்பதுதான் முதன் முதலாகக் கேட்கப்பட வேண்டிய கேள்வி. ஏனென்றால் இதைப் படித்தவுடன் பொருள் புலப்படவில்லை. வெளிப்படை யாகப் பொருள் மனசில் ஆகும்படி எழுதக்கூடிய முறையிலிருந்து மாறுபட்ட ஒரு படைப்பு-முறையும் இதில் இருக்கிறது.

இந்தக் கவிதைக்குப் பொருள் சொல்ல வேண்டுமானால் நாமாக நமக்குப் புரியும் அளவில் சொல்லிவிடக் கூடாது. பாரதி கருதிய பொருள் இது என்று ஆய்ந்து பார்த்துச் சொல்ல வேண்டும். பாரதி இப்படிக் கருதினார் என்று கூற முடியாமல், பாரதி இப்படியும் கருதியிருக்கலாம் அல்லது அப்படியும் கருதியிருக்கலாம் என்று கூறினால் பொருந்தாது. இரண்டு மூன்று பொருள்களுக்கு உட்பட்டு எது உண்மையான ஆசிரியர் கருத்து என்று புலப்படாமல் நிற்கிற சில குறட்பாக்களின் அவல நிலை இந்த 'அக்கினிக் குஞ்சு'வுக்கு நேரக் கூடாது. அதாவது உரை கூறுவோரின் திறமையில் 'அக்கினிக் குஞ்சு' புலப்படத் தோன்றாமல், ஆசிரியர் உள்ளம் தோன்ற அது பொருள் புலப்பாடு அடைய வேண்டும்.

இந்த இடத்தில் இவ்வளவு பீடிகை தேவைதான். பாரதி உள்ளம் தெரியும்படி 'அக்கினிக் குஞ்சு'வுக்குப் பொருள் காண வேண்டும் என்றால் என்ன செய்வது? எனக்குப் பார்க்க மூன்று வழிகள் காணப்படுகின்றன. தருமு சிவராமு படைப்பாளியின் படைப்பு மன நிலையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னாரல்லவா? அவர் பொத்தம் பொதுவாகத்தான் சொன்னார். இது வழி என்று அவர் காட்டவில்லை. ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் தமது 'நடைமுறைத் திறனாய்வில்' ஒரு கவிதைக்குரிய பொருளின் பொருளை எப்படி அறியவேண்டும் என்று உதாரணங்களுடன் சொல்லிக் காட்டியிருக்கிறார். அந்த வழிகளில் அப்படியே படிப்படியாக ஆழ்ந்து செல்ல நான் விரும்பவில்லை.

முதல் வழி, (1) கவிதையைப் படித்ததும் நமக்குப் புரிகிற பொருளைக் கண்டுகொண்டு அதுக்கு மேலே ஒரு ஆழ்ந்த பொருள் ஏதோ இருக்கிறது என்று தெரிந்துகொள்வது. இரண்டாவது வழி, (2) கவிதையைப் படித்ததும் இதுபோல அந்தக் கவிஞர் பாடியுள்ள பாட்டுக்களில் வரும் ஒப்புமைக் கருத்துக்களையும், ஒன்றிய படிமங்களையும், ஒரு மாதிரி வார்த்தைகளையும் பார்த்து ஆய்வு நடத்துவது. மூன்றாவது வழி, (3) கவிஞர் பயன்படுத்திய ஒரு சொல்லை அல்லது ஒரு தொடரை வைத்துக்கொண்டு 'தடையற்ற தொடர்பு' (Free association) முறையில் ஆய்வு நடத்துவது.

இப்போது இந்த மூன்று வழிகளையும் மேற்கொண்டு பாரதியின் 'அக்கினிக் குஞ்சு'வுக்குப் பொருள் காணலாம்.

பாரதி தன்னுணர்ச்சி வெளியீட்டில் இந்தக் கவிதையை அமைத்திருக்கிறார். அவர் ஒரு அக்கினிக்குஞ்சுவைக் கண்டதாக முதலில் கூறுகிறார். அதை அங்கே ஒரு காட்டில் ஓர் பொந்துக்குள் வைத்ததாக இரண்டாம் வரியில் கூறுகிறார். மூன்றும் வரியில் அந்தக் காடு வெந்து தணிந்தது என்றும், நாலாம் வரியில் நெருப்பின் வீரத்தில் குஞ்சு என்றும் மூப்பு என்றும் உண்டோ என்று கேட்டும் பாடியிருக்கிறார். அதுக்குப் பின்னரும் 'தத்தரிகிட' என்ற தாள ஓசையுடன் ஒரு வரியைக்கொண்டு கவிதையை முடித்திருக்கிறார்.

இதில் அக்கினி குஞ்சு எது என்றும் எப்படி இருக்கும் என்றும் பாரதி குறிப்பிடவில்லை. எந்த விஞ்ஞானக் கூடத்திலும் அக்கினிக்குஞ்சுவை நாம் காண முடியாது நமக்குப் புரிகிற பொருள் கொஞ்சம்தான். அக்கினிக் குஞ்சு என்றால் ஏதோ ஒரு ஆழ்ந்த பொருள் இருக்கிறது என்று நாம் உணர்கிறோம். இந்த மட்டில் இக்கவிதையின் மேலோட்டமான சொற்பொருளைத் தெரிந்துகொண்டு பொருள் ஆழத்துக்குப் போய்ப் பார்க்கவேண்டும் என்று நினைக்கிறோம் அல்லவா?

இப்போது இரண்டாவது வழிக்கு வருவோம். பாரதி பாடியுள்ள வேறு பாட்டுக்களில் வரக்கூடிய ஒப்புமைக் கருத்துக்களையும், ஒன்றிய படிமங்களையும், ஒரு மாதிரி வார்த்தைகளையும் தேடிப் பார்ப்பதுதானே அடுத்த இரண்டாவது வழி

'சாதாரண வருஷத்துத் தூமகேது' என்னும் தலைப்பில் தமது காலத்தில் தாம் பார்த்த ஒரு வால் நட்சத்திரம் பற்றிப் பாரதி ஒரு பாட்டு எழுதியிருக்கிறார்.

> "வாராய் சுடரே! வார்த்தை சில
> கேட்பேன்
> தீயர்க் கெல்லாம் தீமைகள் விளைத்துத்
> தொல்புவி யதனைத் துயர்க்கடல் ஆழ்த்திநீ
> போவை யென்கிறார் பொய்யோ?
> மெய்யோ?"

வால்நட்சத்திரம் என்னும் சுடர் தீயோர்களுக்குத் தீமைகளை விளைவிக்கும். அது உலகத்தைத் துயர்க்கடலில் ஆழ்த்திவிடும். இது பொய்யோ மெய்யோ என்று அந்த வால்நட்சத்திரத்தையே பாரதி கேட்டிருக்கிறார்.

> "ஆதித் தலைவி ஆணையின் படிநீ
> சலித்திடுந் தன்மையால் தண்டம்நீ
> செய்வது
> புவியினைப் புனிதமாப் புனைதற் கேயென
> விளம்புகின்றனர் அது மெய்யோ?
> பொய்யோ?"

அந்த வால்நட்சத்திரம் பராசக்தியின் ஆணையால் உலகத்தைத் தண்டிக்கும். அதனால் அது உலகத்தைப் புனிதப்படுத்தவே செய்யும். இதுவும் மெய்யோ பொய்யோ என்று திரும்பக் கேட்டிருக்கிறார் பாரதி.

'அக்கினிக்குஞ்சு'வுக்கும் வால்நட்சத்திரத்துக்கும் என்ன ஒப்புமை இருக்கிறது? இரண்டுமே தீ. இது ஒரு ஒப்புமை. வால்நட்சத்திரம் தீயோர்களைத் தண்டித்து உலகத்தைத் துயர்க்கடலில் ஆழ்த்தி, அதன்மேல் புனிதப்படுத்தும் என்று நம்பப்படுகிறது. அக்கினிக் குஞ்சு காட்டையே எரித்தது பிறகு அந்தக் காடு வெந்து தணிந்தது. இதுவும் ஒரு ஒப்புமையா? இதை ஒப்புமை என்று அவ்வளவாக நினைக்கமுடியாது. ஆனாலும் பாரதியின் ஒரு பொதுத்தன்மையைக் கற்பனை செய்திருப்பது போல் தோன்றுகிறது. தீ தீமையை அழித்துத் தூய்மையைத் தரும் வலிமை பெற்றது என்னும் கற்பனைப் பொதுத்தன்மைதான் அது. ஏன் வால்நட்சத்திரத்துக்கு வெளிப்படையாக ஏற்றிச் செல்லப்பட்ட இந்தக் கற்பனைப் பொதுத்தன்மை அக்கினிக்குஞ்சுவுக்கு ஏற்றிச் செல்லப்படவில்லை என்னும் கேள்வி இங்கே எழுகிறது. உண்மையில் பாரதி இப்படியொரு கற்பனைப் பொதுத்தன்மை வெளிப்படையாகத் தெரியாதபடி அக்கினிக்குஞ்சுவை ஒரு மூடகப் பொருளாகவே காட்டியிருக்கிறார்.

'சக்திக் கூத்து' என்னும் மற்றொரு பாட்டில் பாரதி 'குகைக்குள் தீயைப்போல' சக்தி இருக்கிறது என்று பாடியிருக்கிறார்.

> "புகப்புகப் புகவின்பமடா போதெல்லாம்
> குகைக்கு ளங்கே யிருக்குதடா தீபோல
> —அது
> குழந்தைதன் தாயடிக்கீழ் சேய்போல."

இங்கே ஒரு குகையைச் சொல்லி, அதுக்குள்ளே தீ இருக்கிறதாகக் காட்டி, அந்தத் தீபோலவே சக்திக் கூத்து என்று பாரதி கூறியிருக்கிறார் 'அகத்தகத் தகத்தினிலே உள் நின்றாள்' சக்தி என்ற கருத்தையே இப்படி வெளிப்படுத்துவது போலிருக்கிறது. அகம் குகை போன்றது அகத்தில் உள் நிற்கும் சக்திக் கூத்து குகைக்குள்ளே தீயைப் போன்றது. அகத்தில் இந்தச் சக்திக் கூத்து நடந்தால் எப்பொழுதும் இன்பம். மேலும் சூதுகளை—வெளியில் நடிக்கும் புறவேடங்களைத் தள்ளிவிடலாம். இந்த முறையில் பாடிக்கொண்டே இதுக்கு மேலும், 'அது குழந்தைதன் தாயடிக்கீழ் சேய் போல' என்று வேறொரு உவமையையும் சேர்த்திருக்கிறார் பாரதி குகைக்குள்ளே அந்தத்தீ தாயின் காலடியின் கீழே இருக்கிற சேய்போலாகும் என்று பாரதி விளக்கியிருப்பதாகவே தெரிகிறது. அதாவது அந்தத் தீ சின்னஞ்சிறியது என்று பொருளாகிறது.

அக்கினிக்குஞ்சுவின் கருத்தோடு இது முற்றும் பொருந்தாவிட்டாலும் ஓரளவு ஒப்புமை

காட்டுகிறது என்று சொல்லலாம். தீ என்றால் சக்திக்கூத்து பாரதிக்கு நினைவில் வருகிறது. அந்தத்தீ பொய்மையை அழித்துவிடக் கூடியது என்றும் பாரதியின் கற்பனையில் படுகிறது மேலும் சின்னஞ்சிறிய குகைத்தீயை இப்பாட்டில் கற்பனை செய்திருக்கிறார் பாரதி.

இதை அடுத்து 'வேள்வித்தீ' என்னும் கவிதையை எடுத்துக் கொள்வோம்.

'வேள்வித்தீ' என்னும் கவிதையைப் பாரதி ரிஷிகள்—அசுரர் உரையாடல் முறையில் அமைத்திருக்கிறார்.

ஆவி வேகுதே என்று அசுரர் பாடுவது இது :

"தோழரே, நம் ஆவி வேகச்
சூழுதே தீ! தீ!—ஐயோ நாம்
வாழ வந்த காடு வேக
வந்ததே தீ! தீ!—அம்மாவோ !"

இங்கு அசுரர் வாழவந்த இடம் காடு என்று பாரதி குறிப்பிடுகிறார். அந்தக் காடு வேகும்படி தீ வந்து சூழுகிறது என்று பாடுகிறார். அசுரர் என்றால் புராணங்களில் வரும் அசுரர் என்று பாரதி அர்த்தப்படுத்தவில்லை. இதுபோலவே தீ என்றால் சும்மா நெருப்பு என்று பாரதி பொருள் கொள்ளவில்லை. இதில் காடு தீயால் சூழப்படும் படிமம் அழகாக மனசில் துல்லியமாகப் படுகிறது.

அசுரரை வெல்லக் கருதும் ரிஷிகள் பாடுவது இது :

"காட்டில் மேயுங் காளை போன்றான்
காணுவீர் தீ! தீ!—இந்நேரம்
ஓட்டி யோட்டிப் பகையை யெல்லாம்
வாட்டுகின்றானே—இந்நேரம் !"

இதில் மறுபடியும் காட்டின் படிமக்காட்சி தொடர்கிறது. தீயைக் காளை என்று உருவகப்படுத்தி அந்தக் காளை காட்டில் மேய்கிறது என்று மேலும் படிமத்தைச் செழுமைப்படுத்துகிறார் பாரதி. தீ என்ற காளை அசுரர் ஆகிய பகையை ஓட்டி வாட்டுகிறான் என்றும் அவர் பாடுகிறார்.

இந்த 'வேள்வித்தீ' கவிதைக்கும் 'அக்கினிக்குஞ்சு' கவிதைக்கும் ஒப்புமை இருக்கத்தான் செய்கிறது; கருத்துக்களிலும் படிமத்திலும் ஒப்புமை இருக்கிறது. பகையை முடித்து வெல்வது இரண்டு கவிதைகளிலும் ஒரு பொதுக் கருத்து. தீ என்பது இரண்டிலும் சாதாரணக் கருத்துக்கு மேலாக ஒரு உயர்பொருள் தருகிறது. அது ஒரு குறியீட்டியல் கருத்து என்று சொல்லவேண்டும். இதுபோல பகைவர் வாழுமிடம் காடு என்ற கருத்தும் இரண்டிலும் பொதுவானது. காடு என்றால் குறியீட்டியல் பாங்கான கருத்தே கொடுக்கிறது. இப்படியாக இரண்டு கவிதைகளும் கருத்துக்களாலும் படிமத்தாலும் முன்னே பார்த்த கவிதைகளை விடவும் ஒத்திருக்கின்றன.

இனி இதுக்கு மேலும் ஒரே ஒரு பாரதி கவிதையை 'அக்கினிக்குஞ்சு' கவிதையோடு ஒப்பிட்டுப்பார்ப்போம். 'தீ வளர்த்திடுவோம்' என்னும் தலைப்பில் பாரதி பாடிய கவிதையில் ஒரு பத்தியை இங்கே எடுத்துத் தருகிறேன்.

"கட்டுக்கள் போக்கி விடுதலை தந்திடும்
கண்மணி போன்றவனை—எம்மைக்
காவல் புரிபவனைத்—தொல்லைக்
காட்டை அழிப்பவனைத்—திசை
எட்டும் புகழ்வளர்ந் தோங்கிட வித்தைகள்
யாவும் பழகிடவே—புவிமிசை
இன்பம் பெருகிடவே—பெருந்திரள்
எய்திப் பணிந்திடுவோம்—வாரீர் !"

இந்த வரிகளில் தீ என்ன என்பது விளக்கப்படுகிறது. தீ என்றால் அது கட்டுக்கள் போக்கி விடுதலை தருவது என்றும், அதைக் கண்மணி என்றும் பாரதி உணர்த்துகிறார். மேலும் தீ என்றால் அது நம்மைக் காவல்புரிவது என்றும், தொல்லைக்காட்டை அழிப்பது என்றும் பாரதி பாடுகிறார்.

இந்தக் கவிதையிலும் தீக்கு ஒரு குறியீட்டியல் கருத்தைப் பாரதி கொடுத்துள்ளார் மேலும் இதிலும் காடு என்னும் படிமத்தைக் கொண்டு வந்து அது தொல்லைக்காடு என்று சொல்கிறார். ஒரே ஒரு புதுமைக்கருத்து இந்தக் கவிதையில் இருக்கிறது. தீ என்றால் அது விடுதலை தருவது என்பதுதான் இதுவரை பார்த்துவந்த ஒப்புமைக் கவிதைகளில் இல்லாத புதுமைக் கருத்து.

இப்போது 'தீ வளர்த்திடுவோம்' கவிதையையும் 'அக்கினிக்குஞ்சு' கவிதையையும் ஒப்பிடுவோம் இரண்டிலும் காட்டில் தீ பற்றிய படிமம் பொதுவானது. காட்டை அழித்து இன்பம் காண்பது இரண்டிலுமே ஒரு பொதுக் கருத்து.

இதுவரைக்கும் 'அக்கினிக்குஞ்சு' கவிதையை இரண்டு ஆய்வு வழிகளிலும் பார்த்தோம். இனி மூன்றாவது ஆய்வுவழியில் பார்க்க வேண்டும். கவிஞர் பயன்படுத்திய ஒரு சொல்லை அல்லது தொடரை வைத்துக் கொண்டு 'தடையற்ற தொடர்பு' (Free assocaiation), வழியில் பார்ப்பதுதான் மூன்றாவது ஆய்வுவழி.

உண்மையில் இந்தத் 'தடையற்ற தொடர்பு' வழியில் 'அக்கினிக்குஞ்சு'வைப் பார்ப்பது அவ்வளவு கடினமல்ல. இதுவரைக்கும் ஒப்புமைக் கவிதைகளோடு உரைத்து அலசிப் பார்த்ததால் தான் 'தடையற்ற தொடர்பு' வழியில் பார்ப்பது எளிதாகிறது.

முதலில் அக்கினி என்ற சொல்லைப் பயன் படுத்தியிருக்கப் பார்க்கிறோம். தீக்குப்பதிலாக இது இருப்பதால் ஏதோ ஒரு உள்ளீடான பொருள் உண்டு என்று இலேசாகத் தெரிகிறது.

அக்கினிக்குஞ்சு என்று சொல்லி வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ என்று பின்னரும் அதே சொல்லைப் பயன்படுத்தியிருக் கிறார் பாரதி. இதனால் பாரதி கண்டது சிறிய தீ என்று தெரிகிறது.

இதில் காடு என்றால் என்ன என்று அறிய யாதோர் விளக்கமும் பாரதி இணைக்கவில்லை.

ஆனால் 'தழல் வீரம்' என்னும் தொடரைப் பாரதி நமக்கு ஏதோ ஒரு குறிப்பை உணர்த்தத் தந்திருப்பதுபோல் தெரிகிறது. ஆம், இந்தத் தொடர்தான் 'தடையற்ற தொடர்பில்' பார்க்க உரியது. இந்தக் கவிதையில் பாரதி சாதாரணத் தீயைக் குறிக்கவில்லை என்றும், ஒரு உயர்ந்த உள்ளீடான பொருளை அவர் எண்ணமிட்டிருக் கிறார் என்றும் விளங்கிவிடுகிறது.

பாரதிக்குத் தீ என்றால் தீக்கடவுள், அவன் திறமையானவன், வலிமையானவன் என்பது அவருடைய புராண நம்பிக்கை வயப் பட்ட கருத்து.

> "தேவி மகனைத் திறமைக் கடவுளைச்
> செங்கதிர் வானவனை"

என்று ஓரிடத்திலும்,

> "வலிமை மைந்தன் வேள்வி முன்னோன்
> வாய் திறந்தானே"

என்று மற்றோரிடத்திலும் பாரதி தீயைக் கடவுள் என்றும் தீ திறமை உடையது, வலிமை உடையது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

'அக்கினிக்குஞ்சு' கவிதையிலும் தழல் வீரம் அக்கினிக்குஞ்சுவுக்கு இருக்கக்கண்டேன் என்றுதானே பாரதி பாடியிருக்கிறார். அதாவது தாம் பார்த்த அக்கினிக்குஞ்சு வலிமை படைத் தது என்றுதான் பாரதி சொல்லுகிறார். எவ் வளவு அழகிய, புராணப்பாங்கு (Myth) இந்தச் சின்னஞ்சிறிய 'அக்கினிக்குஞ்சு' கவிதையில் உள்ளது!

இப்போது அக்கினிக்குஞ்சு என்றால் என்ன என்று சொல்லுவோம். இதைத் 'திறமை' அல்லது 'வலிமை'யைக் குறிக்க அமைத்திருக் கிறார் பாரதி என்று சொல்வது அவ்வளவு சிறப் பானது அல்ல. 'வலிமை, வலிமை என்று பாடுவோம்' என்று மற்றோரிடத்தில் பாரதி பாடி யதை இங்கே கொண்டுவந்து ஒப்பிட்டு உரைத் தாலும் பொருட்சிறப்பு அவ்வளவாக உண்டாக வில்லை. வலிமையின் சிறு பொறியைக் கண் டேன்—அதை ஒரு காட்டில் ஓர் மரப்பொந்தில் வைத்தேன்—காடே அழிந்தது..... இப்படிப் பொருள் சொல்வதில் என்ன சிறப்பு இருக்க முடியும்?

உண்மையில் அக்கினிக்குஞ்சு என்றால் விடுதலைத்தீ—விடுதலைச்சிறுதீ என்பதுதான் சிறந்த பொருளாக இருக்கிறது. விடுதலைச் சிறு தீயைக் கண்டேன்—அதை ஆங்கில ஆட்சி யாளர் ஆகிய பகைவர் சூழுமிடம் ஆகிய காட் டில் ஒரு சிறிய இடம் ஆகிய மரப்பொந்தில் வைத்தேன்—காடே அழிந்தது..... இப்படிப் பொருள் சிறக்கச் சொல்வதில்தான் இந்தக் கவிதையிலுள்ள புராணப் பாங்கின் பொலிவு சிறக்கிறது. 'பாஞ்சாலி சபதம்' விடுதலைக்கருப் பொருளைக்கொண்ட ஒருநவீன காவியம் என்றால் 'அக்கினிக்குஞ்சு' அதே விடுதலைக்கருப் பொரு ளைக்கொண்ட ஒரு நவீன சின்னஞ்சிறு கவிதை.

கடைசியாகப் பாரதியின் வேறொரு கவிதை யில் அக்கினியைப்பற்றி அவர் பாடியுள்ளதைச் சான்றுகாட்ட விரும்புகிறேன். 'கண்ணன் பிறப்பு' என்பதுதான் அந்தக் கவிதை. அதில் அக்கினியைப்பற்றிப் பாரதி பாடியுள்ள வரிகள் இவை.

> "அக்கினி வந்தான்—அவன்
> திக்கை வளைத்தான்—புவி
> யாரிருட் பொய்மைக் கலியை மடித்தனன்
> துக்கங் கெடுத்தான்—சுரர்
> ஒக்கலும் வந்தார்—சுடர்ச்
> சூரியன் இந்திரன் வாயு மருத்துக்கள்
> மக்க திரளாய்—சுரர்
> இக்கணந் தன்னில்—இங்கு
> மேவி நிறைந்தனர் பாவி அசுரர்கள்
> பொக்கென வீழ்ந்தார்—உயிர்
> கக்கி முடிந்தார்—கடல்
> போல ஒலிக்குது வேதம் புவிமிசை."

இங்கு அக்கினியைக் கலியை அழிப்பவன் என்றும், அக்கினியின் வருகையால் அமரர்கள் ஒன்றுகூடி அசுரர்களை வீழ்த்தினர் என்றும் பாரதி கூறுகிறார். பொய்மைக்கலி என்று அவர் குறிப்பிடுவது அடிமைத்தனம் சூழ்ந்த காலம் தானே! எனவே 'அக்கினி வந்தான்' என்று அவர் பாடியதில் அடிமைத்தனத்தை வேரறுக் கும் அக்கினியின் வருகையையே வரவேற்கிறார் என்பது புலப்படுகிறது.

பாரதிக்கு அக்கினியின் கற்பனைதோன்றும் போதெல்லாம் அடிமைத்தனத்தின் அழிவும் விடுதலை எண்ணமும் உடன் எழுகின்றன. இந்த மனவியல் உண்மையை நாம் புரிந்து கொள்ளும்போதுதான் 'அக்கினிக்குஞ்சு' கவி தையிலும் இதே கற்பனை தோன்றி, இதே எண்ணம் உடன் எழுந்திருக்கவேண்டும் என்று அறிகிறோம்.

அக்கினியை நினைத்துக் கற்பனை செய்யும் போது மட்டுமல்ல; மழையைப் பார்த்துக் கற்பனை செய்யும்போதும் அடிமைத்தனத்தின்

அழிவும் விடுதலை எண்ணமும் பாரதிக்கு எழுந்திருக்கின்றன.

“சட்டச்சட சட்டச்சட டட்டா—என்று
தாளங்கள் கொட்டிக் கணக்குது வானம்.
எட்டுத் திசையும் இடிய—மழை
எங்ஙனம் வந்ததடா—தம்பி வீரா !”
“வெற்புக் குதிக்குது வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார்—என்ன
தெய்வீகக் காட்சியைக் கண்முன்பு
கண்டோம் !
கண்டோம் கண்டோம் கண்டோம்-இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு
கண்டோம் !”

கடைசிவரியிலுள்ள ‘இந்தக் காலத்தின் கூத்து’ என்னும் தொடர் மேலே சொன்ன பாரதியின் கற்பனையையும் எண்ணத்தையும் மெய்ப்பிக்கிறது.

மழையை ஆண்டாள் பார்த்தபோது கண்ணனுடைய உருவத்தை நினைத்தாள். ஆனால் மழையைப் பாரதி பார்த்தபோது தாய் நாட்டையும் சமுதாயத்தையும் நினைத்தார். இதனால் பக்திக் கவிதை மரபிலிருந்து பாரதி கவிதை பொருளில் மாறுபட்டது என்பது தெரியவருகிறது. பாரதியைப் பக்திச் சிமிழில் அடைக்கவோ ஆழ்வார்கள் நாயன்மார்களின் கூட்டத்தில் சேர்ப்பதோ பொருந்தாது.

அக்கினியையும் மழையையும் வானத்துத் தேவர்கள் என்று பாரதி கூறுவது மெய்தான். சுரர்—அசுரர் போரிடுவதாக அவர் பாடுவது மெய்தான். இதனால் மட்டும் பாரதி பக்திக் கவிஞர் அல்லது வேதாந்தக் கவிஞர் என்று கூறிவிட முடியாது. அக்கினியையும் மழையையும் குறியீட்டியல் பாங்காக அவர் பாடியிருப்பதை நாம் மறக்கக்கூடாது.

அக்கினியை அடிமைத்தனத்தைச் சுட்டுப் பொசுக்கும் விடுதலைத்தீ என்ற குறியீட்டியல் பாங்கில் அழகியல் நோக்குடன் நாட்டுவிடுதலை நினைப்பு உள்ளத்தில் கனன்றபோது பாரதி பாடியதுதான் ‘அக்கினிக்குஞ்சு.’

மூன்று கவிதைகள்

கோட்டையும் கோவிலும்

(இரா. மீனாட்சி)

அரசன் கட்டிய கோட்டை, இன்று
மண்மேல் கனவின் கரு நிழலே.
காதற்பரிசு அரண்மனை எல்லாம்
கலைந்த சித்திரக் கூடுகளே.

சிதைந்த கல்லில்
சாய்ந்த புல்லில்
மூடிய முள்ளில்
தீய்ந்த மூங்கிலின்
சாம்பல் வெளுப்பில்
அழகின் அவலம்.

நர்த்தன சாலையில் பாம்புச் சட்டை
சலங்கை ஒலியா ஊதற்காற்று ?

மொட்டை கோபுர
பாதையோரம்
பாறைப் படியின்
ஊற்றுக் காலில்
நாகலிங்க இதழ்க் குளுமை.

காலச்சேட்டை கடந்த சிவமோ
தானுய்த் தனக்குக் கோயில் கொண்டது !

ஆடிக்காற்றே

ஆடிக்காற்றே வா! வா!
மண்தூவி விதைதூவி
முளை காண விழை காற்றே
என் சொல் கேளேன்.

நெல்லை நாறப் புழுக்குருனே
அவனைப் படியில் உருட்டிவிடு.
இளைத்தவன் வயிற்றில் சொடுக்குருனே
அவனைக் குழியில் இறக்கிவிடு.
மஞ்சள் இதழில் பச்சை கிறுக்குருனே
அவனை பனை மரத்தில் தொங்கவிடு.
உதைத்துத் கொள்ளட்டும்
துள்ளல் அடங்கட்டும்.

புரட்சிக் காற்றே !
இன்னும் ஒன்றே ஒன்று.
இவற்றைக் காண விழைந்த என் துணை
இதோ, இங்கே நிலப்படுக்கையில்.
எனக்காக -
மல்லிகை மலர்களைத் தூவ மாட்டாயா?
மெல்ல -
மெல்லத்தூவு, நோகாமல் தூவு.

புதிய பாரதம்

தருமன் கைராட்டை இயங்கிய இழுப்பில்
பருத்திக் கம்பி முண்டு முடிச்சாய்
தண்டில் கொண்டை சுற்றியது.
அங்கே,
கொண்டை அவிழ்ந்த அரையாடைப் பாஞ்சாலி
நெசவுக்கார கண்ணனைத் தான்
கூவி அழைத்தாள்.
அவன் அங்கே
ஆலைக்காரரின் கௌரவ விருந்தில்
அவல் பாயாசம் அள்ளிக் குடிக்கிருன்
கையூட்டில் களிக்கிருன்.

ஐயையோ !
விசைக்கும் கைக்கும் பெரும் போருண்டு
தருமனுக்குத் தலைகுனிவா?
பாஞ்சாலிக்குப் பக்தி இல்லையா?
கண்ணனுக்கு ஊமைக்காதா?
பாரதம்—
தேம்புகிறது.

இலக்கியத்தை பாதிக்கும் சக்திகள்

வல்லிக்கண்ணன்

மனிதன் பேசும் சக்தி பெற்றவன்; சிந்தனை ஆற்றல் உடையவன். அதேபோல, தனது அனுபவங்களையும் அவை தன்னுள் ஏற்படுத்தும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படுத்த வேண்டும் என்ற அகத் துடிப்பும் (மன உந்துதலும்) பெற்றிருப்பவன் அவன்.

இந்த மன உந்துதல், பெரும்பாலோரிடம் வெறும் பேச்சு அல்லது வம்பளப்பு, சுவையான அளப்பு அல்லது 'கதை விடுதல்' போன்றவற்றில் திருப்தி கண்டுவிடுகிறது. மற்றும் பலரிடம் கடிதப் பரிமாற்றம், சிறு சிறு நாட்குறிப்புகள் (டயரி) எழுதி வைத்தல், அந்தரங்கமான விரிவான குறிப்புகளை நோட்டுகளில் எழுதுதல் (ஜர்னல்ஸ் என்றும் நோட்புக்ஸ் என்றும் பெயர் பெறும் வகை எழுத்து) போன்றவற்றில் நிறைவு காண்கிறது. வேறு பலர் கதை, கட்டுரை, நாவல், கவிதை, காவியம், நாடகம் முதலிய வடிவங்களில் தங்கள் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும், அவை தங்களுக்குள் ஏற்படுத்தும் கிளர்ச்சிகளையும், எண்ணங்களையும் வெளியிட முற்படுகிறார்கள்.

எழுதப்படுவனவற்றில் பெரும்பங்கு, படிக்கிறவருக்கு படிக்கிற நேரத்தில் மட்டுமே சிறிது சுவாரஸ்யம் உண்டாக்கக் கூடிய தரத்தில்தான் இருக்கும். உயர்ந்த எண்ணங்களையோ, கனமான சிந்தனைகளையோ, புதிய புதிய விஷயங்களையோ, ஆழ்ந்த அனுபவங்களையோ, அழுத்தமான முறையில் எடுத்துச் சொல்லாத மேலோட்டமான எழுத்துக்களே எல்லா மொழிகளிலும் அதிகம் அதிகமாகத் தோன்றுவதுதான் இயல்பாக இருக்கிறது. இவை பொழுது போக்க உதவும் 'வெறும் பேச்சு'கள் போன்றவை!

இந்தரகமான எழுத்துக்களிலும், ஆற்றல் உள்ளவர்கள், தங்கள் கற்பனை, மனோபாவம், சுவையாக எடுத்துச் சொல்லும் திறமை முதலியவைகளினால் ஒரு தனித் தன்மையும் தரத்தையும் சேர்க்க முடியும்.

வாழ்க்கையின் மேல்போக்கான அம்சங்களையும் இன்பங்களையும், மென்மையாகவும் நளினமாகவும் — படிப்பவருக்கு சிரமம் தராத வகையில், படிப்பவருடைய சிந்தனைக்கு வேலை கொடுக்காத விதத்தில், அவருடைய உள்ளத்தையும் உணர்வுகளையும் வெகுவாக பாதிக்காத வகையில் — எடுத்துச் சொல்கிற இந்த ரக எழுத்துக்கள் 'இலக்கியம்' ஆக அமைவதில்லை.

இலக்கியம் வாழ்க்கையையும் இயற்கையையும் பிரதிபலிப்பதுதான். உலகத்தை நன்கு கவனித்து, வாழ்க்கையை விசால நோக்குடன் ஆராய்ந்து, மனிதரின் அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் — பொதுவாக, சகல ஜீவ ராசிகளின் இயல்புகளையும் போராட்டங்களையும் — அழுத்தமாகச் சித்தரிக்கும் முயற்சி இது. எழுதுகிறவருடைய மனோதர்மம், கற்பனை ஆற்றல், சுய விருப்பு வெறுப்புகள், தத்துவ நோக்கு முதலியன அவருடைய படைப்புக்கு விசேஷமான தனித் தன்மையும் தரமும் சேர்க்கின்றன. இலக்கியம் வாழ்வின் மேல் பரப்பில் காணப்படும் இனிமைகளையும் சுகானுபவங்களையும், நளினங்களையும் நகாசுகளையும் மட்டுமல்லாது, வாழ்க்கையின் அடிமட்டம் வரை துருவி நோக்கும் தன்மை பெற்றது. மனிதனின் சகல பண்புகளையும், வாழ்க்கையின் எல்லாக் கோணங்களையும், கண்டு, ஒளிவு மறைவில்லாமல் காட்டும் நோக்கம் பெற்றது.

இலக்கியத் தரமான எழுத்துக்களை உருவாக்க ஆசைப்படுகிறவர்கள் பல ரகமானவர்கள். 'எனது ஆத்மதிருப்திக்காக மட்டுமே நான் எழுதுகிறேன்' 'என்னால் எழுதாமல் இருக்க முடியாது. எழுதுகிறேன்... 'என் அகஉந்துதலை, அதாவது என் உள்ளத்தில் எழும் ஒரு 'அர்ஜ்'ஐ, ஒருவிதத் தினவை, தீர்த்துக் கொள்வதற்காக நான் எழுதுகிறேன்' என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். பிறரை நல்வழிப்படுத்துவதற்கு என்றும், சமூகத்தை சீர்திருத்த வேண்டும் என்றும், நாட்டு மக்களுக்கு உண்மையைச் சுட்டிக்காட்டி விழிப்பு ஏற்படுத்தி அவர்கள் உயர்வடைவதற்கு உரிய வழிவகைகளில் செயல்படும்படி தூண்ட வேண்டும் என்ற நோக்கத்தோடும் பலப்பலர் எழுதுகிறார்கள்.

மனிதரின் தன்மைகளையும் தவறுகளையும், எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும், வாழ்க்கையில் அவர்கள் நிகழ்த்தும் போராட்டங்களையும் வெற்றி தோல்விகளையும், உணர்ச்சி நாடகங்களையும் சொல்லிலே திறமையாகச் சித்திரித்துவிட வேண்டும் எனும் துடிப்போடு எழுதுகிறவர்கள் எத்தனையோ பேர். புகழ் கிடை

க்கும், பணம் கிடைத்தாலும் கிடைக்கக் கூடும் என்ற ஆசையோடும் சில படைப்பாளிகள் இலக்கிய முயற்சிகளில் ஈடுபடுகிருர்கள்.

இவ்வாறு எழுதுகிறவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்பு, அனுபவம் தத்துவப் பார்வை, மத நம்பிக்கை, மரபுப் பற்று அவர்கள் வாழ்கிற குடும்ப, சமூகச் சூழ்நிலை, நாட்டின் நிலைமை, அரசியல் நிலைமை, அவர்களுடைய உடல்நிலை, உள்ளத்தின் தன்மை, பொருளாதார நிலைமை முதலியன அவர்களுடைய எழுத்து முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கக் கூடிய சக்திகளாக இருக்கின்றன.

இவற்றில் பல, படைப்பாளிகளை ஊக்குவிக்கின்றன. சிலருக்கு தனித்துவம் சேர்க்கின்றன. சில சமயங்களில் இவற்றில் பலவோ, அல்லது ஒரு சிலவோ, இலக்கிய முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் பாதக சக்திகளாக அமைந்தும் விடுகின்றன.

புதுமைப்பித்தனின் நம்பிக்கை வறட்சியும், விரக்தி மனநிலையும், அவருடைய 'ஸினிக்' தனமும் அவரது எழுத்துக்களுக்குத் தனி அழகும் வலிமையும் சேர்ந்துள்ளன.

நம் எழுத்தாளர்களில் அநேகருக்கு வாழ்க்கையைப் பற்றிய திட்டவட்டமான சித்தனைகளோ, பொதுவாக எதைப் பற்றியுமே தேர்ந்து தெளிந்த நம்பிக்கைகளோ ஒரு தத்துவ நோக்கோ கிடையாது. தமிழில் இலக்கிய வளர்ச்சி நல்ல முறையில் அமையாமல், சோனியாய் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் தான்.

இலக்கியம் வளமுற்று, விசாலித்து, பெருகிப் பூத்துக் குலுங்குவதற்கு படைப்பாளியின் அனுபவம் முக்கியமான ஆதாரமாகும். தமிழில் திரும்பத் திரும்ப ஒரே ரகமான கதைகளும், நாவல்களும் பிறந்து கொண்டிருப்பதற்கு — எழுத்தில் புதுமைகளும் பலவித நயங்களும் தோன்ற முடியாமல் இருப்பதற்கு — எழுத்தாளர்களின் அனுபவமின்மையும் ஒரு பெரிய காரணம் ஆகும்.

பொதுவாக சிலர் குறிப்பிடுவது உண்டு — மேஞட்டு எழுத்தாளர்கள் எப்படி எல்லாம் எழுதுகிருர்கள்; எவ்வளவோ சூழ்நிலைகளை, புதிய புதிய இடங்களை எல்லாம் அழகாக வர்ணிக்கிருர்களே என்று. டி. எச் லாரன்ஸ் ஒவ்வொரு நாவலையும் வெவ்வேறு நாட்டில், புதிய புதிய சூழ்நிலையில், நடப்பதாகப் படைத்திருக்கிருன். எர்னஸ்ட் ஹெமிங்வேயின் எழுத்துக்களிலும் இந்த விதமான புதுமைகளைப் பார்க்க முடிகிறது. ஸாமர்ஸெட் மாம் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. மலாயா, இலங்கை, கீழ்த்திசை நாடுகள் சம்பந்தமான கதைகளை அவர் மிகுதியாக எழுதியிருக்கிருர். இதுபோல் எல்லாம் இங்கு யார் எழுதுகிருர்கள்? 'சுப்பரின் கன்றுக்குட்டி சொந்தத் தோட்டத்தையே சுற்றுச் சுற்றி வருகிறது' என்பது போல இங்குள்ள எழுத்தாளர்கள் திரும்பத் திரும்ப எழுதியதையே எழுதிக் கொண்டிருக்கிருர்கள் என்றும் சில ரசிகர்கள் குறிப்பிடுவது வழக்கம்.

மேல்நாட்டு எழுத்தாளர்களைப் போல நம்மாலும் புதிய புதிய அனுபவங்கள், அகண்ட - ஆழ்ந்த - பேரனுபவங்கள் பெற முடியவில்லையே; அதனுல் அருமையான படைப்புகள் படைக்க முடியவில்லையே என்ற தவிப்பும் தாகமும் சில படைப்பாளிகளின் உள்ளத்தில் உறுத்திக் கொண்டேயிருக்கிறது.

ஒரு சமயம் ந. பிச்சமூர்த்தி என்னிடம் குறிப்பிட்டார்: 'நம் நட்டு எழுத்தாளர்கள் பலவிதமான அனுபவங்களும் பெற முடியாமல் இருப்பது பெரிய குறையேயாகும். புதிய புதிய இடங்களுக்குப் பிரயாணம் போவதற்கு உரிய வசதியும் வாய்ப்பும் நம் எழுத்தாளர்களுக்கு இல்லை. ஸாமர்ஸெட்மாம் வருஷம்தோறும் பல நாடுகளுக்கும் பிரயாணம் செய்ய முடிகிறது. டி. எச். லாரன்ஸ் ஒரு புத்தகம் எழுதுவதற்கு முன், வேருெரு நாட்டுக்குப் போய், அங்கே வருஷக்கணக்கில் தங்கியிருந்து அனுபவம் பெற முடிந்தது. இங்கே அப்படி எல்லாம் செய்வதற்கு நமக்குப் பொருள் வசதி ஏது?'

இது இன்றைக்கும் பொதுவான ஒரு உண்மையாகும். எர்னஸ்ட் ஹெமிங்வே உல்லாசமாகப் பிரயாணம் செய்து, இஷ்டம் போல் வாழ்ந்து, விருப்பிய அனுபவங்களைப் பெறுவதற்கு அவன் வசித்த நாட்டின் நிலைமையும், அங்குள்ள வாழ்க்கைத்தரமும், எழுத்து மூலம் அவன் பெற முடிந்த வருமானமும் அவனுக்கு வசதி செய்து தந்தன. இப்படியே பலர் விஷயத்திலும்.

ஆனல் நம் நாட்டில் எழுத்தாளர்களின் பொருளாதாரம் அவர்களுடைய உணவு, உடை உறைவிடம் முதலியவைகளுக்கே போதுமான அளவு வசதி செய்ய இயலாத நிலையில்தான் இருக்கிறது. அவர்கள் விசால நோக்கு பெறுவதற்கு, அனுபவங்கள் அடைவதற்கு, பிரயாணம் போவது எவ்வாறு சாத்தியம்?

அனுபவங்கள் பெறுவதற்கு அயல் நாடுகளில் சுற்றித் திரிய வேண்டும் என்பது அவசியமல்ல. உள்நாட்டிலாவது பல இடங்களுக்கும் போய்ப் பார்க்க வசதி வேண்டாமா? குமரிமுனையையும், குற்றாலத்தையும், கொடைக்கானலையும், நீலகிரியையும் நம் எழுத்தாளர்களில் எத்தனை பேர் ஒரு தடவையாவது பார்த்திருப்பார்கள் என்று ஆராயப் போனல், கிடைக்கக்கூடிய விவரம் அனுதா

பத்துக்கு உரிய, பரிதாபகர உண்மையாக இருக்குர். தாஜ்மகாலையும், கங்கையையும், இமயப் பனிவரையையும் பார்த்துக் களிக்க வேண்டும் என்று ஆசைப்படாத படைப்பாளி இருக்க முடியாது. ஆனாலும் அந்த அனுபவம் எத்தனை எழுத்தாளருக்கு அவருடைய வாழ்நாளில் சிந்திக்கக் கூடிய வாய்ப்பும் வசதியும் இந்த நாட்டிலே இருக்கின்றன ?

உண்மையான ஆற்றல்—பேராற்றல்— படைத்தவன் வெளியூர்களுக்குப் பிரயாணம் போகாமலே, இருந்த இடத்தில் இருந்தபடியே குடும்பம், தனிமனிதனின் உள்ளம் உணர்வு முதலிய விஷயங்களை வைத்துக் கொண்டு அற்புதங்கள் சாதிக்க முடியும் என்று சிலர் சொல்லக்கூடும். அதீத ஆற்றல் பெற்ற மேதை அவ்வாறு செய்ய முடியும்தான். ஆனால் அது 'அபூர்வ கேஸ்'. வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற உயர்ந்த இலக்கியப் படைப்புகள் அனுபவம் என்கிற ஆழ்ந்த, அழுத்தமுள்ள, கனமும் பலமும் பொருந்திய அஸ்திவாரத்தின் மீதே எழமுடியும்.

எமிலி ஜோலா என்கிற பிரஞ்சு நாவலாசிரியன் எழுதிய அருமையான நாவல்களுள் 'ஜெர்மினல்' என்பதும் ஒன்று. சுரங்கத் தொழிலாளர்களின் வாழ்க்கையை அழுத்தம் திருத்தமாக வர்ணிக்கும் அற்புதப் படைப்பு. அந்த நாவலை எழுதுவதற்காக, நிலக்கரிச் சுரங்கங்களை நன்கு ஆராய்வதிலும், சுரங்கத் தொழிலாளர்களுடன் கலந்து பழகுவதிலும், அவர்கள் வட்டாரத்தில் வசிப்பதிலும் பல வருஷங்களைச் செலவிட்டான் ஜோலா.

இப்படி நேரடி அனுபவம் பெறுவது இலக்கியப் படைப்பின் உயர்வுக்கு வகை செய்யும். சில படைப்புகளுக்கு ஆதாரங்களும் ஆய்வுகளும் அதிகம் தேவைப்படும். லியோ டால்ஸ்டாய், இலக்கியத்தின் மகத்தான சிகரங்களில் ஒன்று எனத் திகழும் 'War and Peace' நாவல் எழுதுவதற்கு ஐந்து வருஷ காலம் கடும் உழைப்பு உழைத்ததாக எழுதி வைத்திருக்கிறார். எந்த சூழலில்? 'five years of strenuous labour under the best conditions of life' என்று குறிப்பிட்டிருக்கிறார். 'வாழ்க்கையின் மிகச் சிறந்த தன்மைகள் நிறைந்த சூழலில்' என்கிறார் அவர். அந்த 'மிகச் சிறந்த வாழ்க்கை நிலையே' வேண்டாமப்பா. சுமாரான வாழ்க்கை வசதிகள் கொண்ட நிலைமையாவது — வேறொன்றையும் கவனிக்காமல் ஒரு நாவலை மட்டுமே எழுதிக் கொண்டிருப்பதற்கு வகை செய்கின்ற நிலையாவது — திறமையுள்ள படைப்பாளிக்கு ஒரு வருஷத்துக்காவது கிடைக்குமா இந்த நாட்டிலே? நிச்சயமாகக் கிடைக்காது

சென்ற இருபது வருஷங்களில் இந்த நாட்டின் பல பகுதிகளில் அற்புதங்கள் மலர்ந்துள்ளன. பெரிய திட்டங்களின் கீழ் புதிய புதிய அமைப்புகள் தலைதூக்கி மனித உழைப்பின் வெற்றியைப் பறை அறைந்து கொண்டிருக்கின்றன. கட்டாந்தரையாகவும், காடாகவும், மலைப் பிரதேசமாகவும் கிடந்த பல இடங்கள் அழகும் ஒளியும் பூத்துக் குலுங்கும் — உழைப்பும் விளைவும் சிரித்துச் சிலிர்க்கும் — நகரங்களாகவும் தொழில்வளப் பகுதிகளாகவும், நீர்த்தேக்கங்களாகவும் மறுமலர்ச்சி பெற்றுள்ளன. இவை இலக்கியத்தில் இடம் பெறவே இல்லை. ஏன்? இவற்றின் வளர்ச்சியை, அமைப்பை, குறை நிறைகளைக் கண்டு உணர்ந்து, ஆராயும் வாய்ப்பும் வசதியும் உண்மையான படைப்பாளிகளுக்குக் கிடைக்க வழியே இல்லை.

நான் அறித்த வரையில், தமிழில் இத்திசையில், ஒரே ஒரு முயற்சிதான் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன் எழு

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT. EZHUTTHU TAMIL QUARTERLY

Form IV
See Rule 8

1. Place of Publication; Madras
2. Periodicity of its Publication: Quarterly
3. Printers dame ; A. Rajaram
   Nationality: Indian
   Address; 97, Big Street, Triplicane
   Madras-5.
4. Editor and Publisher's Name:
   C. S. CHELLAPPA
   Nationality: Indian
5. Name & Addresses of individuals who own the news paper and partners of share holders holding more than 1% of the total Capital. | C. S. Chellappa 19-A, Pilliar Koil Street Triplicane, Madras-5.

I C. S. Chellappa hearby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1—4—69

C. S. CHELLAPPA
Publisher.

திய 'அமுதமாகி வருக!' என்ற நாவல்தான் அது. அது இலக்கியத் தரத்தில் வெற்றிகரமான சாதனை அல்ல தான். என்ருலும், இந்தத் துறையில் — நாவலுக்கு விஷயத்தைத் தேர்ந்தெடுத்த தன்மையில் — அது புதுமுயற்சி. அது எப்படி சாத்தியமாயிற்று? அந்தப் படைப்பாளி, மனித உழைப்பால் புதுமைகள் மலர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்தக் காலகட்டத்தில், வசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்ததனுல்தான்.

ஆகவே, அனுபவமும் பொருளாதார நிலைமையும் இலக்கியத்தை நல்ல தன்மையிலும், பாதகமான விதத்திலும் ஆட்டுவிக்கிற சக்திகளில் இரண்டு என்பது தெளிவாகும்.

உடல்நிலை நன்ருக இருந்தால் உள்ளமும் நன்ருக இருக்கும். உளநிலை சீர்கெட்டிருந்தால் அனைத்தும் பாதிக்கப்படும்.

நீட்ஷே உடலால் மிகுந்த பலவீனனுக இருந்தான். அடிக்கடி நோய் வந்து கஷ்டப்பட்டான். அதனுல், நோயினுல் பீடிக்கப்படாத, வலிமைமிக்க உடல் மனிதனுக்குத் தேவை என்று ஆசைப்பட்டான். மற்றவர்களைப் போல் தானும் வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லையே என்று மனம் குமைந்தான். மக்களை வெறுக்கும் 'ஜனத்துவேஷி' ஆனுன். பலவீனர்கள் அகற்றப்பட வேண்டும்; உலகத்தில் அதிமனிதர்களே (super men) வாழ வேண்டும் என்று கருதினுன். தனது எண்ணங்களையும் கொள்கைகளையும் ஒலிபரப்ப ஜராதுஷ்டிரன் என்ருெரு பாத்திரத்தை உருவாக்கினுன். 'Thus Spake Zarathustra' என்ற நீட்ஷேயின் நூல் அழுத்தமான சிந்தனைகளை எடுத்துச் சொல்லும் அழகான படைப்பாக விளங்குகிறது.

டாஸ்டாவ்ஸ்கியின் உள்ளமும் உடலும் சீர்கெட்ட நிலையிலேயே இருந்தன. வாழ்வின் கொடுமைகளால் அவன் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தான். அதனுல் அவன் உள்ளமே ஒரு இருண்ட தன்மை பெற்றிருந்தது. அவன் படைத்த இலக்கியங்கள் பலவும் வாழ்க்கையின் இருள் தன்மைகளை, உள நோய் பெற்றவர்களை நன்ருக வாழ முடியாமல் போன சபலசித்தர்கள் சஞ்சலக்காரர்கள், குடியர்கள், குணக்கேடர்கள் வகையினரையும் அவர் தம் போக்குகளையும் நுணுக்கமாகவும் திறமையாகவும் சித்தரிப்பனவாகவே அமைந்தன.

தனி நபர்களை பாதித்து, அதன் மூலம் அவர்களது படைப்புகளை — இலக்கியத்தைத் — பாதிக்கக்கூடிய சக்திகளில் சில பற்றி ஓரளவு குறிப்பிட்டேன். தனிமனிதர்களை மட்டுமின்றி, இலக்கியத்தை — அதன் வளர்ச்சியையும் வியாபகத்தையும் நேரடியாகவும் பெருவாரியாகவும் பாதிக்கக் கூடிய சக்திகள் பல உள்ளன இனி அவற்றை கவனிக்கலாம்.

(அடுத்த ஏட்டில் முடியும்)

மூன்று கவிதைகள்

தெருக் கோடியில்

கே. ராஜகோபால்

தெருக்கோடியில்
ஊர்கோலத்தில்
மோகனத்தில் முகாரி ஊதும்
அண்ணுவியின் செவிட்டுக் காதில்
அம்மாவின் தொண தொணப்பும்
அப்பாவின் சிடுசிடுப்பும்
கேட்காவிட்டால் போகட்டும்.
எதற்கெடுத்தாலும் 'நாலுபேர்'
எதிர்நின்று உயிரெடுக்கும்
இழவெடுத்த ஊரிலே
கண் கட்டி வாய் கட்டி
கரை தள்ளிய காட்டாறு
கடல் மூழ்கிப் போச்சென்று
உடலை உலர்த்தி
உதறு மட்டும் காத்திருந்ததால்
கழுகுக்குப் பிறந்த 'நாலுபேர்' கண்களில்
என்னுடைய வேலி •
ஏன் படவில்லையோ?

அடுக்கடுக்கான

அடுக்கடுக்கான சாம்பல் போர்வைக்குள்
அகமும் முகமும் வெம்பி வெளிறி
ஆயிரங்காலத்து வாழையென்று வாய்பேசி
ஊருக்கு உலவும் உரங்கெட்ட செத்தைகள்
பறந்து விழும் பொறியில் பற்றிக் கொள்ளுமா?

சரமறுந்து பாசியெல்லாம்

சரமறுந்து பாசியெல்லாம்
தன்போக்கில் தெறித்தோட
சிரம் பழுத்த கருவாடு
சில்லிட்டுக் கூம்பிவிட
வரங்கொடுத்த வேம்பரசு
வட்டியுடன் முதல் கேட்க
உரங்கெட்ட ஊதுலையில்
கரியின்றிப் பொறிதூவி
அரமெடுத்து ஓடுபவன்
ஆந்தையா, அரிவாளா?

புதுக்கவிதையின் உள்ளடக்கம்

சி. சு. செல்லப்பா

'புதுக்கவிதையின் உள்ளடக்கம்' என்ற தலைப்பில் சென்ற டிசம்பர் மாத 'தாமரை'யில் நா. வானமாமலை எழுதியிருந்த கட்டுரைக்காக நான் முதலில் அவரை பாராட்டக் கடமைப் பட்டவன். காரணம் இதுவரையில் தமிழ்க் கவிதைத் துறையில் ஒரு திருப்பம் விளைவித்திருக் கும் இந்த இயக்கத்தைப்பற்றி அவரளவு சிரத்தை எடுத்து ஆராய யாரும் முற்பட்ட தில்லை. 1954-ல் 'புதுமைப்பித்தன் கவிதை கள்' புத்தகத்துக்கு நீண்ட ஒரு முன்னுரை எழுதிய சிதம்பர ரகுநாதன் கூட, அதுக்கு முன் புதுக்கவிதை எழுதியவர்களைப் பற்றி எழுதுகை யில் அவர்களுக்கு பண்டைய, இலக்கியங் களிலோ இலக்கணங்களிலோ பரிச்சயம் கிடை யாது என்றும், இலக்கணக் கட்டுக்கோப்புக்குள் குறைந்த அளவேனும் அடைபட்டு நின்று புகல முடியாத காரணத்தால் வசன கவிதையை சரணடைந்ததாகவும் பரிகசித்துக் கூறிவிட்டு உருவ ரீதியாக புதுமைப்பித்தன் கவிதைகளின் உருவ அமைப்பைப்பற்றி மட்டும் பேசி 'புது முறைக்கவியுருவம்' அவர் கொடுத்திருப்பதாக நிரூபிக்க சிரமப்பட்டிருக்கிறரே தவிர அவர் எடுத்தாண்ட கருத்துக்களைப்பற்றி பேசவே யில்லை. அதுக்குப் பிறகும் அவர் எழுதி இருப்ப தாகத் தெரியவில்லை. இந்த நிலையில் புதுமைப் பித்தனுக்கும் பிறகு பல நூறு புதுக்கவிதைகள் வெளி வந்துவிட்ட பிறகு அவைகளை சிதம்பர ரகுநாதனைப்போல ஒதுக்காமல் (ஒதுக்க முடியா மல்) அவைகளை பொருட்படுத்த வேண்டிய அவ சியத்தை கவிதை ரசிகர்கள் உணர்ந்திருப்பதை இந்த கட்டுரை காட்டுகிறது. எனவே தான் பொறுப்புணர்ச்சியுடன் அவர் எழுதி இருப்ப துக்கு என் பாராட்டு.

ஆனல் அதுக்குமேல் பாராட்டும்படியாக அவர் கட்டுரை எனக்கு வாய்ப்பு அளிக்க வில்லை. தாமரை பிப்ரவரி ஏட்டில் சி. மணிக்கு எழுதிய பதிலில் 'புதுக்கவிதைகளின் உள்ள டக்கத்தின் தன்மையையும் அதன் சமூக அடிப் படையையும் இணைத்துச் சுட்டிக் காட்டிய முடி வுகளைப்பற்றி அவர் (சி. மணி) எதுவும் கூற வில்லை என்றும் 'தத்துவார்த்த ரீதியிலோ கொள்கை ரீதியிலோ இக்கடிதத்தில் எந்தப் பிரச்னையையும் எழுப்பவில்லை' என்று எழுது கையில் ஏதோ சி. மணிக்கு இதைப்பற்றி ஆட் சேபணை இருக்கவில்லை போலும் என்று நினைக் கவும் அல்லது அவை சம்பந்தமாக தன்னேடு வாதுக்கு வர அவர் துணியவில்லைபோலும் என்று நினைக்கவும் படிப்பவர்க்கு ஏற்படும்படி யாக சாதுர்யமாக குறிப்பிட்டிருக்கிறர். சி. மணி முதன்மையாக ஒரு படைப்பாளி. ஆகவே ஒரு விமர்சகர் சொன்ன எல்லாத்துக்கும் பதில் சொல் லித் தீரவேண்டும் என்பதில்லை. பிழையை காட் டவும் இரு பிரச்னைகளை சுட்டவும்தான் தனக்கு நோக்கம் என்று குறிப்பிட்டே எழுதியிருக்கிறர். தத்துவரீதியாக, கொள்கை ரீதியாக மணி எழுப் பாவிட்டாலும் வானமாமலையின் தத்துவ, கொள்கைதான் சரியானது என்று ஆகிவிடாது.

வானமாமலையின் தத்துவ ரீதி, கொள்கை ரீதியான, புதுக்கவிதை பற்றிய பார்வையை விசாரிக்குமுன் அவர் யார் என்பதை முதலில் விசாரித்துவிட வேண்டியது அவசியமாகிறது. தாமரை நவம்பர் ஏட்டில் தற்கால இலக்கியப் படைப்புக் கொள்கைகள் சிலவற்றின் தோற்ற மும் வளர்ச்சியும் என்ற கட்டுரையில் அவர் எழுதியுள்ள சில கருத்துக்களே அவரை இனம் காட்டும்.

1. இது (சோஷலிஸ்டு யதார்த்தவாதம்) சமுதாய வளர்ச்சி விதிகளை உணர்ந்து போரா டும் வர்க்கங்களுக்கிடையே தனது ஸ்தானம் மிக முற்போக்கான சமூகப்புரட்சி சக்திகளுடன் தான் என்று தீர்மானித்து சமூக உண்மையை இத்தெளிவின் நோக்கில் சித்தரிப்பதாகும்.

2. சோஷலிஸ்டு சமுதாயத்திற்காக போரா டுவதில் எவ்வித தியாகத்திற்கும் தயாரானவனை இருந்ததை சோஷலிஸ்டு யதார்த்த வாதிகள் சித்தரித்தனர்.

3. இவர்களுக்கு கம்யூனிஸ்ட் தத்துவத் தில் உறுதியான ஈடுபாடு உண்டு.

4. இன்றைய வர்க்கப்போராட்டத்தில் இவர்கள் முற்போக்கு வர்க்கச் சார்புடையவர் கள்.

5. இவர்களுடைய மனித நேசம் கற்பனை மனிதனிடம் கொண்டுள்ள கழிவிறக்கமல்ல; போராடும் மனிதனேடு ஒன்றி நிற்பதாகும்.

6 தனிமனித உணர்வையும் அகவய மன உளைச்சல்களையும் போற்றும் இலக்கியப் போக்கு களை இவர்கள் நிராகரித்து முறியடிக்கப் போகி ருர்கள்.

7. மனிதனை மனிதன் சுரண்டும் நிலைமை யையும் விளக்கி அவற்றை ஒழித்து சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முடியும் என்ற நம்பிக் கையை இவர்களது படைப்புகள் மக்களுக்கு ஊட்டுகின்றன.

வானமாமலைக்கு நியாயம் செய்ய வேண் டும் என்ற அக்கறையில் நான் தேவைக்கு மீறியே மேற்கோள்களை அள்ளி விட்டுவிட்

டேன். இந்த மேற்கோள்களிலிருந்து ஒரு துளி சந்தேகமும் ஏற்படாது, இல்லை. அவர் மார்க்ஸிய சோஷலிஸ்டு யதார்த்த விமர்சகர். முத்திரை போட்ட நோக்கு. எனவே இந்தவித அழுத்தமான முத்திரை குத்திக்கொண்டவரிடம் சி.மணி என்ன கொள்கை பிரச்னையை விவாதிக்க தேவை இருக்கிறது? ஆனால் வானமாமலையைப் போல நானும் இலக்கியம் படிப்பதிலும் மதிப்பிடுவதிலும் ஒருவித பார்வையை கொண்டவன் ஆதலால் அவரோடு தர்க்கிக்கத் தோன்றுகிறது. அதோடு இன்னொன்றும்கூட. இந்த பார்வைக்காரர்கள்தான் இப்போது தமிழ்நாட்டில் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். வேறு பார்வைக்காரர்களோ இன்னும் தளைதட்டுகிறது, சந்தம் சரியாக அமையவில்லை. எதுகை மோனை இல்லை என்று வடையைத் தின்பதுக்கு பதில் துளையை எண்ணுகிறவர்களாகவே, தொல்காப்பிய உரையாசிரியர்கள் இழுத்த கோட்டில் நின்று மேலே நகரத்தெரியாமல், யாப்பை விலங்காக்கிக்கொண்டு, படைக்கவும் இயலாமல் ரசிக்கவும் தெரியாமல் 'பான்ஸாய்' மனிதர்களாக இருக்கிறார்கள். எனவே இந்த சுறுசுறுப்புக்காரர்களை கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

மார்க்ஸீய பார்வை என்பது அரசியல் பார்வை. அதை ஒட்டிய அநுசரித்த இலக்கியப் பார்வைக்கு சோஷலிஸ்டு யதார்த்தப் பார்வை என்று பெயர். இந்த சோஷலிஸ்டு யதார்த்தப் பார்வைக்கும் சோஷலாஜிகல் பார்வைக்கும் சம்பந்தம் இல்லை. சிலர் இந்த இரண்டையும் தெரியாமல் குழப்பியோ அல்லது தெரிந்தே குழப்ப வேண்டும் என்றோ பேசி எழுதி வருவதை பார்க்கிறோம். அவர்களுக்கு சோஷலிஸ்டு யதார்த்தம் பற்றிய போதிய விஷய ஞானம் இல்லாததால் இருக்கும். அல்லது அதை வெளிப்படையாகச் சொன்னால் தங்களைப் பற்றி ஒருவிதமாக நினைத்து விடுவார்களோ என்று பயந்து பாதுகாக்கும் காவலாக பூணைக்கும் தோழனாக இருக்கும் மனப்பான்மையில் சமுதாயப் பார்வை என்று சொல்லிக்கொண்டு நடுவே நடுவே, வர்க்க, பிரபுத்துவ நசிவு, இப்படிப்பட்ட வார்த்தைகளையும் போட்டுக்கொண்டு கலப்படப் பார்வை காட்டுவதாக இருக்கும். ஏன், வானமாமலையின் கட்டுரையிலேயே இந்த குழப்பம் தெரிகிறது. அரசியல் சரித்திர, பொருளாதார ரீதியான சில தத்துவக் கருத்துக்களை அங்கங்கே சில பாராக்களில் விளக்கி இருக்கிறாரே தவிர கவிதைகளை எடுத்துக்கொண்டு சோஷலிஸ்ட் யதார்த்த சித்தாந்தப்படி ஆராய்ந்து பார்க்கவில்லை வாழ்க்கை, சாவு, பாலியல், நிராசை, மனமுறிவு, கூடார்த்தம், உவமை உருவகம், உணர்வு தாரை பற்றித்தான் இருக்கின்றன. அவர் கொள்கைக்கு 'ஒவ்வாத 'தனி மனிதம்' என்பதுமட்டும் அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்டவைகளை வைத்து பார்த்திருக்கிறார்.

இன்னொரு விஷயமும் கூட மேலே குறிப்பிட்டவைகளைவிட அதிக முக்யத்துவம் கொடுத்திருப்பது ஃப்ராய்டியத்துக்குத்தான். சொல்லப்போனால் அவர் ஃப்ராயிடிய அகவய உளைச்சல் பார்வைபற்றியே பெரும்பாலும் கவனம் செலுத்தியிருக்கிறார். அந்த பார்வையே தவறானது, கெடுதலானது என்பது அவர் கருத்து. இது சம்பந்தமாக அவர் குறிப்பிடுகையில் என் 'புதுக்குரல்கள்' புத்தக முன்னுரையிலிருந்து மேற்கோள் காட்டுகையில் ஒரு தவறான முடிவுக்கு வந்திருக்கிறார். சிறிய விஷயம்தான் இருந்தாலும் தப்புதானே. ஃப்ராயிடின் கருத்துக்களால் மேல்நாட்டில் கலைஞர்களது அக நோக்கு இதுவரை கண்டிராதஅளவு விரிவும் ஆழமும் பெற்றது என்றும் 1920—30க்கால மேல்நாட்டு புதுக்கவிதைக்கு ஒரு உந்துதல் ஃப்ராயிடிஸம் மார்க்சியம் இரண்டிலிருந்தும் மனோதத்துவ, லோகாயத தத்துவ ரீதியாக ஏற்பட்டதுபோல் தேசியம் பாரதிக்கு உந்துதல்தந்தது என்றும் நான் எழுதியிருப்பதை வைத்து நமது கவிஞருக்கு ஃப்ராயிடிஸம்தான் அகநோக்கை ஆழமும் விரிவும் உடையதாகச் செய்தது என்று நான் கூறுவதாக எப்படி முடிவு கட்டினாரோ. அந்த பதினாறு பக்க முகவுரையில் வேறு எந்த இடத்திலும் ஃப்ராய்டு செல்வாக்குதான் புதுக்கவிதைக்காரர் அத்தனை பேருக்கும் என்றும் நான் சொன்னதாக ஒருவரியில்லையே. ஐயோ! பிச்சமூர்த்திக்கும் ஃப்ராய்டுக்கும் சம்பந்தமே இல்லையே! அதோடு மட்டும் நிற்கவில்லை வானமாமலை. 'ஆகவே இக்கவிஞர்கள் மார்க்சிஸத்தினால் உந்துதல் பெறவில்லை என்பது தெளிவு என்று கூட்டிக் கழித்து எழுதிவிடுகிறார். நான் சொல்லாததை வைத்து தன் சௌகர்யத்துக்கு வாதாட வசதிக்கு ஒரு முடிவு கட்டிக்கொண்டு விவகாரம் பேசுவதைவிட வானமாமலை இந்த கவிகள் மார்க்ஸீயத்தால் உந்துதல் பெற்றார்கள் பெறவில்லை என்பதை தானே ஆராய்ந்து பார்த்து காட்டி இருக்கவேண்டும். போகட்டும் வானமாமலையின் பார்வையை கவனிப்போம் சுருக்கமாகத்தான்.

இலக்கியம் படைப்பதுக்கும் மதிப்பிடுவதுக்கும் எத்தனையோ அணுகுதல்கள் உண்டு. படைக்க ரொமாண்டிக், யதார்த்த, காவ்ய, சர்ரியலிஸ, எக்ஸிஸ்டென்ஷியலிஸ, மார்க்ஸீய முதலியவை. மதிப்பிட தத்துவ, சமுதாய, சரித்திர, உளவியல், அழகியல், மொழியியல் முதலிய பார்வைகளுண்டு வானமாமலைக்கும் எனக்கும் இவைகளில் பிடிக்காதவை இருந்தாலும் இவை அநுபவத்தில் செயல்படுத்தப்பட்டவைகள். இலக்கியத்தை இலக்கியமாக பார்ப்பதைத் தவிர, மற்ற பல தற்கால சாஸ்திரங்களுக்கு உரிய இவைகளையெல்லாம் இலக்கியத்தில் பொருத்திப்பார்ப்பது சகஜமாகிவிட்ட பிறகு இவைகளை புறக்கணிக்க முடியாதுதான். ஆனால் ஒரு பார்வையை, தனக்குச் சபலமான குதிரைப்பட்டைக்கண் பார்வையைக் கொண்டு மட்டும் அளவிட்டு, அதுக்கு அதிலே தான் விரும்பிய அளவு விரும்பிய விதமாக இல்லாது போனால் 'சொறிந்து, சுடம் காணுகிற சொறி

சிரங்கு நோயாளி பிறருக்கு அச்சுகம் இல்லை யென்று சர்வம் கொண்டு கூறுவது போல இருக்கிறது இவர்களது அகஉலக. வெளியீடு கள் எல்லாம்' என்று தள்ளிவிட முடியாது. ஏன் அவர் கூறிய இந்த வரிகளை அவரது முறைக்கே உபயோகப்படுத்தலாம். ஃபிராயிடு என்றுலே 'காம விவகாரங்களே மனித அடிப் படை உந்துதல் சக்தி' என்றால் மார்க்ஸ் என்றுலே 'வயிற்றுப்பசி விவசாரங்களே மனித அடிப்படை உந்துதல் சக்தி' என்று தள்ளிவிட முடியும். காமமும் பசியும் மனிதனுக்கு இரண் டும் ஒரேவிதமான சொறி சிரங்குதான். வென் னீர் பானையைப் பார்த்து கெட்டில் சிரித்ததாம் நீ கருப்பு என்று! அந்த கதையாக இருக்கிறது இந்த வாதம் !

என் சம்பந்தப்பட்ட மட்டில் இந்த இரண் டுமே இலக்கியத்தில் இரண்டாம் பக்ஷமான வைதான் அடிப்படை உந்துதல்சக்தி இந்த இரண்டும் இல்லை, வாழ்க்கையில் பசியை யும் காமத்தையும் அடக்கிய மனிதன்தான் வெற்றி பெற்று வாழ்வை இன்பமானதாக ஆக்கிக் கொண்டிருக்கிறன். அது பற்றிய விசாரணை பெரிய தத்துவ விஷயங் களுக்கு இழுத்துக் செல்லும. இங்கு இடம் இல்லை. இலக்கிய மதிப்பீட்டில் இந்த இரண்டில் எந்த ஒன்றுக்கு அழுத்தம் தந்தாலும் இலக்கிய மதிப்பீடு சரியாகாது. தப்புப் படிக் கல் நிறுவைதான் காட்டும் சி. மணி என்ற படைப்பாளி ஃபிராயிடீய பார்வையில் படைத் தது தவருகும் என்று மார்க்ஸியப் பார்வையில் வானமாமலை என்ற படிப்பாளி சட்டாம்பிள்ளைத் தனம் காட்டுவது வேடிக்கையாக இருக்கிறது ! இருந்தாலும் அவர் காட்டிவிட்டார் பார்ப்போம்.

வானமாமலை 'புதுக்குரல்கள்' புத்தகத் திலிருந்து பல கவிதை வரிகளை எடுத்து வாழ்க்கை, சாவு, பாலியல், நிராசை, தனி மனிதம், கோரமான படிமம் இப்படித் தலைப்புக் களில் அவைகளை உபயோகித்து இது சொத்தை சொள்ளை என்று அடுக்கிக்கொண்டே போகிறர் அந்த தொகுப்பில் ஒரு கவிதை கூட அவருக்கு ஏற்கத்தக்கதாக இல்லை. பிச்சமூர்த் தியின் 'பூக்காரி', என் கவிதை 'அணுவுக்கு முன்' கூடவா ? இந்த சமயத்தில் ஒரு வாக்யம். மார்ச் மாத 'தாமரை'யில் சி. கனகசபாபதி புதுக் கவிதையில் சமுதாய உள்ளடக்கம் என்ற தலைப்பில் வானமாமலைக்கு பதில் தருவது போல வும், சம்பந்தப்படுத்தாமல் எழுதுவதுபோலவும் நாசூக்காக ஒரு கட்டுரை எழுதியிருக்கிறர். கனகசபாபதி சமுதாயப் பார்வைக்காரர். 'எழுத்து'வில் அவர் புதுக்கவிதை பற்றி பல கட்டுரைகள் இந்தப்பார்வையில் எழுதியிருக் கிறர். அவர் 'தாமரை' கட்டுரையில் வானமா மலையை மறுக்கும் வழியாக எழுதுகையில் 'ஒரு சில புதுக் கவிஞர்கள் எழுதியவைகளில் ஃபிராய்டிஸம் இருக்கலாம். உத்தியை மட்டும் இந்தச் சிலர் மனதில் கொண்டு எழுதியதால் வந்த நோய்க்கோளாறு இது' என்று புதுக் கவிதையில் அந்தவிதமான எழுத்துக்கும் ஒரு சூடு கொடுத்துவிட்டு, இவைகளை வைத்து எல் லோருமே ஃபிராய்டை 'வழிகாட்டியாகக் கொண்டிருப்பதாகச் சொல்ல முடியாது என்று கூறி, வானமாமலை தனக்கு ஆதாரமாக தனக்கு வேண்டியவிதமாக மேற்கோள் காட்டியது போல, புதுக்கவிஞர்களுக்கு தற்கால சமுதாய உணர்வு உண்டு, மதிப்புக் கொடுத்தே எழுதி இருக்கிறர்கள் என்று காட்ட மேற்கோள்களை எடுத்துக்காட்டி, அவை சோக ஒலமல்ல, நம் பிக்கைக்குரல் தொனிப்பவை என்று எடுத்துக் காட்டி இருக்கிறர். வானமாமலைக்கு பதில் அதில் இருக்கிறது. ஆனல் கனகசபாபதியும் பொருளாதார விளைவு, முதலாளித்துவப் பிடிப்பு போன்ற சொற்களை தெளித்து கொஞ்சம் குழப் பிக் கொண்டிருக்கிறர். 'உத்திக்காக வெளிநாட் டுக்குச் சென்றதோடு உள்ளடக்கத்தையும் அங் கிருந்தே அகப்பை அள்ளிக் கப்பரையில் கொட்டிக்கொண்டது பரிதாபத்துக்குரியதுதான் என்று புதுக்கவிதைக்காரர்களை கிண்டல் செய்து போலி அனுதாபம் காட்டுகிறர். ஆமாம் ஃபிராய்டை அவர்கள் மனதில் வாங்கிக் கொண்டது தப்புதான், மார்க்ஸியத்தைமட்டும் உள்ளடக்கமாக நாக்கிலே ருசி பார்ப்பது? அந்த கண்றுவிக்கு என்ன செய்வது ? அதுவும் வெளிநாட்டு உள்ளடக்கம்தானே? நமது ஊர் காந்திச் சரக்கு இருக்கிறபோது என்று ஒரு கேள்வி கேட்டால் என்ன பதில்? எனவே பிரசாரத்துக்காக கொடிபிடிக்கிறதை இலக் கியத்திலே காட்டாமல் இருப்பதுதான் சரியானது, தேவையானது கனகசபாபதியை இதோடு விட்டுவிடுவிட்டு பழைய விஷயத்துக் குப் போவோம்.

வானமாமலை எடுத்துக்காட்டிய கவிதை களை வைத்து ஏன் இந்த மாதிரி பார்ப்பதால் என்ன தவறு என்று இன்றைய உலகியல் நடப்பு ரீதியாக உள்ள நிலைமை கருத்துக் காட்டி இன்றைய இக்கட்டான நிலைக்கு ஏற்பத் தான் இந்தக்கவிகள் தம் அனுபவத்தை வெளி யிட்டிருக்கிறர்கள் தம் பார்வையை செலுத்தி இருக்கிறர்கள். என்று காட்ட முடியும். உதாரணத்துக்கு ஒன்றைமட்டும் எடுத்துக் கொண்டு பார்ப்போம். வானமாமலை, கனக சபாபதி இருவருமே குறிப்பிட்டுள்ள ஒரு கவிதை. மா. இளையபெருமாள் எழுதியது. 'புதுக் குரல்கள்' புத்தகத்தில் முதல் கவிதை :

எதற்கோ?

நூலுடுப்போம் | பட்டுடுப்போம் | என்றுலும் |
ரகசியமாய்த் |
தோலுடுத்த நிலை விரும்பும் | வாழ்வென்று
காட்டுதற்கோ |
பெரும்பித்தா | தோலுடுத்து ஆடுகின்ருய்?

நீ ஒருவன் | உளன் என்பர் | இல்லை என்பர் |
எல்லோரும் |
உன்னிடத்தில் வரவேண்டும் | என்பதற்கோ |
சுடுகாட்டை |
உன்மத்தா | உறைவிடமாய் நீ கொண்டாய் |

கடிகைகத்துடிக்கும் | கடிபடற்கும் இடம்
கொடுக்கும் |
பாம்பும் படமும் | படுத்துகின்ற
பெரும்பாட்டைக் |
காட்டுதற்கோ | பித்தனே | படம் விரித்து
ஆடுகின்ற |
பையரவை நீ பூண்டாய்?

பெண் தூக்கிக் கதை எழுதிப் | பெண் தாக்கிப்
பாட்டெழுதிப் |
பெண் நோக்கும் வாழ்வென்ற | பேருண்மை
காட்டுதற்கோ |
உன்மத்தா | ஒரு பாதி | பெண்ணுக்கீ
வாழ்கின்றாய்?

இந்த முழுக்கவிதையில் நாலாவது பத்தியை மட்டும் எடுத்துக்காட்டி வாழ்வின் அடிப்படை இன்ப நாட்டம். அது இணைவிழைச்சுத் தன்மையுடையது என்ற ஃபிராய்டின் கொள்கை இங்கே எதிரொலிக்கக் காணலாம் என்கிறார் வானமாமலை.

கனகசபாபதியோ 'புதுக்குரல்களில் முதல் கவிதையே கோணலாக அமைந்துவிட்டது' என்று கூறி முதல் பத்தியின் தோலுடுத்து ஆடுகின்றாய்' வரிகளை காட்டி பாலியல் உந்துதலே வாழ்வின் அடிப்படை என்ற ஃபிராயிடிஸத்தின் போக்கே இது 'கடிக்கத்துடிக்கும் கடிபடற்கும். பாம்பும் படமும் என்ற பாலியல் உறுப்பையும் குறிப்பாகச் சுட்டிக்காட்டி மிகை யதார்த்தவியலோடு (ஸர்ரியலிஸம்) பாடுகிறார் என்கிறார்.

இந்த இரண்டு கருத்துக்களும் ஒருமித்த கருத்துக்கள். மொத்தம் இதில் உள்ள நாலு பத்திகளில் மூன்றில் காணும் படிமங்களையும் குறிப்புப் பொருள்களையும் கொண்டு முடிவு செய்வதைப் பார்த்தால் இந்த கவிதையே ஒரு பாலியல் கவிதை என்று சொல்வது போலப் படுகிறது. இருவரும் இந்த கவிதைக்கு சரியான நியாயம் செய்யவில்லை. ஒருவேளை தப்பாகவே புரிந்துகொண்டு விட்டார்கள் போலிருக்கிறது. பாலியல் படிமம் இதில் மூன்றும் பத்தியில் இருக்கிறதுதான். ஆனால் அது மொத்தகவிதையின் தத்துவ வெளியீட்டுக்குமுன் அடங்கிவிடுகிறது. பிதுக்கிக்கொண்டு வரவில்லை. இதில் வெளி உணர முடிகிற தத்துவம்தான் என்ன? சிவனை கேட்கிற கேள்வியாகத் தோன்றும் ஒரு பொருள் கொண்ட இந்த கவிதையில் நான்கு கேள்விகள். தோலுடுத்து ஆடும் சிவன், சுடுகாட்டில் கோயில் கொண்டிருப்பவன், பாம்பை அணியாகக் கொண்டவன், பெண் பாதியானவன் என்ற நான்கு அம்சங்களில் அவனை உருவாக்கி ஏன் அப்படி என்று பிறரை கேட்பதுபோல், தன்னையே கேட்டுக் கொள்ளுவதுபோல், ஏன் அதுக்கு பதில் சொல்லிக் கொள்வதுபோல் உள்ளது கவிதை. இந்த கவிதையில் இருள்மை (அப்ஸ்கியூரிட்டி) என்று சொல்ல எதுவும் இல்லை. மனிதன் பட்டும் நூலும் ஆன உடைகள் அணிந்தாலும் தோலால்ஆன உடல்வாழ்வு தான் உண்மை மனிதனுக்கு. மனிதன் எங்கு எவ்விதமாக வாழ்ந்தாலும் சுடுகாட்டில்தான் அவன் வாழ்வு அடங்குகிறது. தீங்கு செய்யவும் தீங்குக்கு இலக்காவதும் மனித வாழ்வில் நியதியாகிவிட்டது. தாங்குதலுக்கும் தாக்குதலுக்கும் உள்ளாகிறவள் பெண் என்ற கருத்துக்களை வைத்து, சிவனை உருவகப்படுத்தி, அதைவிட-சிவ உருவத்திலிருந்து அந்த அர்த்தங்களை வாங்கி, சிவத்தின் சக்திகளை, தன்மைகளைகாட்டி, ஏன்-சிவத்தை ஒரு குறியீடாக ஆக்கி, அல்லது கண்டு மனித வாழ்வு நிலையை, சுபாவத்தை தன் பார்வையில் நிதானிக்கிறான் கவிஞன். இது தத்துவக்கவிதை பாலியல் கவிதை இல்லை. அப்படி தத்துவ உள்ளடக்கம் கொண்ட கவிதையில் படிமங்கள், குறியீடுகள் இடம் பெறும். இவைகள் பல குண அம்சங்கள் கொண்டதாக இருக்கும். ஆனால் கவியோ பிரஸ்தாப சந்தர்ப்பத்தில் எந்த குண அம்சத்தை அழுத்தி தன் உத்தேசக் கருத்துக்கு இயைய பொருத்திப் பார்க்கிறான் என்பதுதான் முக்கியமாகும்.

இந்த கவிதையில் கடைசி பத்தியை காட்டி 'இன்ப நாட்டம்', 'இணை விழைச்சுத் தன்மை' என்கிறார் வானமாமலை. மொட்டைத் தலைக்குர் முழங்காலுக்கும் முடிச்சுப்போட முற்படும் வேடிக்கை காரியம் அவர் செய்வது. இந்த கவிதை வரிகள் என்ன சொல்கின்றன? பெண்ணை உயர்த்திப்பேசி (சீதை, சாவித்திரி போல) ராமாயணம், சத்தியவான் கதைகளும், பெண்ணை இழித்துப்பேசி பட்டினத்தார், சித்தர்கள் எழுதிய பாட்டுகளும் இருந்தும் 'தோலுடுத்த நிலைவாழ்வு' போல 'பெண் நோக்கும் வாழ்வு' என்று பெண் இன்றியமையாதவள் ஆணுக்கு என்பதுதான் உணர்த்தப்படுவது. ஆணுக்குப்பெண் இன்பநாட்டம் இணைவிழைச்சு தன்மை உறவுக்கு மேல் இன்றியமையாமை இல்லை என்று வானமாமலை சொல்லமாட்டார் என்று எடுத்துக் கொள்கிறேன். அவ்வளவு 'சிம்பிளாக' ஆக்கிவிடமுடியாது ஆண்-பெண் உறவு வாழ்க்கையை. வயிற்றை வைத்து வர்க்கப்போராட்டம் அளவுக்கு மனித உறவை மலினப்படுத்தும் பார்வை எவ்வளவு கோளாறனதோ அதே அளவு கோளாறுதான் இந்த வித ஆண்-பெண் உறவுப் பார்வைக்கும். இந்த கவிதை வரிகளில் மனிதவாழ்வு ரீதியாக, மானிட இயல்பு, சுபாவ ரீதியாக, நெறி ரீதியாக, பயன் ரீதியாக, செயல் ரீதியாக, கடமை ரீதியாகஎவ்வளவு இரண்டுபால்களுக்கும் தொந்தம் இருக்கிறது, இரண்டு தன்மைகளும் ஒன்றுக்கொன்று சேர்ந்து, விட்ட குறை நிரப்பி வாழ்வை முழுசாக்குபவை என்பதைக் காட்டவே அர்த்தநாரீஸ்வர படிமமாக சிவசக்தி சொரூபமாக பரம்பொருள் அமைந்திருக்கிறதாக சுட்டிக் காட்டப்படுகிற இடத்தில் பிராய்டின் இணை விழைச்சுத் தன்மையின் எதிரொலி காண்கிறாராமே இந்த சோஷலிஸ்ட் விமர்சகர்!

இவருக்கும் ஒரு படி மேலே போகிறார் கனகசபாபதி. 'கடிக்கத்துடிக்கும் கடிபடற்கும்

இடம் கொடுக்கும் பாம்பும் படமும்' என்பது பாலியல் உறுப்பையே சுட்டிக்காட்டும் மிகை யாதார்த்த வியல்போக்கு என்கிருர். பிராய்டி ஸத்துக்குப் போயா இதை பார்க்கணும்? 'பரியா சம் போலவே கடித்த பாம்பு' 'கருவிளை கழனி' 'நாறும் குருதிச் சலதாரை' 'மார்பின் மூளைத்த சிலந்தி விம்மி' என்றெல்லாம் நம் பழம் கவிகள் சொல்லிய மரபில் வராதா இது! இல்லை, அன்றைய இந்த உருவகங்களையும் பாலியல் உறுப்புகளைச் சுட்டிக்காட்டுவதால் இன்றைய ஃபிராயிடுக்கு பொருத்தி மிகை யாதார்த்த இய லோடு பாடப்பட்டவை என்று சொல்லப் போகிருர்களா? அப்படி பார்ப்பதானுல், பிராயி டுக்கு எத்தனையோ தலைமுறைகள் முந்திய காலத்திய இந்த கவிஞர்கள் வழியில் ஃபிராயி டின் கருத்துக்கள் உருவாகி இருப்பதாக சொல லக்கூடாது? தற்கால கவிஞர்களுக்கு ஃபிராயி டின் பாதிப்பு இருப்பதாக ஆரம்பம் கொள்வதை விட இந்த மாதிரி படிம, படிம வியல், நோக்கு இவைகளுக்கு நம் இலக்கியத்தில் முன் உதாரணம் காட்டி மரபுவழி உணர்த்தி இருக் கலாமே கனகசபாபதி.

'தோலுடுத்தநிலை...' என்று வரும் நாலு வரிகளை 'பாலியல் உந்துதலே வாழ்வின் அடிப் படை என்ற ஃபிராயிடிஸத்தின் போக்கு காண் பதாக எப்படி செல்லப்புடுகிறதோ? தோல் என்பதுக்குமேல் வேறு எந்த வரியும் அது சம்பந்தமானதாக இல்லை. அந்த ஒரு சொல்லும் கூட பாலியல் தொனிப் பொருளாக அங்கே பயன்படுத்தப்படவில்லை. 'தோல் வியாபாரம்' என்று சொல்லும் இடத்திலாவது அந்த தொனி ஏற்படலாம். எனவே இந்த கவிதைக்கு ஃபிரா யிடிஸத்தை சம்பந்தம் இல்லாமல் பொருத்திப் பார்த்திருக்கிருர்கள் இருவரும். இந்த கவிதை யில் மையப்பொருளாக, பரம்பொருளின் லீலைக்கு அர்த்தம் என்ன என்று கேட்பதுபோல வெறும் கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு நின்றுவிடா மல் பதிலையும் கேள்வியிலேயே அடக்கிக் கொண்டு ஒரு முக்யார்த்தம் காண்கிறது. இந்த முக்யார்த்தம் புதுசானது இல்லைதான். ஆனுல் பழசை புதுதோரணையில் காண்கிருேம். யமனில் பழயயமன் புதிய யமன் என்று கிடையாது. அடிப்படை பேருண்மையில் புதிய பேருண்மை பழய பேருண்மை என்று கிடையாது. ஏன் இப்போது சோஷலிஸ்டு யதார்த்தவாதிகள் தம் பட்டம் அடிக்கும் 'மனித நேசம்' (ஹூமனிஸம்) பதிமூன்று, பதினுன்காம் நூற்றுண்டு காலத்தில் ஐரோப்பிய மறுமலர்ச்சி இயக்கத்தோடு தோன்றி நிலபிரபுத்துவத்தை ஆதரித்த சமய சமூக கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக இருந்தது' என்று வானமாமலையே எழுதி இருப் பதுபோல் பழசைத்தானே புது மெருகிட்டு காட்டுவதாக இருக்கிறது.

அடுத்தபடியாக உலக இலக்கியத்திலும் தமிழ் இலக்கியத்திலும் இரண்டு மரபுகள் ஆரோக்கிய மரபு நோயுற்ற மரபு என்று இரண்டு இருப்பதாகவும் மனிதனது வாழ்க்கை யையும் பண்பாட்டையும் உயர்த்தும் மரபு. வாழ்க்கையை விரக்தியோடு காண்பது சாவை நேசிப்பது. தன்னைப்பார்த்து இரக்கம்கொண்டு மக்களை காணுமல் தன் நோயுற்ற மனதின் வழியே உலகத்தை காண்பது என்று விளக்கி புதுக்கவிஞர்கள் பிந்தினதை தேர்ந்தெடுத்துள் ளார்கள் என்று முடிவுகூறி இருக்கிருர். புதுக் கவிதைகளை எடுத்துக்கொண்டு எது ஆரோக் கிய மரபு, எப்படி என்று காட்ட முற்பட நீண்ட தொடர் கட்டுரைகளே எழுதவேண்டும். இங்கே அதைச் செய்யமுடியாது. பிறகு பார்க்கலாம்.

இவரது கருத்தில் சோஷலிஸ்ட் யதார்த்த வாதம் தான் ஆரோக்கிய மரபில் வருவது, மற்றவை இல்லை என்பதை அவர் எழுதியுள்ள 'வருங்காலம் சோஷலிஸ்ட் யதார்த்த வாதத் திற்கே என்பதில் ஐயமில்லை' என்ற வரிகளை வைத்து முடிவு கொள்ளலாம். அதுக்கு அவர் ஒரு ஐம்பதாண்டு ரஷ்ய முறை அரசியலமைப்பு சாதனையை காட்டக்கூடும். இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் அங்கு ஒரு ஆரோக்கிய மரபு வழியில் மனித வாழ்க்கையில் வாழ்க்கை முறையும் பண்பாடும் உயர்ந்து ஒரு உச்ச கட்டத்தை அடைந்திருப்பதாக அவர் கணித்துவிட்டார் போலும். அதனுல் அந்த அளவுகோலை வைத்து அவர் மற்றதை பதம் பார்க்கிருர். நாமும் அந்த அளவுகோலை வைத் துப் பார்க்கலாம் அந்த சாதனையை. ரஷ்ய கவிகளை எடுத்துக்கொண்டு அவர்கள் கவிதை களில் இந்த பாதிப்பு எப்படி காண்கிறது, ஆரோக்கியமா? நோயா அவைகளில் காண் பது என்று பார்க்கலாம். ரஷ்யப் புரட்சிக் கவி மூலவரான விளாடிமீர் மயகாவ்ஸகி (1893—1930) எழுதிய நான் என்ற கவிதை:

'என் மிதிபட்ட ஆத்மாவின் நடைபாதை யில் பைத்யங்களின் காலடிகள் அபக்குவ, மூர்க்கச் சொற்களின் சுவடுகளை நெய்கின்றன. நகரங்கள் தூக்கிலி — மேகச் சுருக்கில் கோபுரங் களின் திருகிய ஸ்தூபிகள் இறுகுகையில் நான் தனியே போகிறேன் புலம்ப. அந்த குறுக்குச் சாலைகள் போலீஸ்காரரை சிலுவை அறைந்தி ருக்கின்றன.' இதுதான் கவிதை. இந்த கவிதை 1912-ல் புரட்சிக்கு முன்பு எழுதப்பட்டது. அதுக்காக, இந்த கவிதையை வைத்து மயகாவ்ஸ்கியை தள்ளிவிட மாட்டார்கள் சோஷலிஸ்டு யதார்த்தவாதிகள் என்று நம்பு கிறேன். இந்த கவிதையை தன் பத்தொன்பதாவது வயதில் எழுதிய மயகாவ்ஸ கிக்கு உலகமே சிறையாகப்படுகிறது. ஸெயிண்ட் பீட்டர்ஸ்பர்க் நகரத்தையே தூக்கு மரமாக பார்க்கிருன் கவி நகர ஸ்தூபிகள் எல் லாம் அதில் தொங்கும் பிணங்களாக தோற்றம் அளிக்கிறது. தான் கைதியான, ஒரு வருந்தும் உணர்வு கொண்டிருக்கிருன். மயகாவ்ஸ்கிக்கு எதுவும் கொடுமையும் சாவுமாகவே படுகிறது. போலீஸ்காரர்கள்கூட சித்ரவதைப்பட்டவர் களாகவே இருக்கிருர்கள்.

இந்த கவிதை, வானமாமலை எந்தக் குறைகளுக்காக புதுக்கவிதைக்காரர்களை தூக்கிலிட விரும்புகிருரோ அத்தனை அம்சங்களையும் அடங்கி உள்ள கவிதை. 'வாழ்வே சாவின் பாதை, சாவுக்கோயிலின் சங்கீதம் அழைக்கின்றதென்று' அழுகுரலை புதுக்கவிதைக்காரர்கள் பாடுவதாக சொல்கிருரே மயகாவ்ஸ்கி வேறென்ன பாடி இருக்கிருன்? சிவனை மயானச்சாமியாகக் காணும் நம்பிக்கை நம்நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வருவதாக கேலி செய்து 'சாவு வேண்டும், சம்போகம் வேண்டாம்' என்று பாட என்ன 'இன்டலக்சுவலிசம் வேண்டிக்கிடக்கிறது' என்றும் தனித்து நின்ருலும் சாவு கூடிப் போராடினுலும் சாவு என்ற தத்துவத்தை இப்படி உருவகமாக இவர் கூறுகிருராம்' என்றும் 'வாழ்வையும் சாவையும் பற்றி இவர்களது அகவயத் தத்துவங்கள் இவை, உலக மறுப்புக் கருத்துக்கள் என்றெல்லாம் அடுக்கி இருக்கிருரே, புதுக்கவிஞர்கள் பற்றி சாடி இருக்கிருரே, ஸெயிண்ட் பீடர்ஸ்பர்க் நகரையே தூக்குமரமாகவும் ஸ்தூபிகளை எல்லாம் சிலுவையில் அறைபட்டவர்களாகவும் சித்தரித்து இருக்கிருனே. ஒரு நகரத்தையே மயானமாகப் பார்க்கிருனே பிணங்களாக தொங்குவதாக படுகிறதே அவனுக்கு. அந்த மயகாவஸ்கியின் அகவயத் தத்துவத்துக்கு, சாவு பற்றிய பார்வைக்கு என்ன சொல்வார் சோஷலிஸ்ட் யதார்த்தவாதி? 'வாழ்க்கையில் நிராசை இவர்கள் சிறப்பான தன்மைகளுள் ஒன்று, நம்பிக்கை வறட்சியும் சோக ஓலங்களும் படைப்புகளில் காணப்படுகின்றன' என்று புதுக்கவிஞர்கள்பற்றி சொல்கிறவர் 'என் மிதிபட்ட ஆத்மாவின் நடைபாதையில்......' என்ற வரிகள், 'நான் போகிறேன் புலம்ப' என்ற வரிகளுக்கு என்ன சொல்வார் மேற்படியார்? 'இந்த நம்பிக்கை வறட்சிக்கு தனிமனிதம் தான் காரணம் எல்லையற்ற சுதந்திரத்துக்காக மனத்தினுள் போராட்டம் நடத்துகிறவர்கள் கற்பனையிலே சுதந்திரத்தை அனுபவிப்பவர்கள் புதுக்கவிஞர்கள்' என்கிறவர் மயகாவ்ஸ்கி தனிமனிதனுக தன்னைச் சுற்றி சிறையாகப் பார்த்து மனம் உளைகிறபோது அவன் எந்த கற்பனையில் சுதந்திரத்துக்காக போராடுகிருன் அனுபவிக்கிருன் என்று சொல்வார்? இதில் உள்ள கூடார்த்தம் வானமாமலைக்குப் புரியாவிட்டால் நான் அதுக்குப் பொறுப்பல்ல. கடைசியாக, 'புதுக்கவிஞர்கள் படிமம் எல்லாம் தூலத்தை சூக்குமத்தால் விளக்க முயன்று சூக்குமப்படிமங்களால் வாசகனை மயக்குவதும் சாவோடும் பிணத்தோடும் அருவருக்கத்தக்கனவற்ருேடும் தொடர்பு உடையனவாக இருக்கும்' என்று சில படிமங்களை மேற்கோள் காட்டி எறிச்சலானதாக கருதி இருக்கிருரே, இந்த ஒரே கவிதையில் வரும் படிமங்கள் அத்தனைக்கும் என்ன சொல்கிருர்? மிதிபட்ட ஆத்மா, பைத்தியங்களின் காலடிகள், அபக்குவ, மூர்க்க சொற்கள், தூக்குமர நகரம், மேகச்சுருக்கில் இருக்கும் கோபுர, ஸ்தூபிகள், முச்சந்தியில் சிலுவை அறைப்பட்ட போலீஸ்காரர்கள், இத்தனை படிமங்களும் குளுகுளுவென்று இருக்கிறதா சோஷலிஸ்ட் விமர்சகருக்கு?

ஆக இந்த ஒரு கவிதையே போதும் அந்த விமர்சகருக்கு பதில் கொடுக்க. ஆனுல் அவர் இது 1912ல் எழுதப்பட்டது என்றும் புரட்சிக்கு பின் வந்ததைப் பாரு என்று எனக்குச் சொல்லலாம். அதையும் பார்ப்போம். ரஷ்யப் புரட்சியின் பங்கு கொண்டு பதினேழு ஆண்டுகளுக்குப் பின் 1930ல் மயகாவ்ஸ்கி தற்கொலை செய்து கொண்டான். எதனுல்? காதல் முறிவால். 'ஒரு உண்மையான சோவியத்கவிஞன் காதலைப்பற்றி எழுதி தன்னை வருத்திக்கொள்ளக் கூடாது' என்று தனக்கு சொல்லிக்கொண்டவன் இந்த காரியத்தை செய்தான். அவன் தனிமனிதனுக இதைச் செய்தான். அவன் அகவயப் பார்வை இதிலிருந்து தெரிகிறது. மயாகாவ்ஸ்கி காதல் முறிவால் தற்கொலை செய்து கொள்ளவில்லை, இதுக்குமுன் அடிக்கடி காதல் சங்கடப் பட்டிருக்கிருன், சுட்டுக் கொள்ளவில்லை, அவனுக்குள்ளே உண்மையான கவிதை எழுதுவதுக்கும் கட்டாயத்தின்பேரில் கவிதை எழுதுவதுக்கும் போராட்டம் நடந்து கொண்டிருந்து இருக்கிறது, தான் கண்டிக்கப்பட்டதை தாங்க முடியவில்லை, அதனுல்தான் என்று ஒருகருத்தும் உண்டு. காதல் முறிவால் அவன். தற்கொலை செய்து கொண்டான் என்பதனுல் பாலியலுக்கு பலியானவன்தானே' அவன், வேறுவிதமாக இருந்தால் தனிமனிதனுக சுதந்திர வெளியீட்டுக்காகப் போராடிய மனநிலையில் புழுங்கி தன்னை

பிரேஜில் கவிதை

ஆப்பிள்

பான்யுல் பண்டிரா

[தமிழாக்கம்: **கி. அ. சச்சிதானந்தம்**]

உன்னை
ஒரு கோணத்திலிருந்து பார்க்கும் போது
உலர்ந்துபோன ஒரு முலை போலிருக்கிருய்
மற்ருெரு கோணத்திலிருந்து பார்க்கும்போது
இன்னும் கொப்பூழ்க்கொடி தொங்கிக்
கொண்டிருக்கும்

வயிறுபோல் இருக்கிருய்

தெய்வீக காதல்போல் நீ சிவப்பாய் இருக்கிருய்

உன்னுள் இருக்கும் சிறிய விதைகளில்
ஒரு மாபெரும் வாழ்வு
துடித்துக் கொண்டிருக்கிறது
முடிவில்லாமல்

ஏழ்மையான ஓட்டல் அறை ஒன்றில்
ஒரு கத்தியின் பக்கத்தில்
எளிமையாய் இருக்கிருய்

அழித்துக்கொண்டான் வெளிச் சூழ்நிலையை தாங்க முடியாமல்தான் என்பதுதானே. எதுவோ மயகாவ்ஸ்கி மனமுறிவால் தன்னை அழித்துக்கொண்டான். அவன் சாகுமுன் எழுதிய ஒரு கவிதை என் குரல் உச்சியில்.

ஆனல் நான் என்னை கீழ்ப்படுத்திக்
கொண்டேன்
என்சொந்தக்கவிதையின் குரல்வளைமீது
என்குதிக்காலை வைத்து அமுக்கினேன்.

இன்னொரு முடியாத கடைசி கவிதை :

அவர்கள் சொல்லுவதுபோல்இந்தக்காரியம்
முடிந்தவிட்டது
காதல்படகு தன்தினசரி சுற்றுதலில்
நொறுங்கிவிட்டது.'

இந்த வரிகளை காதலுக்காகவும் வைத்துக் கொள்ளலாம். ஒரு கவி தன் கலையிடம் உள்ள பற்று பற்றியதாகவும் கொள்ளலாம். எதாயினும் மயகாவ்ஸ்கி என்றபுரட்சிக்கார ரஷ்யக்கவி தனிமனிதன். அகவயக்காரன். பிராய்டை அவர் எவ்வளவு தெரிந்து கொண்டிருந்தாரோ எனக்குத் தெரியாது. புதுக்கவிதைகளுக்கு வானமாமலை பொருத்தும் பிராய்டிய கொள்கையை அவரதுக்கும் அச்சாவாக பொருத்த முடியும். இன்றைய தமிழ் புதுக்கவிதைக்காரர்களிடம் சோஷலிஸ்ட் விமர்சகர் காணும் குறைகள் அத்தனையையும் அடக்கிய ஒரு சிறந்த கவி அவர்.

இன்னொரு ரஷ்யக்கவி பாஸ்டர்நாக். (1890—1960) தன் வாழ்நாள் முழுதும் தன் கலைக் கொள்கையை விட்டுக்கொடுக்காமல் இருக்க முயன்ற கவி. கொஞ்சம் செய்ய நேர்ந்த போதும் தான் செய்தது அவருக்கே பிடிக்கவில்லை. அவர் கவிதை வரிகள் இவை :

'யாரிடம் எல்லாம் நான் நம்பிக்கை வைத்திருந்தேனே அது திரும்ப அழைக்கமுடியாதபடி மறைந்தே போய்விட்டது. மனிதன் முழுக்க இழக்கப்பட்டுவிட்டான் என்ருல். அவன் எல்லாவற்ருலும் இழக்கப்பட்டுவிட்டான்.'

மனித மதிப்புகளின் அழிவை உணர்ந்து பேசுகிருன் கவி. இன்னொரு கவிதை

'பொறியில் சிக்கிய மிருகம்போல் வீழ்ந்து விட்டேன் நான். எங்கேயோ மக்கள், சுதந்திரம், ஒளி ; என் முதுகுக்குப்பின் வேட்டை நாய்கள் கத்தல், எனக்கோ ஓட வகையில்லை.

ஏரியோரக் கரையும் இருள் அடர்ந்த மரக்காடும், வீழ்த்தப்பட்ட மரத்தின் பொடி அடிமரமும், எந்தப்பக்கமும் தப்பியோடல் அசாத்தியம். வருவது வரட்டும் எல்லாம் ஒன்றுதான் எனக்கு.'

முதலில் தான் ஏதோ குற்றம் செய்துவிட்டோமோ என்ற நினைப்பு. பிறகு இல்லை எனத் தேர்ந்து தான் அப்படி எதுவும் செய்யவில்லை என்புதிலே ஆறுதல். இந்த 'தனிமனிதம்' பார்வைக்கு என்ன சமாதானம் சொல்லமுடியும் சோஷலிஸ் விமர்சன வழியில்? அப்புறம் செர்கி எஸனின் (1895—1925) என்ற கவியின் கவிதை ஒன்று. அவன் 1925ல் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்தான்—அதுவும் தன் பெட்டிக்கு கட்டி இருந்த கயிற்ருல். சாகும் போது மை பக்கத்தில் இல்லாததால் தன் ரத்தத்தால் எழுதின ஒரு கவிதை :

'விடைபெறுகிறேன் நண்பா, கைகூப்பாமல் வார்த்தை பேசாமல், உன்னை உழற்றவோ துக்கப்படவோ வைக்கமாட்டேன், இந்த வாழ்வில் சாவதில் புதிது எதுவும் இல்லை. உண்மையைச் சொன்ருல் வாழ்வதும் அதைவிட புதிது இல்லை.'

இந்த கவிதை என்ன நம்பிக்கைக் குரல் கொடுக்கிறது? இன்னும் லெப்னிகோவ் 1922ல் மனம் முறிந்து இறந்த இளம் புரட்சிக்கார கவியும் 'தனிமனிதம்' பார்வையில் இதுபோலவே எழுதி இருக்கிருன். செர்கி எஸெனினின் மகன் எஸனின்-வால்பின்—1925ல், அதாவது ரஷ்ய புரட்சிக்குப்பின் ஏழு ஆண்டுகள் கழித்து பிறந்தவன், 'தனிமனிதம்' நோக்கில்தான் எழுதினன் :

'என் நாட்டவரே, கானைகளே, பசுக்களே போல்ஷ்விக்கள் உங்களுக்குச் செய்திருப்பதை பார்க்க முடிகிறதா ?

ஆனல் மறுபடியும் வரும் ஒரு பயங்கர யுத்தம், வேறு காலங்கள் கதவைத்தட்டும் அப்போது!'

இப்படி 'தனிமனிதம்' பார்வையில் எழுதிய கவியை பைத்தியம் என்று அடைத்துவிட்டார்கள்! வேறு என்ன கிடைக்கும் இந்தக் கவிக்கு ? ஆக 'வருங்காலம் சோஷலிஸ்ட் யதார்த்தவாதத்திற்கே!' என்று ஜே போடும் வானமாமலைக்கு இந்த 'வாதம்' எந்த நாட்டிலிருந்து அவருக்குக்

வ. ரா. பாரதிதாசன் பற்றி

மணிக்கொடி, காந்தி முதலிய பத்திரிகைகளை அலங்கரித்துக் கொண்டிருக்கும் திருப்பழனம் ராமசாமி பத்திரிகை உலகத்தின் ஒளிப் புதல்வருள் ஒருவர். காலஞ்சென்ற பாரதியாரோடு புதுவையில் வாழ்ந்தவர். பளிச்சுப் பளிச்சென்று வெட்டு நடை எழுதுவதில் பாரதியாருக்கு அடுத்தபடி வ. ரா. தான் என்று எனக்குத் தோன்றுகிறது.

• புதுவை பாரதிதாசன் ஓர் அபூர்வமான கவிஞர். கவிதை பாடும்போது வார்த்தைகள் அவரிடம் கைகட்டி நிற்பனபோலும்! நதி ஓடுவதுபோல அவ்வளவு சுலபமாக அவரது செய்யுள்கள் இருப்பதற்குக் காரணம் ஒரு காலத்தில் அவருக்கு கவிச்சக்கரவர்த்தி பாரதியாரோடு ஏற்பட்ட உறவே என்று தோன்றுகிறது.

கிடைத்ததோ அந்த நாட்டிலேயே இந்த கதியில் இருக்க, அதை நம் புதுக்கவிகளுக்கு அளவுகோலாகக் கொள்கிறார் அவர். கடைசியாக சமீபத்திய அரசியல் நிகழ்ச்சிகளையும் வைத்து சில வார்த்தைகள். சமீபத்தில் ஜெகோஸ்லேவியாவில் ரஷ்யா நடந்து கொண்டவிதம் பற்றி ஸ்டாலின் காலாட்டிய பிரமுகர் லிட்வினுவ்வின் பேரன் (புரட்சிக்குப் பின் பல ஆண்டுகள் கழித்து பிறந்தவன்) நகர நடுமத்தியில் வேறு சிலருடன் நின்று ரஷ்யச் செயலை கண்டித்து கோஷமிட்டானே. எப்படி 'தனிமனிதம்' அங்கே இவ்வளவு காலத்துக்குப் பின், லக்ஷிய வாழ்க்கை அமைப்பு, பண்பாட்டு சாதனை என்று பெருமைப்படும் ஒரு நாட்டில் இப்படி உசுப்பி எழுந்தது? செகோஸ்லோவேகியாவில் ஜான் பாலக் முதல் இருபது வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் பலர் சோவியத் ஆக்ரமிப்பால் சுதந்திரம் பறிபோனது கண்டு தீக்குளித்திருக்கிறார்களே எப்படி 'தனிமனிதம்' முறண்டு எழுந்தது? ஐம்பது வருஷ சோஷலிஸ்ட் சமுதாய வாழ்வும், சோஷலிஸ்ட் யதார்த்த இலக்கியமும் என்ன ஆயிற்று? எனவே ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும் இந்த கொள்கையாளர்கள். அதைப்புக்கு (ரியாக்ஷன்) மறு அதைப்பு ஏற்படத்தான் செய்யும் காலப்போக்கில் என்பதையும் தனக்கு ஏற்பட்ட அதைப்பு தான் இறுதி நிலையானது என்று முடிவு கட்டிக் கொண்டுவிடக் கூடாது என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டால் போதும். எனவே இலக்கியப் படைப்பு என்றைக்கும் தனிமனிதப் போக்கானது, தனிமனிதம் தான் வாழ்வுக்கு அடிப்படை சக்தி, அதை வைத்துத்தான் சமூக, சமுதாய பலம் வளரும், எனவே புதுக் கவிதைக்காரர்களுக்கு தாக்கீது போடுவது எவ்வளவு அர்த்தமற்றது, பயனற்றது, பேலியானது என்பதையும் அவர்கள் உணரவேண்டும்.

'தாமரை'யில் வரும் வியட்நாம் பாட்டுக்கள் எல்லாம், ஒப்பாரிப்பாட்டுக்கள் எல்லாம் ஆரோக்கியமானதாக படுகிறதா சோஷலிஸ்ட் விமர்சகர்களுக்கு? வியட்நாம் சம்பந்தமாக அமெரிக்காவை சாடும் பாட்டுகளுடன் செகோஸ்லோவேகியா சம்பந்தமாக ரஷ்யாவை சாடும் பாட்டுக்களும் வரவில்லையே. ஃகேரோவால் குழந்தைகள் பால் இல்லாமல் தவிக்க நேர்ந்ததை பற்றியும் இந்த சோஷலிஸ்ட் யதார்த்த படைப்பு, விமர்சனப் பார்வை உள்ளவர்கள் பார்க்கக் கூசுகையில் புதுக் கவிதைக்காரர்களைப் பற்றி பேச இவர்களுக்கு வாயே இல்லையே. இவர்கள் எதுக்கு பயந்து சாகும் பலவீன மனிதர்களோ தெரியவில்லை. பிறரை ஏமாற்றுவதைப் பற்றிக்கூட நான் பெரிசாக கருதவில்லை, தங்களையே ஏமாற்றிக் கொள்வதை விட்டு, முதலில் தங்களை புதுப்பித்துக் கொள்ளட்டும் இந்தப் பார்வையாளர்கள்—மந்தை மனப்பான்மையை உதறி விட்டு. புதுக்கவிதைக்காரர்கள் ஆரோக்கியம் புரியும் அப்போது.

மூன்று கவிதைகள்

என்னதிது?

ஹரி சீனிவாசன்

என்னதிது ஏதென்று கேட்காதே
என்னதிது ஏதென்று கேட்டக்கால்
சொன்ன முட்டையிட்ட வாத்தின் கதைதான்
கிழித்துப் பார்த்தால்
கருப்பையும் சதையும்தான் கிடைக்கும்
ஆ, என்னதிது??

காமிரா

சி. சு. செல்லப்பா

போட்டோ எடுக்கையில்
என்னையே பார்த்தார்கள்
போட்டோவை காட்டுகையில்
தன்னையே பார்த்தார்கள்

கலாசாரம்

தி. சோ. வேணுகோபாலன்

பிள்ளைக் கிறுக்கலை வளர்ச்சியை,
வாலிபக் கனவை ஆவேசத்தை,
நடுவயது நம்பிக்கை எதிர்பார்ப்பை
சிந்தனையை சாதனையை
எக்களிப்பை ஏமாற்றத்தை
வெற்றியை வீழ்ச்சியை
இன்பத்தை மனக் கசப்பை,
முதுமையின் இழப்புச் சோகத்தை
சென்றதின் சுமையை மென்றசை போட்டு
அனுபவப் பாலாக்கிச் சுரக்கும் அறிவுரையை
விதவிதமாய்த் தாங்கி
சிலரில் சிலர் புரிந்து
கொள்ள
பலப்பலபேர் ஒதுக்கித்
தள்ள
குப்பையாய்
சுருண்டு செத்த
காகிதக் குவியல்

அமெரிக்க கவிதை

செத்த பன்றி

ரிச்சர்ட் எபர்ஹார்ட்

ஜூனில் பொன் வயல்கள் நடுவில்
செத்த பன்றி ஒன்றைக் கண்டேன்
செத்துக் கிடந்தது அது ஆனாலும்
என் புலன்களை அதிரச் செய்த்து
மனம் மெலிவு மீறி எழுந்தது.
கடும் கோடையில் அங்கே கீழாக
அதன் வடிவம் பொருளற்று மாற
இயற்கை செய்யும் கொடுமை கண்டு
என் புலன்கள் குழம்பி மழுங்கின
அதோட புழுக்களின் பலத்தையும்
அதன் புழுங்கும் உடல் கலத்தையும்
அருவருப்பும் விநோத அன்பும் கலக்க
நுணுகிப்பார்த்து கோபத்தடிகொண்டு
குத்தினேன்.

ஜுரம் எழும்பி ஜுவாலை ஆனது.
வீர்யம் வானை அளவிட்டது.
சூர்யனில் அளவற்ற சக்தி,
என் உடலினூடே நிழலோட்ட இருண்ட
தீமை நன்மை எதுவும் [நடுக்கம்
செய்யவில்லை என் கம்பும்.
பகலில் மவுனமாய் நின்றிருந்தேன்
முன்போல அதையே பார்த்தவாறு.
அடக்கிக்கவும் அமைதியாய் இருக்கவும்
ரத்தத் துடிப்பை தணிக்கவும் முயன்று
அறிவுக்கு என் வணக்கம் காட்டினேன்.
முழங்கால் மடங்க கீழே குனிந்து
சிதைவுக்கு மகிழ்ந்து பிரார்த்தனை செய்தேன்.
சென்று, பனிகாலம் திரும்பி வந்து
கண் கூர்ந்து பார்த்த போது
பன்றியின் ரத்தம் வற்றிப் போய்
புழுங்கிய எலும்புக் கூடுதான் மீதம்.
ஆண்டுதான் பொருள் இழந்து போச்சு.
அறிவுத்தளைப்பட்ட நான்
அன்பும் அருவருப்பும் இழந்தேன்
விவேகச் சுவர் வேலிக்குள் அடைபட்டு...
மறுகோடை வயல்களை தன் வசமாக்கி
ஒளியும் வாழ்வுமாய் தாக்காக்கியது.
அந்த இடம் பார்க்க நேரிடவும்
அங்கே கிடந்தது கொஞ்ச ரோமம்.
சூர்ய ஒளியில் வெளிறின எலும்புகள்
சிற்ப வேலைகள் போல அழகாக.
க்ஷேத்திர கணிகன் போல் கவனித்தேன்
மிலாறு ஒடித்து குச்சி ஆக்கினேன்.
இன்னொரு ஆண்டு மூன்று ஆச்சு
பன்றியின் சின்னம் எதுவும் இல்லை.
உழற்றும் கோடையில் நின்றிருந்தேன்.
வெதும்பிய நெஞ்சை என் கை கவ்வியது
சீனுவையும் கிரீஸையும்
பாசறை இருந்த அலெக்ஸாண்டரையும்
கோட்டை இருந்த மாண்டெயினையும்
புலம்பிக் கதறிய செயிண்ட் தெரிஸாவையும்
பற்றி அது நினைத்து நினைத்துப் பார்த்தது.

பிரேஜில் கவிதை

ஆறும் பாம்பும்

ஜோர்ஜி டி லிமா

[தமிழாக்கம்: கி. அ சச்சிதானந்தம்.]

ஆறும் பாம்பும் மர்மமானது என்மகனே
அந்த மலை உச்சியில்
ஊழியின் இருவட்டங்கள் இருந்தன
ஒருவட்டம் பாம்பாக
மற்றொரு வட்டம் ஆறாக இருந்தன
இரண்டுமே கீழ்நோக்கி ஓடின
இரண்டுமே மனிதனைத் தேடிக்கொண்டு
வந்தன
ஒன்று அவனை தூய்மையாக்க
மற்றொன்று அவனை நஞ்சாக்க.
கீழே அங்கே இரண்டுமே
சாதாரண மனிதனை கண்டன.
ஒன்று அவனுக்கு மீன் கொடுத்தது உணவு
அளித்தது
மற்றொன்று அவனுக்கு போதை அளிக்கும்
அந்தக் கனி கொடுத்தது

ஆறும் பாம்பும் மர்மமானது, என் மகனே
மேகங்களிலிருந்து அவை கீழ்நோக்கி குதித்தன
மனிதனின் இரு விழிகளைப்போல்
அந்த இரண்டுமே பூமியின்மேல் நெளிகின்றன
எதையாவது தன் வழிகாட்டியாய் அவனே
தேர்ந்து
எடுத்துக் கொள்ளும்படியாக.

ஆறும் பாம்பும் மர்மமானது, என் மகனே
பொருட்களின் தொடக்கத்திலிருந்து அவைகள்
வருகின்றன
ஒவ்வொன்றின் முடிவை நோக்கி அவைகள்
ஓடுகின்றன
சில வேளைகளில்
ஆற்று நீரில் நீ கருநிற பாம்பை பார்ப்பாய்.
எல்லா விஷயங்களுமே சாதாரணமானவை
என் மகனே
ஆனால் அவைகள் குழப்பமாகி விடுகின்றன.
எந்த ஆறு உன்னை குளிப்பாட்டினதோ
அதுவே உன்னை மூழ்கடித்துவிடும்
ஏனெனில் ஆற்றின் தோற்றத்தின் கீழே
பாம்பு நழுவிச் செல்கிறது.

ஆறும் பாம்பும் மர்மமானது, என் மகனே
தொடக்கத்தில் அவைகள் இருவட்டங்களாக
இருந்தன
அங்கிருந்து இரண்டும் சுருள்பிரிந்து வந்தன.

அனுபவி

எஸ். கிருஷ்ணமூர்த்தி

(தேசிய காந்தன்)

படம் புதுசு, அழகானது
காலண்டர் தான் எங்கே மாட்ட?
சுவரில் மாட்டினால் புகை பிடிக்கும்
அழுக்கு ஏறும், பூச்சியும் அரிக்கும்;
ஒட்டினால் எடுக்க முடியாது, வீணாகும்
படம் புதுசு அழகானது.

படம் புதுசு, அழகானது
வெளியே மாட்டினால் பார்த்து ரசிக்கலாம்
ஆனால், பார்த்தவர்கள் கேட்பார்கள்
வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள்
படம் புதுசு, அழகானது.

படம் புதுசு அழகானது,
பெட்டியில் வைத்து பத்திரப்படுத்தினால்?
பீரோவில் வைத்துப் பூட்டி விட்டால்?
பத்திரமாக என்றைக்கும் இருக்கும்
வேண்டும் போது எடுத்துப் பார்த்து ரசிக்கலாம்.
சுருட்டிப் பெட்டிக்குள் வைத்து விட்டேன்
படம் புதுசு அழகானது.

படம் புதுசு அழகானது
பத்திரமாய் சுருட்டி பெட்டியில் வைத்ததை
ஆண்டு முடியவும் பிரித்துப் பார்த்தேன்
ஐயோ எதுக்கு பத்திரப்படுத்தினேன்!
வீட்டுக்கு அழகாக மாட்டவும் இல்லை:
கண்குளிர பார்த்து ரசிக்கவும் இல்லை,
யாருக்கும் கொடுத்த திருப்தியும் இல்லை
படம் பழசு, அழுக்கானது
சல்லடைக்கண்ணாய் பூச்சி அரிச்சுப் போச்சு.

மிருகக்கால் மிதி

துரை சீனிசாமி

ஆசைக் காற்றுக்கு அலையும் ஓலைகள்,

ஓசையின்றி உள்ளடக்கும் பெருமூச்சால்
உலர்ந்து உளுத்திட்ட சக்கை உடல்.

இதயம் இழந்து
நிதானமிலா வெறியோடு
வானம் சேர்ந்திடுவோம்.

நிலா முத்தம் கிடைக்கும் என்
தினம் ஏங்கும் தென்னை மரம்.

புத்தப் புல், ஏசு மரம்
காந்தி தென்றலால் தினம் சிலிர்க்கும்
அன்புச்சுனை மலர்கள்
காட்டு எருமைகளின்
மிருகக்கால் மிதியில் அன்றோ!

தீர்ப்பு

இரா. பன்னீர்செல்வம்

இறைவன் : இது ஒரு பழம்
நீ இதை உண்ணாதே
ஏன்
மானுடம் அடைவாய்

சாத்தான் : இது ஒரு பழம்
நீ இதை உண்
ஏன்
மானுடம் அடைவாய்

மானுடன் : மானுடம் அடைந்தேன்
சாத்தான் என் தலைவன்

ஜூலை ஏட்டில்

புதுக்கவிதையின் உருவம்

பற்றிய

கட்டுரை

வருகிறது

கதை கதையாம் காரணமாம்

சு. சங்கரசுப்ரமண்யன்

சாதாரணமாக கதை எழுதத் தெரிந்தவர்களுக்கு அவ்வளவாக கதை சொல்லத் தெரியாது. பொதுவாகவே எழுத்தாளனுக்கு பேச வராது என்பதைப்போன்ற நியதி என்று இதைச் சொல்லாம். 'பவர்'ஸ்தாபனம் 'கோடை வகுப்புக்கள்' என்று ஏற்பாடுசெய்து முதலில் சிறுகதையைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பொது முன்னுரை வழங்க பி. எஸ். ராமையாவை அழைத்தபோது மேற்படி விதிக்கு அழுத்தமான விலக்கு நிருபணமாகும் என்று யாரும் எதிர் பார்த்திருக்கமாட்டார்கள்.

மார்ச் மாதம் ஒன்பதாம் தேதி நடைபெற்ற 'சிறுகதை' அறிமுகக் கூட்டத்துக்கு வந்திருந்த புதிய தலைமுறையினரை—ஆர்வமுள்ள இளம் வாசகர்களை—கண்டபோது ராமையாவுக்கு ஏற்பட்ட மாதிரி இலக்கியவாதி அனைவருக்குமே புது உற்சாகம் துளிர்க்கத்தான் செய்யும். வரவேற்றுப் பேசிய சி. சு. செல்லப்பா ராமையாவின் தகுதிக்கு மூன்று குறிப்புக்கள் தந்தார். கிட்டத்தட்ட முந்நூறு கதைகள் எழுதியவர், வாழ்வில் தனிப்பார்வை செலுத்தியவர், வாழ்க்கையின் சிக்கல்களை எழுத்தில் வடித்து இலக்கிய சாதனை காட்டியவர் என்ற மூன்று சிறப்புக்களும் அன்றைய பேச்சில் முத்திரையாகத் தெரிக்கும்படி ராமையாவின் அனுபவ உரை அமைந்திருந்தது 'வகுப்புக்கள்' என்ற பெயரைப் போடாவிட்டால் எழுத்தாளர்களும் பலர் வந்திருக்கக்கூடும்; அவர்களுக்கு பழைய எழுத்தாளர் ஒருவர் இலக்கிய அனுபவங்களை அவர் வாய்மொழியாகக் கேட்பதில் உள்ள சுவை கிட்டியிருக்கும்.

'மனசில் எழும் சிந்தனைகளைக் கோர்வைப் படுத்தி, தொகுத்து, தொடர்புபடுத்தி சொல்வது' இலக்கியத்தின் வேலை என்றும், 'மனிதன் மனிதனான காலத்திலிருந்து அவனது வரலாற்றைப் பதிவு செய்யும் இயக்கம்' இலக்கியம் என்றும் தெளிவான கருத்துக்களை முன்வைத்துப் பேசத் தொடங்கினார் ராமையா. எடுத்த எடுப்பிலேயே இன்னொரு உண்மையையும் ஒளிக்காமல் சொன்னார். அன்று தான் நடத்திய 'மணிக்கொடி', கதைப் பத்திரிகை தான் என்றும், சிறுகதைப் பத்திரிகை அல்ல என்றும், 'உருவம்' முதலிய சங்கதிகள் தனக்குத் தெரியாது என்றும், 'சிறுகதை என்கிற புதியஉருவம்' என்று பேசுவதெல்லாம் இப்போது ஏற்பட்ட 'குழப்பம்' என்றும் அழுத்தமாகவே சொன்னார். கு. ப. ரா., புதுமைப்பித்தன் போன்றவர்கள் எங்கெங்கிருந்தோ எழுதிப்போட்ட கதைகளை 'உருவப்பிரக்ஞை' இல்லாமலே ராமையா 'மணிக்கொடி'யில் பிரசுரித்ததை அறியும் போது மறுமலர்ச்சிக்காலம் என்று இன்று நாம் பெருமையாகக் குறிப்பிடுகிற காலகட்டம் உருவான விந்தையை நினைத்து வியக்கிறோம்.

இலக்கியத்தின் பயன்பற்றி ராமையா திட்டமான கருத்துகொண்டிருக்கிறார் அறிவு, உள்ளத்தில் எழும் உணர்ச்சி, இரண்டையும் ஒன்றுபடுத்தும் மனம், மூன்றுக்கும் ஆதாரமான ஆத்மா—இந்த நாலுக்கும் சேர்த்து ஒளிகொடுப்பதே இலக்கியத்தின் வேலை. தமிழ்நாட்டில், பாரதநாட்டில், மேல்நாட்டில்—எங்கும் எந்தக் காலத்திலும் மனிதத் தன்மையை, மனிதப் பண்பை, மனிதனின் சிந்தனையை வளர்ப்பதே இலக்கியத்தின் பயன். தங்கம், வைரம்போல மனித மனமும் பாசி படியக்கூடியது. அந்தப் பாசியை விலக்குவது இலக்கியத்தின் வேலை ரோமானியர்கள் காலம், களப்பிரர்காலம் என்று காலத்தை வைத்துப்பார்த்தாலும், திருக்குறள், பைபிள் என்று நூலை வைத்துப் பார்த்தாலும் இந்த அடிப்படை உண்மை மாறுது. இப்படி நறுக்குத் தெரித்தாற்போல சூத்திரம் மொழிந்த ராமையா உள்ளம், அறிவு, மனம், ஆத்மா என்கிற அம்சங்களைப் பிரதிபலிக்கும் சுவையான கதைகளையும் சொன்னார்.

மனிதனுடைய சிந்தனையும், கற்பனையும் விரிந்தும், பெருகிய அனுபவத்தோடு இணையும் போது இலக்கியம் பிறக்கிறது. ஆசிரியரின் மனவளர்ச்சியைப் பிரதிபலிக்கும் இலக்கியத்தில் கலை அழகு பொருந்திக்கிடக்கும். திரிலோகாதிபதி ராவணன் பெண்ணிடம் கெஞ்சி நின்ற பரிதாபத்தையும், நல்லவர்களைத் திண்டாடவிட்ட துரியோதனின் அகங்காரத்தையும் உயர்ந்த பட்ச உணர்ச்சி எல்லைக்கு இட்டுச் செல்லும் போது பேரிலக்கியம் பிறக்கிறது. அந்தக் கதாபாத்திரங்களின் மனோபாவத்துடன் ஒன்றும் பக்குவம் வாசகருக்கு ஏற்படவேண்டும். இந்த உண்மையை விளக்கவந்த ராமையா, நம்முடைய இயல்பிலே ஒட்டி இருக்கிற அழகுணர்ச்சியைக் காணும் வாய்ப்பு மேல்நாட்டு இலக்கிய ரசிப்பினால் பாதிக்கப்படக்கூடாது என்பதையும் வலியுறுத்த தவறவில்லை.

பொதுவாக இலக்கியத்தின், குறிப்பாக சிறுகதையின் தன்மைகளையும் அம்சங்களையும் பல்வேறு உதாரணங்கள் மூலமும் தன்னுடைய கதைகளின் மூலமும் ராமையா உணர்த்திய பாணி தனி உத்தியாகவே அமைந்தது. சில

இடங்களில் நின்று நிதானித்து, பொருத்தமான சொற்களைப் போட்டு தன் கருத்தை வலியுறுத்திய செம்மை, சிறுகதையின் முதல்வகுப்பு நல்ல ஆரம்பம் ஏற்றதைக் காட்டியது. உதாரணமாக, சிறுகதைக்கு வித்தான சரக்கைக்குறிப்பிட அவர் கையாண்ட 'மனித எத்துக்கள்' என்னும் சொற்றொடர் பொருள் பொதிந்தது. 'மனிதனுடைய புன்மைகளையும் புலமைகளையும் பொலிவுபடுத்திக் கொடுப்பதா சிறுகதை' என்று கேட்டு 'அவைகளைப் பார்த்து நொந்து சீர்படுத்துவதே சிறுகதை' என்கிற கருத்தையும் வெளியிட்டார்.

'உள்ளது உள்ளபடி எழுதவேண்டும்', 'இருப்பதை அழகுபடுத்தி எழுதவேண்டும்' என்று சர்ச்சைக்குரிய இருகட்சிகள் நெடுங்காலமாக இருப்பதைச் சுட்டிக்காட்டினார் ராமையா. 'கலை கலைக்காகவே' என்ற கூற்றைப் பற்றித் தனக்குக் கவலை இல்லை என்று அவர் அழுத்தமாகவே கூறினார். இந்த இடத்தில் மீண்டும் 'மணிக்கொடி' நாட்களை நினைவு கூர்ந்து எழுத்துச் சூழ்நிலையை விளக்க முற்பட்டார். அரசியல் கொந்தளிப்பின் வெப்பத்தில் நல்ல இலக்கியம் படைக்கும் துடிப்பு அன்றைய எழுத்தாளனுக்கு இருந்ததைப்போல, இன்றைய களேபரங்களை சித்தரிக்கும் ஆர்வம் இன்று தேவைப்படுவதை உணர்த்தினார். கிருஷ்ணனின் விஸ்வரூபத்தை, துரியோதனன் போல மாயை என்று ஒதுக்காமல், அனுபவிக்கும் திறன் வேண்டுவதுபோல, இன்றைய அழகுகளை அனுபவித்து வெளிப்படுத்தும் வேகம் பெருகவேண்டிய அவசியத்தை அவர் பேச்சு வெகுவாகக் கோடிட்டுக் காட்டியது.

சிறுகதை படித்து ஏற்படும் வெறும் மகிழ்ச்சி போதுமா என்கிற கேள்விக்கு அடுத்தபடியாக நகர்ந்தார் ராமையா. 'பாத்திரங்கள் மூலம் மனித குறைபாடுகளைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டவேண்டும்' என்பது அவருடைய கட்சி. 'அசிங்கத்தைப் போடுவதா இலக்கிய வெற்றி' என்று உரக்கவே கேட்ட அவர், 'இம்மாதிரிப் போக்கினால் தமிழ்நாடு புதைந்துபோகும்' என்று காரமாகவே குறிப்பிட்டார். இன்று எல்லாமே வயிற்றுப் பிழைப்போடு பிணைந்து, எதையும் எழுதலாம் என்கிற நிலைமை வந்தாலும், அழகுகளைப் படைக்கமுடியும், படைக்கவேண்டும் என்பது அவருடைய வாதம். நாய், நரிகளாக ஆக்காமல் மனிதனை மகாத்மாவாக்க இலக்கியம் எழுதவேண்டும் என்பது அவருடைய திடமான, ஆணி அடித்த கருத்தாகும்.

இந்தக் கருத்தை ஒட்டி ஜெயகாந்தன் கதைகளும் ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்' நாவலும் வெளிப்படையாகப் பேசப்பட்டன. 'இயற்கையே பெண்ணுக்கு வேலிகட்டியிருக்கிறது' என்கிற டால்ஸ்டாய் கருத்து இன்றைய விஞ்ஞான யுகத்தில் மாறிப்போய், மனிதவாழ்வும், சமூகமும், பெண்குலமும் புதிய பிரச்னை எதிர்நோக்கி இருக்கிற வேளையில் மேம்பாட்டுக்கே இலக்கியம் தேவை என்றும், விஞ்ஞானம் தோற்றுவிக்கும் மனிதகுலச் சரிவுக்குமாற்று இலக்கியத்தின் கையில் இருக்கிறது என்றும் ராமையா குறிப்பிட்டார். குற்றம்செய்து மனித மனம் மரத்துப்போனதை இலக்கியமாக்கக் கூடாது என்பதை மீண்டும் மீண்டும் தெளிவாக்கினார் அவர்.

அவருடைய உரையின் இறுதிப்பகுதி அவருடைய கதைகள் பிறந்த சொந்த அனுபவ வெளியீடாக அமைந்தது. 'துன்பத்தைக் காசாக்கிய' அவருடைய வித்தை கேட்பதற்குப் பிரமிப்பையும் புது ஊக்கத்தையும் அளிக்க வல்லது. 'கற்பனை, சொல்லாட்சி, தன்னம்பிக்கை மூன்றையும் சேர்த்துப் பின்னுவதே கதை' என்று அவர் சுலபமாகச் சொல்லிவிட்டார். அவருக்கு இயல்பாகவே மூன்றும் இணைந்தது தமிழ்ச் சிறுகதைக்கு லாபமாகப் போயிற்று. 'சந்தர்ப்பம் மனிதனைக் கலைஞனாக்குகிறது' என்கிற மொழியோடு 'சிலர் சந்தர்ப்ப வசத்தால் கலைஞராகிறார்கள்' என்கிற மொழியையும் சேர்த்துப் பார்க்கவேண்டும். ராமையாவைப் பொறுத்தமட்டில் வாழ்வில் அவர் பெற்றிருக்கும் அனுபவங்கள் கலை உருவம் பெற்று நல்ல கதைகளாக—சிறுகதைகளாகவும்—மலர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். அவரே குறிப்பிட்டபடி விமர்சன வீச்சுக்குக் கட்டுப்படாமல் அவர் எழுதிக் 'குவித்திருக்கிறார்.' சிறுகதையில் உருவம், உத்திபோல உள்ளடக்கத்துக்கும் ஓர் இடம் உண்டு. அந்த அம்சத்தில் ராமையா தனித்து உயர்ந்து நிற்பதை எந்த விமர்சகரும் ஒப்புக்கொள்வார். அன்றைய அவரது பேச்சிலும் அவருடைய அழுத்தம் இந்த அம்சத்தில் தூக்கலாக விழுந்ததை உணரமுடிந்தது.

அவருடைய வர்ணனைகளோடு முடிப்பதே நல்ல முத்தாய்ப்பாக அமையும். சிறுகதையை 'ஆகாசவாணம்' என்று குறிப்பிட்டார் ''இருட்டில் ஒளி சிந்தும், பொறிபறக்கும், மேலேபோய் வெடிக்கும் ஆகாசவாணம். வாழ்வின் இருளில் ஒளிசிந்தி, மேலேபற்றி சிந்தனையை வெடிக்கச் செய்யும் சிறுகதை ஒரு வித்யாசம். ஆகாசவாணத்தில் மிஞ்சுவது கரிக்குச்சி. சிறுகதையில் அதுகூடாது.'' வாழ்வையும் இலக்கியத்தையும் அவர் ஊடுருவிப்பார்த்த அழகு இதில் தெரிகிறது.

இலக்கியம் படைப்பதை நீரில் முங்குவதற்கும் ஒப்பிட்டார் ராமையா. பலத்த ஓசை எழுப்பி நீரில் நீச்சலடித்து நுரை கொப்பளிக்க வைப்பது, சலனம் இல்லாமல் ஆழமூழ்கி முத்தெடுப்பது—இதில் எதுவேண்டும் என்கிற கேள்வி அவருடையது. இலக்கியப் படைப்பாளிகள், வாசகர்கள் மட்டுமின்றி பத்திரிகையாளர்கள், பிரசுரகர்த்தர்களும் பதில் தேடிக்கொள்வதில் தமிழ் இலக்கியத்தின் வருங்காலம் நோக்கி நிற்கிறது.

EZHUTTHU Edited and Published by C.S.Chellappa, from 19-A, Pilliar Koil St., Madras-5
Printed by A. Rajaram for Ramalakshmi Press, 97, Big Street, Triplicane Madras-5.

12 'எழுத்து'களும் புத்தகங்களும்

இலக்கிய அன்பர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு!

எழுத்து இலக்கிய ஏடு சென்ற 10 ஆண்டுகளாக கவிதை, விமர்சனம், சிறுகதை, தத்துவக் கட்டுரை ஆகிய துறைகளில் தரமான எழுத்துக்களை மாதம் தோறும் வெளியிட்டு தமிழில் தன் ரகத்தில் தனியொரு முயற்சி என்ற பெயரை நிலை நாட்டிக்கொண்டிருக்கிறது.

எழுத்து 11-ம் ஆண்டு முதல் காலாண்டு ஏடாக ஜனவரி (தை) ஏப்ரல் (சித்திரை) ஜூலை (ஆடி) அக்டோபர் (ஐப்பசி) ஆகிய மாதங்களில் வெளிவருகிறது.

எழுத்துக்கு தாங்கள் சந்தாதாரர் ஆக வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

எழுத்து அன்பளிப்புதிட்டம் கீழே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

அன்பளிப்பாக

மூன்று ஆண்டு சந்தா

ரூ 16-00 (ரூ 15+1 தபால் செலவுக்கு) அனுப்புகிறவர்களுக்கு அடியில் காணும் புத்தகப் பட்டியலிலிருந்து ரூ 3-50 முதல் 4-25 வரை விலையுள்ள புத்தகங்கள்.

இரண்டு ஆண்டு சந்தா

ரூ 11-00 (10+1) அனுப்புவோருக்கு ரூ 2 முதல் 2-50 வரை விலை உள்ள புத்தகங்கள்.

ஒரு ஆண்டு சந்தா

ரூ 6-00 (ரூ 5+1) அனுப்புவோருக்கு ரூ 1 முதல் 1-25 வரை உள்ள புத்தகங்கள்

கிடைக்கும்

புத்தக பட்டியல்

1.	சத்யாக்ரகி (சிறுகதைகள்) சி. சு. செல்லப்பா	ரூ 4-00
2-	ஆண் சிங்கம் (சிறுகதைகள்) வல்லிக்கண்ணன்	ரூ 4-00
3.	அகல்யை (ஓரங்க நாடகங்கள்) கு. ப. ராஜகோபாலன்	ரூ 4-00
4.	சில விஷயங்கள் (கட்டுரைகள்) சிட்டி	ரூ 3-00
5.	வெள்ளை (சிறுகதைகள்) சி. சு. செல்லப்பா	ரூ 3-00
6.	புதிய பாதை (நாடகம்) கோபால் சாமிநாதன்	ரூ 3-00
7.	கனவுப் பறவை (சிறுகதைகள்) கர்ணன்	ரூ 2-50
8.	வழித்துணை (கவிதைகள்) ந. பிச்சமூர்த்தி	ரூ 2-00
9.	கோடை வயல் (கவிதைகள்) தி.சோ. வேணுகோபாலன்	ரூ 1-25
10.	வாடிவாசல் (நாவல்) சி. சு. செல்லப்பா	ரூ 1-00

நேரில் பெறுபவர்களுக்கு சந்தா தொகைக்கே கிடைக்கும். வி. பி. பி. உண்டு. போஸ்டல் ஆடர் அனுப்பலாம். வெளியூர் செக்குகளுக்கு 50 பைசா கிளியரன்ஸ் கட்டணம் சேர்த்து அனுப்ப வேண்டும்.

முகவரி :

எழுத்து
19-A, பிள்ளையார் கோவில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

எழுத்து ஆசிரியருக்கு,

நான் எழுத்துக்கு.................. ஆண்டு சந்தாவுக்காக ரூ.................. அனுப்பி இருக்கிறேன். 'எழுத்து'களை அனுப்பி வைப்பதுடன் அன்பளிப்பாக பின் குறிப்பிடும் புத்தகத்தை / புத்தகங்களை அனுப்பி வைக்கவும்.

1.

2.

தங்கள்

முகவரி :

பெயர் :

தெரு :

ஊர் :

ஜில்லா :